எகிப்திலிருந்து கானான்

★

★

★

Rev. K. J. ஆபிரகாம்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவித புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வழியில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கர்த்தரின் சேனை

மேற்கண்ட பெயரில்

ஒரு பத்திரிக்கை மாதம் ஒரு முறை

இலவசமாய் வெளியிடப்படுகிறது.

அதிலே

BIBLE STUDY

கொடுக்கப்படுகிறது.

ஆழமான சத்தியங்கள் பிரசங்கங்களாக அச்சிடப்படுகின்றன
தேவையானோர் புத்தகத்தின் பின்புறமுள்ள
முகவரிக்கு எழுதவும்.

நூலின் உள்ளே

ஒருவித ஜாதி-முகவுரை

பாகம் I எகிப்தில் இஸ்ரவேலர்

அத்தியாயம்		பக்கம்
1	தேவனுடைய தெரிந்து கொள்ளுதலின் நோக்கம்	1
2	மூன்றும் நான்காம் தலைமுறை மட்டும்	3
3	நல்ல நாடாகிய ராமசேஸ்	7
4	நிழலும் பொருளும்	8
5	யோசேப்பை அறியாத பார்வோன்	9
6	எகிப்தில் இஸ்ரவேலர்	11
7	மோசேயும் இயேசுவும்	14
8	பஸ்காவும் இயேசுவின் கல்வாரி மரணமும்	17
9	எகிப்தை எதற்கு விட்டார்கள்	31
10	சுற்றிப் போகப் பண்ணுகிறார்	35

பாகம் II வனாந்திரத்தில் இஸ்ரவேலர்

அத்தியாயம்		பக்கம்
1	வனாந்திர ஜீவியம்	39
2	வானத்திலிருந்து ஆகாரம்	42
3	கன்மலையின் தண்ணீர்	44
4	இஸ்ரவேலர்க்கும் அமலேக்கியர்க்கும் உள்ள யுத்தம்	56
5	வனாந்திரத்தில் ஒரு நீதி மன்றம்	58
6	தேவ ஜனங்களுக்குரிய பிரமாணங்களும் சட்டங்களும்	61
7	ஜனங்களின் விருப்பத்திற்கேற்ற ஊழியக்காரன்	63
8	தங்கத்தால் செய்யப்பட்ட கன்றுக்குட்டி	65
9	உடைக்கப்பட்ட கற்பலகை	66
10	கடிந்து கொள்ளப்பட்ட ஊழியக்காரன்	67

Rs. 5

அத்தியாயம் பக்கம்

11	பட்டயம் தரித்துக் கொண்டவர்களாகிய லேவியர்	68
12	வனாந்திரப் பிரயாணமும் ஆபரணமும்	69
13	யார் தலைவர்	71
14	ஆரோனுடைய மரணம்	74
15	வெண்கல சர்ப்பம்	76
16	பிலேயாம்	78
17	உடன்படிக்கைப் பெட்டியும் வனாந்திர ஜீவியமும்	83
18	எழுபது மூப்பர்கள்	83
19	கானானிலிருந்து ஒரு திராட்சைக்குலை	84
20	மோசேயின் மரணம்	86

பாகம் III கானானில் இஸ்ரவேலர்

அத்தியாயம் பக்கம்

1	மோசேயின் மரணத்திற்குப் பின்	87
2	யோசுவா ஜனங்களுக்குத் தலைவர்	87
3	உடன்படிக்கைப் பெட்டி	88
4	யோர்தான்	90
5	எரிகோ	92
6	வாக்குத்தத்தம்	94
7	ஏழு ஜாதிகள்	96
	தேவன் நம்முடைய பிதா—முடிவுரை	

ஒருவித ஜாதி (எஸ்தர் 3:8)

A CERTAIN PEOPLE

ஒரு சமயம் பிரஷ்ஷியாவின் சக்கரவர்த்தி ஃபிரடரிக்,
''பைபிள் சத்தியமானது என்பதற்கு ஒரே வார்த்தையில் பதில் தர
முடியுமா?'' என்று அவனுடைய சேனைத் தலைவனைக் கேட்ட
போது, அவன் ''யூதன்'' என்று உடனே சொன்னான்.

இயேசுவைத் தங்கள் மேசியாவாக ஏற்றுக் கொள்ளாமல்
அவரைத் தள்ளி விட்டுச் சிலுவையிலறையும்படி ஒப்புக் கொடுத்த
போது. தேவனுடைய கடுமையான நியாயத் தீர்ப்பு யூதர்மேல்
வந்தது. கி.பி, 70ல் தங்களுக்கென்று ஒரு நாடில்லாதபடி உல
கெங்கும் எல்லா ராஜ்யங்களிலும் எல்லா பாஷைக்காரர், ஜாதிக்
காரர், மதஸ்தர் மத்தியில் ரோம் அரசால் சிதறடிக்கப்பட்டார்கள்.
கடந்த 2000 வருஷங்களும் அவர்கள் நிலை மிகப் பரிதாபமாகவே
இருந்தது. ஆனாலும் இந்த விசேஷித்த ஜாதியாரைப்பற்றிய ஆச்
சரியப்படத்தக்க ஒரு காரியமுண்டு. இத்தனை காலமானாலும்
எத்தனையோ சூழ்நிலைகளிலும் அவர்கள் தங்கள் தனித்தன்மையை
(The Jewish Character as a race) ஒரு போதும் இழந்து
போகவேயில்லை. Throughout Past Ceuturis the Jews were
always a nation though they had been scattered among all
nations on earth. இதையே பிலேயாம் மூலமாகப் பரிசுத்த ஆவி
யானவர் 3500 வருஷங்களுக்கு முன்பே தீர்க்கதரிசனமாக உரைத்
தார். ''அந்த ஜனங்கள் ஜாதிகளோடு கலவாமல் தனியே வாசமா
யிருப்பார்கள்'' (எண். 23:9)—They shall dwell alone. and
shall not be reckoned among the nations – Eng. சரித்திர

ஆசிரியர்கள் 20ம் நூற்றாண்டில் சொன்ன உண்மையை தேவன்
எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே சொல்லி வைத்தார். யூதர்கள்
இருந்தது மற்ற ஜாதியாரோடு. ஆனால் தனியே வாசமாயிருந்
தார்கள். யூதர்கள் வாழ்ந்தது மற்ற தேசங்களில், ஆனால் அந்தந்த
தேசத்தார் போல அவர்கள் எண்ணப்படாமல் தனி ஒரு தேசத்த
வராகவே கருதப்பட்டார்கள். இப்படி யூதர்கள் தனித்த ஒரு ஜாதி
யாய் இராதபடிக்கு அழிந்து போகாமலும், யூதனென்ற முத்திரை
மாறாமலும் இருக்கக் காரணமென்ன? வேறு எந்த ஜாதியானாலும்
வேறுபட்ட சூழ்நிலைகளில் இத்தனை நூற்றாண்டுகள் தன் தனித்
தன்மையை இழந்து போகாமல் இருந்திருக்குமா? பைபிளில்
சொல்லப்பட்ட வேறு அநேக ஜாதிகள் உண்டல்லவா? இன்று
அவர்களைத் தனியாகச் சுட்டிக் காட்ட முடியுமா? அப்படியானால்
இந்த ஜனங்கள் மட்டும் யூதராகவே வாழ்ந்திருக்க வேண்டிய
அவசியம் என்ன? இன்றுவரை அப்படி வாழ்ந்து விட்ட இரகசியம்
அற்புதம்தான் என்ன? எத்தனையோ இராஜாக்களும், அதிகாரி

களும், ஞானிகளும் கூட அவர்களை அழிக்கப் பிரயாசப்பட்டும் அது கூடாமற் போயிற்று. ஆமாம், தேவனுக்கு இந்த ஜனத்தைக் குறித்து தனிப்பட்ட ஒரு நோக்கமுண்டு. தாம் சிதறடித்த அந்த ஜனத்தைத் திரும்பவும் தாம் அவர்களுக்குக் கொடுத்த தேசத்துக்கே கொண்டு வருவதாக அநேக வசனங்கள் மூலமாகத் தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (எரே. 30:11-22, ஏசா 11:11-12, எசேக். 36:22-28 லூக். 21:29-30). வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவர் (ரோ. 4:21, எபி. 11:11, II கொரி. 1:20). தாம் குறித்த காலத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்ப்பதற்காக யூத மக்களை அழிய விடாமலும், சுபாவம் கெடாமலும் அவர்களைப் பாதுகாத்தார் இந்த சத்தியத்தை அறிந்து உணர்ந்திருந்ததாலேயே பிரஷ்ஷிய தேசத்து சேனைத் தலைவன் பைபிள் உண்மையென்பதற்கு சாட்சி 'யூதனே' என்று தயங்காமல் பதில் சொன்னான், மன்னனும் வியப்போடு அதை ஒப்புக்கொண்டான்.

யூதரைப் பற்றி எழுதாவிட்டால் கடந்த 3600 வருஷ உலக சரித்திரம் நிறைவு பெறாது. உலகத்திலுள்ள 330 கோடி மக்களுள் ஒன்றரைகோடி மக்களே யூதர்கள். அதிலும் 30 லட்சம் யூதர்களே அவர்களது நாடான இஸ்ரேலில் உண்டு. எனினும் அவர்களைச் சுற்றியுள்ள மக்கள் பயப்படத்தக்க நிலையிலும், உலக வல்லரசுகளின் முழுக்கவனத்தை ஆட்கொள்ளும் வகையிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த விந்தையான ஜனம் ஒரு காலத்து எகிப்தில் அடிமைகளாயிருந்தார்கள். தேவன் அவர்களை அங்கிருந்து விடுதலையாக்கித் தாம் அவர்களுக்குச் சுதந்திரமாய்க் கொடுத்த கானான் தேசத்துக்குக் கொண்டு வந்தார். எகிப்திலிருந்து புறப்பட்ட அவர்கள் 40 வருடங்களாய் வனாந்திர வழியாய்ப் பிரயாணம் செய்து கானானுக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களது இந்தப் பிரயாணத்தைப் பற்றி எழுத வேண்டுமென்ற ஆசையைத் தேவன் எனக்குத் தந்தார். அதன்படி இப்புத்தகத்தை எழுதுகிறேன்.

கானானுக்கு வந்து சேருமுன்னால் இஸ்ரேல் ஜனம் செய்த பிரயாணமும், வனாந்திர ஜீவியமும் இன்று இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவ வாழ்க்கையை மேற்கொள்ளும் ஒருவனுடைய இவ்வுலக ஜீவியத்திற்கு நிழலாயிருக்கின்றன. அந்த வனாந்திர ஜீவியமும், பிரயாணமும் உன்னதமான அநேக பரலோக இரகசியங்களை நமக்கு வெளிப்படுத்துகின்றன. பரலோக இராஜ்ஜியத்தின் காரியங்களை விளக்கிக் கொடுக்காவிட்டால் அவற்றை விளங்கிக் கொள்ள முடியாது (மத். 13:11). ஆகையால் இப்புத்தகத்தை வாசிப்போருக்கு வேத வாக்கியங்களை அறிந்து கொள்ளத்தக்க ஞானத்தையும், கிருபையையும் தேவன் தாமே தந்தருளுவாராக.

1

தேவனுடைய தெரிந்து கொள்ளுதலின் நோக்கம் (ரோ. 9 : 11)

The Selective Purpose of God

''அவருடைய பூவலகத்தில் சந்தோஷப்பட்டு, மனுமக்களுடனே மகிழ்ந்து கொண்டிருந்தேன்''. (நீதி 8 : 31). உலகம் தோன்றுவதற்கு முன்பே பூமியில் தாம் சிருஷ்டிக்கப்போகும் மனுஷனோடு தமக்குண்டாகப் போகும் ஐக்கியத்தை நினைந்துச் சந்தோசப்படும் ஒரு நல்ல தேவனை மேற் சொன்ன வசனத்தில் பார்க்கிறோம். மனுஷனில் தேவன் இப்படி வாஞ்சையாயிருப்பதற்குக் காரணம் : மனுஷன் தேவனுடைய சொந்தச் சாயலிலும் ரூபத்திலும் சிருஷ்டிக்கப்பட்ட அவருடைய பிள்ளை (ஆதி. 1 : 26; லூக். 3 : 38-Eng.), ஜனங்கள் மத்தியில் தாம் வாசம் பண்ண தமக்கு ஒரு வாசஸ்தலத்தை உண்டு பண்ணும்படியாய் மோசேயோடு சொன்ன தேவனல்லவா அவர் ! (யாத். 25 : 8).

ஆனால் மனுஷனே அவருக்குத் துரோகம் பண்ணி அவரை விட்டுப் போனான் (ஓசி. 6 : 7; ஆதி.3ம் அதி). அவனுடைய சாயலில், சுபாவத்தில் பிறந்த அவனுடைய சந்ததியான (ஆதி 5:3) மனுக்குலமும் தேவனுடைய பட்சத்தில் இல்லை. தேவனே மனுக்குலத்துக்கு இரங்கவேண்டுமென்று முகாந்திரத்துக்காய்த் தமக்கென்று ஒரு கூட்டத்தை எப்போதுமே வைக்காதிருந்திருப்பாரானால் உலகம் எப்போதோ அழிந்துபோயிருக்கும். அதனால்தான் ஏசாயாயும் ''சேனைகளின் கர்த்தர் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்காதிருந்தாரானால் நாம் சோதோமைப் போலாகி கொமோராவுக்கு ஒத்திருப்போம்'' என்று சொல்லுகிறார். (ஏசா. 1 : 9). நீதிமானாகிய லோத்து (II பேது. 2 : 8) அங்கிருந்து வெளியேறிப் போகும் மட்டும் தேவன் சோதோம் கொமோராவை அழிக்கவில்லையே !

ஆதாம் கெட்டுப்போனாலும் அவனுடைய பிள்ளைகளில் ஒருவனாகிய ஆபேல் தேவனுக்குப் பிரியமானவனாயிருந்தான் (மத். 23:35; ஆதி. 4 : 4) ஆதாம் உயிரோடிருக்கும் நாட்களிலேயே ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான்

(யூதா. 14ம் வச; ஆதி 5 : 24). அதற்குப் பிறகு பூமியின் மேல் மனுஷர் பெருகினபோது தேவன் மனுஷனைச் சிருஷ்டித்ததற்காக மனஸ்தாபப்படும் அளவுக்குப் பாவமும் பெருகினது (ஆதி. 6,6). ஆனாலும் நோவா மாத்திரம் நீதிமானாயிருந்தான் (9ம் வச.). அவனையும் அவன் குடும்பத்தையும் மாத்திரம் தேவன் பேழைக்குள் வைத்துக் காப்பாற்றி (II பேது. 2 : 5) மற்ற உலகம் முழுவதையும் ஜலப் பிரளயத்தினால் அழித்தார். நோவாவுடைய சந்ததி பலுகிப் பெருகினபோதும் அவர்கள் தேவனுக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணி (ஆதி. 11: 4) பொல்லாத துன்மார்க்க ஜீவியத்திலும் விக்கிரக ஆராதனையிலும் விழுந்து போனார்கள். அந்தச் சமயத்தில் அந்தக் கேடுகெட்ட சூழ்நிலையிலிருந்து தேவன் ஆபிரகாமைப் பிரித்தெடுத்து அழைத்து தமக்குச் சித்தமான ஒரு இடத்துக்கு அவனைக் கொண்டு போனார் (ஆதி. 12 : 1) ஆபிரகாமுடைய குமாரனாகிய ஈசாக்குக்குப் பிறந்த இரண்டு பிள்ளைகளில் இளையவனான யாக்கோபைத் தெரிந்து கொண்டு (மல். 1 : 2). அவன் மூலம் உண்டான சந்ததியை - இஸ்ரவேல் ஜனத்தை-தம்முடைய சொந்த ஜனமாகத் தெரிந்தெடுத்தார். அவர்களுக்குத் தம்முடைய நியாயப்பிரமாணமாகிய சட்டதிட்டங்களை கொடுத்து மனுஷர் என்ன செய்ய வேண்டுமென்று தாம் விரும்புகிறாரோ அதை அவர்களுக்கு வெளிப்படுத்தினார் (ரோ. 9 : 4). இப்படித் தேவனுடைய சித்தம் வெளிப்படுத்தப்பட்ட ஒரு ஜாதியானதால் அது விசேஷித்த பெரிய ஜாதியாகும் என்று உலகம் சாட்சி சொல்லும் என்று மோசே தேவனுடைய கட்டளைகள் நிமித்தம் அவர்களைப் புகழ்ந்தான் (உபா. 4 : 5-8). இந்த ஜனமும் தேவனை விட்டு விலகினபோதெல்லாம் ஒரு சிறு கூட்டம் தேவனுடைய பக்கத்தில் உறுதியாய் நின்றது. தேவனோடு எலியா சொன்னான்: ''நான் மாத்திரமே தேவனுக்காய் வைராக்கியமுடையவனாயிருக்கிறேன். என்னையும் கொல்லத் தேடுகிறார்கள்''. அப்பொழுது தேவன் சொன்னார் : ''இல்லை, பாகாலுக்கு முன்பாகத் தங்கள் முழங்கால்களை முடக்காதவர்கள் உன்னைத் தவிர இன்னும் ஏழாயிரம் பேர் எனக்கு உண்டு'' (ரோ. 11 : 2-5). இப்படியாகத் தேவன் தெரிந்து கொண்டவர்கள் இருந்ததினால்தான் இஸ்ரவேல் ஜனம் பாவம் செய்த போது தேவன் அவர்களை நிர்மூலம் பண்ணவில்லை.

இயேசு யூதருடைய மேசியாவாய் உலகத்தில் வந்தபோதும் அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரைச் சிலுவையிலறைந்து கொன்று அவ்வளவு தூரம் தேவனுக்குச் சத்துருக்களானார்கள். தேவனும் யூதரைத் தள்ளிவிட்டுப் புறஜாதி

யாரைத் தெரிந்து கொண்டார் (மத். 22 : 1-10; அப். 13 : 46-48; ரோ. 10 :20. 9 : 25). புறஜாதியார் அவரை ஏற்றுக் கொண்டு அவருடைய ஜனங்களானதினால் உலகம் இன்னும் நிலை பெற்றிருக்கிறது.

ஆதாம் இழந்துபோன மேன்மையை ஆபிரகாமைத் தெரிந்து கொண்டு அவன் சந்ததியான இஸ்ரவேலுக்குக் கொடுத்தார். இஸ்ரவேல் இழந்துபோன ஆசீர்வாதத்தைத் தாம் தெரிந்து கொண்ட புறஜாதியாரான நமக்குக் கொடுத்தார். அல்லேலூயா!

புறஜாதியாருடைய நிறைவு ஒரு நாள் உண்டாகும் (ரோ. 11 : 25) கர்த்தருடைய ரகசிய வருகையில் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (1 தெச. 4 : 17). அதன்பின்பு யார் நிமித்தம் இஸ்ரவேலர் (யூதர்) இன்று வரை அழியாமல் விடப்பட்டிருக்கிறார்களோ அந்த மீதியானவர்கள் (யூதரில் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்) இரட்சிக்கப்படுவார்கள் (ரோ. 9 : 27) அப்போது தான் கர்த்தருடைய பகிரங்க வருகையும் பூமியின் நியாயத்தீர்ப்பும் நிறைவேறும் (ரோ, 9 : 28).

இப்படித் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜாதியான இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலே அடிமைகளாகக் கொஞ்சகாலம் இருக்கவேண்டியதாயிற்று. அதன் காரணத்தை இனி பார்ப்போம்.

2

மூன்றும் நான்காம் தலைமுறை மட்டும்

யாத். 9 : 27-29

பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றும் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன் என்று தேவன் விளம்பினார்.

ஒரு முறை ஆபிரகாம் பலி செலுத்தியபோது அதைச் செய்ய வேண்டிய பிரகாரமாய்ச் செய்யாததினால்—அந்த மீறுதலினால்—அவனுடைய சந்ததியார் நான்கு தலைமுறை மட்டும் எகிப்திலே அடிமைகளாகக் கஷ்டப்பட்டார்கள் (ஆதி. 15 : 7-16)

பலிக்கான பறவைகளை அவன் துண்டிக்கவில்லை என்பதே ஆபிரகாம் செய்த தவறு (10ம் வச) பலியிடப்படும் பறவைகள் இரண்டாக்காமல் பிளக்கப்பட, துண்டிக்கப்பட வேண்டும் என்பது பலியின் பிரமாணம் (லேவி. 1 : 17). இந்தக் கட்டளையை ஆபிரகாம் மீறினதினால் மாற்றமில்லாத தேவ வசனத்தின்படியே தண்டனை அவனுடைய சந்ததியான இஸ்ரவேல் ஜனங்களின் மேலாயிற்று.

சரி, பலியின் பிரமாணமெல்லாம் பின்னர்தானே இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது. அப்படியிருக்க ஆபிரகாம் அறியாமல் செய்த தவறுக்குத் தண்டனை உண்டாகலாமோ என்ற கேள்வி ஒவ்வொருவருடைய மனதிலும் எழும். காரியம் அப்படியில்லை என்பது இப்போது விதிக்கப்படுகிறது.

முதலாவது "விசுவாசம் கேள்வியினாலேயே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்ற வசனத்தை (ரோ. 10 : 17) நன்றாக நினைவில் கொள்ளுங்கள். ஆபேலும் காயீனும் பலி செலுத்தினார்கள் (ஆதி 4ம் அதி). தேவன் ஆபேலுடைய பலியை அங்கீகரித்து காயீனுடையதையோ நிராகரித்தார். தேவனிடத்தில் பட்சபாதமில்லை (ரோ. 2 : 11.) அப்படியிருக்க தேவன் அப்படிச் செய்த காரணம் என்ன? ஒருவன் முதலாவது செலுத்த வேண்டியது பாவநிவாரண பலிதான் (லேவி. 1ம் அதி). அதன் பின்னரே போஜன பலிகள் செலுத்தப்படவேண்டும் (2ம் அதி). ஆபேல் செலுத்தியது முறைப்படியுள்ள பாவநிவாரண பலி காயீன் பாவ நிவாரணத்தில் விசுவாசமில்லாத சுயநீதியிலும் கிரியைகளிலும் பற்றுக் கொள்ளச் செய்யும் போஜன பலியை முதலாவது செலுத்தினான். அது தவறு. ஆபேல் தற்செயலாய் சரியானபடி பலி செலுத்தவில்லை. "இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை" (எபி. 9 ; 22, லேவி. 17 : 11) என்ற பிரமாணத்தில் ஆபேலுக்குள்ள விசுவாசம் கேள்வியின் மூலமாய் அவன் தகப்பனாகிய ஆதாமிலிருந்து வந்தது ஆதாமுக்கு அந்தக் கேள்வி தேவ வசனத்தின் மூலமாய் வந்தது. எப்படியெனில் தான் பாவம் செய்த அன்று தன் (நீதியின்) வஸ்திரத்தை இழந்து நிர்வாணியாய்ப் போய்த் தானே ஒரு (சுயநீதி, கிரியைகள், மனுஷ ஆலோசனையின்படியான) வஸ்திரத்தை இலைகளைத் தைத்து உண்டு பண்ணினான். அந்த வஸ்திரம் உதவாமற்போய் அவனுடைய நிர்வாணம் (பாவம்) மூடப்படவில்லை (ஆதி. 3 : 7-10) அப்போது தேவனே ஏற்ற வஸ்திரத்தை அவனுக்கு உண்டு பண்ணினார். தோல் உடைகள் கொடுக்கப்

பட்டன. அதாவது ஒரு மிருகம் கொல்லப்பட்டு அதின் இரத்தம் சிந்தப்பட்ட பின்னரே ஆதாமின் (பாவம்) நிர்வாணம் மூடப்பட்டது. இதுவே பின்பு இஸ்ரவேலருக்குப் பிரமாணமாகக் கொடுக்கப்பட்டது. இப்படியான இரத்தஞ்சிந்துதலின் முடிவாய், நிறைவேறுதலாய் இயேசு கல்வாரியில் தம்முடைய இரத்தத்தைச் சிந்தி லோகத்தின் பாவத்தை நிவிர்த்தி செய்து நித்ய நித்யமான நீதியின் வஸ்திரத்தை மனுஷருக்கு உடுத்தினர். ஆதாமின் மூலமாய்க் கேள்விப்பட்டபடியே ஆபேல் வரப்போகிற மெய்யான பாவநிவாரண பலியான கிறிஸ்துவின் மரணத்துக்கு நிழலான பலியை பாவநிவிர்த்திக்கென்று விசுவாசத்தோடே செலுத்தினன். தேவ வசனத்தின் படியான, தேவ சித்தத்தின்படியான, தேவ ஆலோசனைப்படியான அந்த பலியைத் தேவன் ஏற்றுக் கொண்டார். ஆதலால் காயீன் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை.

இனி ஆபிரகாமின் காரியத்துக்கு வருவோம். பின்னர் இஸ்ரவேலுக்குப் பிரமாணமாகக் கொடுக்கப்பட்ட தசமபாகத்தை (லேவி. 27 : 30) ஆபிரகாம் முன்பே செலுத்தினனே (ஆதி 14 : 18-20). அது எப்படி? தசமபாக முறைமையை ஆபிரகாமிடமிருந்துதான் தேவன் பெற்ருர் என்று சொல்லலாமா? இஸ்ரவேலர் பிரமாணமாகக் கைக்கொண்ட விருத்தசேதன முறையை ஆபிரகாமுக்குத் தேவனே முதலில் கொடுத்ததல்லவா (ஆதி. 17 : 10)? அப்படியே தசமபாக, பலி முறைமைகளும் தேவன் தாம் அழைத்துப் பிரித்தெடுத்த ஆபிரகாமுக்குக் கொடுத்திருக்க வேண்டுமல்லவா ?

இன்னெரு உதாரணத்தையும் எடுத்துக் கொள்வோம். மோசேயின் மனைவி புறஜாதிப் பெண். மோசேயும் குடும்பமும் பிரயாணம் போகும்போது அவன் சாக இருந்தான், உடனே மோசேயின் மனைவி தன் குமாரனுக்கு அந்த இடத்திலேயே விருத்தசேதனம் செய்தாள் (யாத். 4 : 24-26). மோசேக்கு வரவிருந்த கேட்டின் காரணம் அவளுக்கு எப்படித் தெரியும்? மோசேயினிடமிருந்து கேள்விப்பட்டிருந்தும் மனதைக் கடினப்படுத்திக் கொண்டு குமாரன் ஒருவன் பிறந்தபோது தேவப் பிரமாணத்தின்படி அவனுக்கு விருத்தசேதனம் செய்ய அவள் (புறஜாதிப் பெண்ணயிருந்ததாலோ என்னவோ) சம்மதிக்கவில்லை. மோசேயும் சும்மா இருந்துவிட்டான் போலும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு வருகிறதாக இருந்தபோது அவள் உடனே கீழ்படிந்து தேவ கட்டளைப்படி செய்ததினல் ஆபத்திலிருந்து தப்பினர்கள்.

ஆகவே அறிந்திருந்தும் ஆபிரகாம் அஜாக்கிரதையினாலோ என்னவோ தப்பு செய்தான். உடனே நியாயத்தீர்ப்பும் உண்டானது. அறியாமல் செய்த தவறுக்குத் கடும் தீர்ப்பு வழங்கத்தேவன் அநீதியுள்ளவரோ? காயீன் செய்யவிருந்த பொல்லாப்பிலிருந்த அவனை விடுவிக்கும் நோக்கத்துடன் அவனை எச்சரித்த தேவன் (ஆதி. 4 : 5-7). ஜலப் பிரளயத்தால் உலகை அழிக்கும் முன் நீடிய பொறுமையோடே நோவாவைக் கொண்டு மனுஷருக்குப் பிரசங்கித்த தேவன் (1 பேது. 3 : 20)—ஏனோக்கைக் கொண்டு வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பிரசங்கித்த தேவன் நோவாவைக் கொண்டும் பிரசங்கித்திருப்பது அதிக நிச்சயமல்லவா?—தம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு பாவம் செய்த இஸ்ரவேலரை எச்சரித்த தேவன் (II இரா. 17 : 13). தம்மைக் காட்டிக் கொடுக்கப்போகிறவனுக்கும் மனந்திரும்ப சமயம் கொடுத்த கர்த்தர் (யோ. 13 : 26,27) அறியாமல் ஆபிரகாம் தப்பு செய்திருந்தால் தண்டனை கொடுப்பாரோ? அறியாமல் செய்ததினால் புறஜாதியான ஒரு இராஜா செய்த குற்றத்தை அவனுக்கு மன்னித்து பொல்லாப்பிலிருந்து அவனை இரட்சித்த நல்ல தேவனல்லவா அவர் (ஆதி. 20 : 1-7).

அப்படியிருக்க ஆபிரகாமுக்கு வழங்கப்பட்ட தேவ தண்டனை அநீதியுள்ளதல்ல. அறிந்திருந்தும் பிரமாணத்துக்கு விரோதமான தாவீதின் உற்சாகமான ஆராதனை விசனத்தில் முடிந்ததுபோல (II சாமு. 6ம் அதி) ஆபிரகாமின் தவறான ஆராதனையும் தேவனுடைய நியாயத்தீர்ப்பில் முடிந்தது அதன்படி மூன்று நான்கு தலைமுறைகளாக ஆபிரகாமின் சந்ததியாரான இஸ்ரவேலர் எகிப்தில் அடிமைகளாயிருந்தார்கள்.

ஆபிரகாம் → ஈசாக்கு → யாக்கோபு
↓
லேவி மற்றும் அவன் சகோதரர்
↓
கோகாத்
↓
அபிராம்
↓
மோசே, ஆரோன்

(நான்கு தலைமுறையினர் எகிப்தில்—நாலாம் தலைமுறையில் எகிப்திலிருந்து புறப்படுகிறார்கள் (ஆதி. 15 : 16))

(1 நாளா 6 :1-3)

இனி இந்த இஸ்ரவேல் ஜனம் எகிப்திலிருந்து, தங்கள் அடிமைத் தளத்திலிருந்து புறப்பட்ட வகையைப் பார்ப்போம்.

3

நல்ல நாடாகிய ராமசேஸ்

(ஆதி. 47:11)

தேவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்ததோ கானான் தேசம். அதுதான் அவர்களுடைய சுதந்திர தேசம். ஆனால் பஞ்சம் காரணமாக எகிப்துக்கு வந்த அவர்கள் எகிப்திலேயே தங்கி விடுகிறார்கள். அவர்கள் அங்கே விரும்பி தங்குவதற்கான சூழ்நிலையும் உண்டாயிருந்தது. எப்படியெனில் அவர்கள் எகிப்துக்குப்போன சமயத்தில் அவர்களுடைய சகோதரனாகிய யோசேப்பு அங்கே மிகப் பெரியவனாயிருந்தான். அவன் நிமித்தம் அவர்கள் விசேஷித்த சலுகை பெற்ற (Privileged people) ஜனமானார்கள். எகிப்தில் செழிப்பான பகுதியாகிய கோசேன் நாட்டில் (ஆதி. 47:4, 11) குடியிருந்தார்கள். அதிகாரமும் பெற்றிருந்தார்கள் (ஆதி. 47:6). திருப்தியான சாப்பாடு அவர்களுக்கு உண்டு (யாத். 16:3, எண். 11:5). பஞ்சத்தின் கொடுமையால் நலிவுற்று வந்த அவர்கள் சூழ்நிலையின் சுகத்தால் தேவன் தங்களுக்குக் கொடுத்த கானான் தேசத்துக்குப் போக மனமில்லாமல் எகிப்திலேயே தங்கிவிட நினைக்கிறார்கள்.

ஆனால் அவர்களைப்பற்றிய தேவனுடைய பிளான் அதுவல்ல. அவர்கள் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, (ரோமர் 3:10-18) வசனங்களின்படி தேவனை விட்டு விலகிப்போன மனுக்குலத்துக்கு தேவசித்தத்தை வெளிப்படுத்தவும், அவருடைய வழிகளை அறிவிக்கவும், அவருடைய கட்டளைகளின்படி ஜீவித்து அவரை ஆராதிக்க வேண்டிய பிரகாரமாய் ஆராதிக்கவும் வேண்டி அவருக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட ஜனம், அவர் கொடுத்த தேசத்தில் போய் வாழ்ந்து அவருடைய மகத்துவத்தை உலகுக்கு எடுத்துக் காட்ட வேண்டிய ஜனம் அந்நிய தேசத்திலே தேவனை மறந்து போய் இருப்பது தேவனுடைய நோக்கம் அல்ல. ஆகவே அவர் அவர்களுக்குப் பாதகமான சூழ்நிலையை எகிப்திலே உண்டு பண்ணுகிறார்.

அவர்கள் சகோதரன் யோசேப்புக்குப் பிறகு எகிப்தின் ராஜாவுக்கும், எகிப்தியருக்கும் இஸ்ரவேலர் மேல் பொறாமையும் வெறுப்பும் உண்டாகி அவர்களைக் கஷ்டப்படுத்த ஆரம்பிக்கிறார்கள். பின்பு முழு அடிமைகளாகவே ஆகி விடுகிறார்கள் (யாத்.

1:8-14) இப்பொழுதுதான் வேலைப்பளுவாலும், ஆளோட்டிகளின் (கண்காணிகளின்) கொடுமையாலும் தங்கள் பிதாக்களின் தேவனை நோக்கி முறையிடுகிறார்கள். எகிப்தை விடவேண்டும். தங்கள் பிதாக்களுக்குத் தேவன் கொடுத்த தேசத்துக்குப் போக வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். தேவனும் அவர்களின் முறையீட்டுக்குச் செவி கொடுத்து அவர்களுடைய மீட்பின் வேலையை ஆரம்பிக்கிறார் (யாத். 2:23-25).

ஆபிரகாமின் தவறினால் எகிப்தின் அடிமைகளான அவனுடைய சந்ததி தேவனுடைய வேளையான போது அங்கிருந்து விடுதலையாகி தங்கள் தேசத்துக்குப் புறப்படுகிறார்கள்.

[ஆபிரகாம் செய்த ஆராதனை தவறானது என்பதற்கு மேலும் ஆதாரமாய் அவன் செலுத்திய பலியின்மீது பரலோகத்திலிருந்து அக்கினி அல்ல—பரிசுத்த ஆவி அல்ல—ஆகாயத்துப் பறவைகள்-சாத்தானும் அவனுடைய கூட்டமும் (மத். 13:4, 19; வெளி. 18:2; மத். 8:20; மத் 13:32) இறங்கின என்பதையும் சொல்லலாம். சரியான ஜெபத்துக்குப் பின் கிடைக்கும் சமாதானமும், தைரியமும், பலமும் அல்ல. காரிருளும், திகிலும் அவனை மூடிற்று என்று வாசிக்கிறோம்.]

4

நிழலும் பொருளும்

எபி. 10 : 1.

வேதாகமம் பொதுவாக பழைய ஏற்பாடு (2 கொரி. 3:14) என்றும், புதிய ஏற்பாடு (2 கொரி. 3:6) என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது இதில் பழைய ஏற்பாட்டை இயேசு மூன்றாகப் பிரித்துச் சொன்னார் : (i) மோசேயின் நியாயப் பிரமாணம் (ii) தீர்க்கதரிசியின் ஆகமங்கள் (iii) சங்கீதங்கள் (லூக். 24:44). வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களும் மோசேயின் ஆகமங்களாக நியாயப்பிரமாணமென்று அழைக்கப்படுகின்றன.

நியாயப் பிரமாணம் தேவன் மோசேயின் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த கட்டளைகள் அடங்கியது. அது வரப்போகிற கிறிஸ்து என்னும் பொருளுக்கு—அவர் கொடுக்கப் போகிற புதிய ஏற்பாடு என்னும் நன்மைக்கு நிழலானது

(கொலோ. 2 : 16,17-எபி. 10 : 1) நியாயப் பிரமாணம் முழுவதும் கிறிஸ்துவையே சுட்டிக் காட்டுகின்றது. வெளிப்படப்போகிற கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தால் பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றினூர்கள்.

ஆமாம், நியாயப் பிரமாணத்தில் சொல்லப்படும் ஒவ்வொரு காரியத்துக்கும் புதிய ஏற்பாட்டில் ஆவிக்குரிய அர்த்தமுண்டு. உதாரணமாக பஸ்கா ஆசரிப்பு இஸ்ரவேலர் எகிப்திலிருந்தபோது அவர்களுக்கு கட்டளையிடப்பட்டது. அதுவே நித்ய ஆசரிப்பாகப் பின்பு நியமிக்கப்பட்டது (யாத். 12ம் அதி). பஸ்காவின் போது ஒரு ஆட்டுக்குட்டி அடிக்கப்படவேண்டும். பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டால்தான் எகிப்தின் மேலும் எகிப்தியரின் மேலும் வந்த நியாயத்தீர்ப்பினின்று இஸ்ரவேலர் காக்கப்பட்டார்கள். இந்த நிகழ்ச்சி இயேசு கிறிஸ்துவின் கல்வாரி மரணத்துக்கு நிழலானது. இயேசுவே அந்த அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டி (1 கொரி. 5:7) அவருடைய மரணத்தை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்டவன் உலகத்தின் மேல் வரும் நியாயத்தீர்ப்பினின்று காக்கப்படுவான் (ரோ. 8:1).

இன்னும் விருத்தசேதனம் இஸ்ரவேலருக்கு நித்திய உடன்படிக்கையாகத் தேவனால் கட்டளையிடப்பட்டது (ஆதி. 17:10-14). புதிய ஏற்பாட்டில் வரும்போது விருத்தசேதனம் மாம்சத்துக்குரிய சரீரசமல் மறுபடியும் பிறந்த அநுபத்துக்கு—புதிய சிருஷ்டிக்கு நிழலாயிருக்கிறது (கொலோ. 2:11, பிலி. 3:3).

இப்படியே எகிப்தில் இஸ்ரவேலரின் ஜீவியமும், பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்ட பின் எகிப்திலிருந்து அவர்களுடைய புறப்பாடும், அவர்களுடைய வனந்திர தாபரமும் எந்தப் பொருளுக்கு அல்லது பொருள்களுக்கு நிழலானவை என்று இனி பார்ப்பேசம்.

5

யோசேப்பை அறியாத பார்வோன்

யாத் 1 : 8

யோசேப்பு எகிப்திலே மிகப் பெரியவனயிருந்தான் (ஆதி. 41:38-44). *சிங்காசனத்தில் மாத்திரம் எகிப்தின் இராஜா*

ளாகிய பார்வோன் யோசேப்பைக் காட்டிலும் பெரியவன், மற்றப்படி முழு ஆளுகையும் அதிகாரமும் யோசேப்பிடமே இருந்தது.

ஆதாமை சிருஷ்டித்த தேவன் பூமி முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கி எல்லா ஆளுகையையும் அவனிடமே கொடுத்திருந்தார் (ஆதி. 1: 26-28) அவனைவிடப் பெரிய வல்லமை பூமியில் வேறெங்கும் கிடையாது. தேவதூதரும் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்களே. தேவன் மாத்திரமே (Elohim திரித்துவமாகிய தெய்வம்) அவனைக்காட்டிலும் பெரியவர். எட்டாம் சங்கீதத்தில் ''நீர் அவனைத் தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்'' என்று வருவது மூலபாஷையில் தேவதூதரைக் காட்டிலும் என்று அல்ல தேவனை காட்டிலும் (Elohim) என்றே வருகிறது. சர்வத்தினுடைய ஆளுகையும் ஆதாமிடமிருந்தது.

இப்பொழுது யோசேப்பை அறியாத புதிய ராஜன் ஒருவன் எகிப்தில் தோன்றுகிறான் (யாத். 1 : 8). அப்படி ஒரு ராஜன் தோன்றியது, யோசேப்பு மரித்த பின்புதான், பைபிளின் ஒவ்வொரு வார்த்தையும் எவ்வளவு ஆழமாயிருக்கிறது பாருங்கள் (மத். 5 : 18). ஒரு புதிய ராஜன் – முந்தின ராஜன் யோசேப்பை அறிந்தவன். யோசேப்பை வெகுவாய் கனப்படுத்தினவன். யோசேப்பின் காலத்தில் அவனைச் சேர்ந்த ஜனமெல்லாம் கூட மேன்மை பெற்றிருந்தார்கள். யோசேப்பை அறியாத புதிய ராஜன் வந்தவுடன் அவனுடைய ஜனமான இஸ்ரவேலர் அடிமைகளானார்கள்.

ஆதாம் ''பாவம் செய்கிற நாளிலே நீ சாகவே சாவாய்'' என்று தேவன் சொல்லியிருந்தபடி (ஆதி. 2 : 17) அவன் பாவம் செய்தபோது (ஆதி. 3ம் அதி). முதலாவது ஆவிக்குரிய மரணத்தை அடைந்தான்—அதாவது தேவனை விட்டு விலகிப் போனான். அப்படி ஆதாம் மரித்த பின்பு, அவனை அறியாத (அவனுடைய முந்திய மகிமையையும் மேன்மையையும் மதிக்காத ஒரு புதிய ராஜன் தோன்றினான். அவனே சாத்தான். இப்போது தோன்றினான். அவனே சாத்தான். இப்போது சாத்தான் உலகத்தின் அதிபதி. இப் பிரபஞ்சத்தின் தேவன் ஆகிறான். (யோ. 14 : 30. II கொரி. 4 : 4). உலகத்தின் ஆளுகை முழுவதும் இப்போது அவனிடத்தில் இருக்கிறது (லூக். 4 : 5, 6). இந்தச் சாத்தானானவன், ஆதாமின் சந்ததியான மனுக்குலத்தை அடிமையாக்கிக் கொடுமையாய் ஆளுகிறான்.

முந்தின பார்வோன் தேவனுக்கு நிழலாகவும் அவனால் கனப்படுத்தப்பட்ட யோசேப்பு, தேவனால் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டு, அவரால் சகலமும் தன் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்ட (சங். 8 : 5-8) ஆதாமுக்கு நிழலாகவும் இருக்கிறார்கள்.

பிந்தின பார்வோன் சாத்தானுக்கும், அடிமைத்தனத்துக்குள்ளாகப்பட்ட இஸ்ரவேல் ஜனம் ஆதாமின் சந்ததியாய், பாவத்துக்குக் கீழாய் விற்கப்பட்டு (ரோ. 7 : 14). பாவத்துக்கு அடிமையாய்ப் போன மனுக்குலத்துக்கும் நிழலாயிருக்கிறார்கள். இனி எகிப்தில் இஸ்ரவேலருடைய அவலமான அடிமை வாழ்வு எப்படிப் பட்டது என்று பார்ப்போம்.

6

எகிப்தில் இஸ்ரவேலர்

(சங். 81 : 6; மத் 11 : 28)

அடிமைத்தனத்தின் கஷ்டங்களால், தாங்கமுடியாத வேதனைகளால் இஸ்ரவேலர் ''ஐயோ'' என்று முறையிட்டுக் கொண்டிருந்தார்கள் (யாத். 2:23). அவர்கள் பட்ட உபத்திரவம் அப்படிப்பட்டது என்று தேவனே சாட்சி கொடுக்கிறார் (யாத் 3.7). அவர்களுக்குத் தங்கள் உயிர்மேலேயே ஆசை விட்டுப்போய் விட்டது (யாத். 6:9) ஆமாம் அடிமைத்தன ஜீவியம் நிர்ப்பந்தமான ஜீவியம். அப்படியே பாவ ஜீவியமும் பரிதாபகரமான ஜீவியம். பாவிக்கு அநேக வேதனைகளுண்டு என்று வேதம் சொல்லுகிறது (சங். 32 : 10) துன்மார்க்கனுக்கு அதாவது தேவனற்றவனுக்குச் (ungodly) சமாதானமில்லை என்று தேவன் சொல்லுகிறார். [ஏசா. 57 : 20, 21].

இந்த இஸ்ரவேலர் ஒரு காலத்தில் எகிப்தில் சுகமாய் ஜீவித்தவர்கள்தான். பாவ ஜீவியமும் சந்தோஷமான ஒன்றுபோல் தோன்றும். ஆனால் ஒருநாள் அதின் உண்மையான பலன் என்ன வென்று தெரிந்து விடும். ''துர்க்கிரியைகளுக்குத் தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால் மனுப்புத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய துணிகரங் கொண்டிருக்கிறது. (பிர. 8:11). எகிப்தில் இஸ்ரவேலர் பெற்ற ஆரம்ப சந்தோஷம் பரிதாபத்தில் முடிந்தது. நிலையில்லாத பிரயோஜனமற்ற இந்த சமாதானத்

தைச் சுட்டிக்காட்டியே இயேசுவும், ''உலகம் கொடுக்கிற பிரகாரமாய் நான் கொடுக்காமல் என் சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன்'' என்றார். (யோ. 14 : 27).

எகிப்தில் இருக்கும்போது எல்லா இஸ்ரவேலரும் அடிமைகளே. இதில் விதிவிலக்கு ஒருவருக்கும் இல்லை. இஸ்ரவேலருக்குள் எகிப்தியரால் வைக்கப்பட்ட தலைவர்களும் உண்டு. ஆனால் சமயங்களில் அடிக்கப்பட்டு அவர்களும் அடிமைகள் என்ற நிலையிலேயே நெருக்கப்பட்டார்கள் (யாக்: 5:14). ஏன், அரமனையில் பார்வோன் குமாரத்தியின் மகனாக வளர்ந்த மோசேயும் கூட சமயம் வந்தபோது அந்த அடிமைகளுக்குத் தலைவனாக எண்ணப்பட்டு கொலை செய்யப்பட இருந்தான். எகிப்தில் இருக்குமட்டும் எந்த நிலையில் இருந்தாலும் இஸ்ரவேலனாகப் பிறந்த எவனும் அடிமைதான்.

அப்படியே மனுஷனாகப் பிறந்த எவனும் பாவத்துக்கு அடிமையாய்ப்போன பாவியே (ரோ. 6:17-23. 7:14. யோ. 8.34) ''ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்தில் பிரவேசித்ததுபோல... '' (ரோ. 5:12) என்று வசனம் சொல்லுகிறபடி ஆதாம் மூலம் உலகத்தில் நுழைந்த பாவம் அவன் சந்ததி முழுவதையுமே ஆட்கொண்டது. அதனால் தான் ''பாவம் செய்யாத மனுஷன் இல்லையே'' என்று சாலமோன் ராஜா சொன்னான் (2 நாளா 6:36). ''நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லோரும் வழி தப்பி ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை; ஒருவனாகிலும் இல்லை'' (ரோமர். 3:10-12) என்று பைபில் இன்னொரு இடத்தில் சொல்லுகிறது. 'இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள்'' (சங். 51:5) என்று தாவீது ராஜா சொல்லுவதால், மனுஷன் தாயின் கர்ப்பத்தில் உருவானது முதல், தன் கிரியைகள் மூலம் வெளியரங்கமாய் வெளிப்படுத்தாவிட்டாலும், பாவியாகவே இருக்கிறான். அவனுடைய ஜென்ம சுபாவமே பாவம்தான் என்பதே அதின் சுருக்கம். அவன் நன்மை செய்ய ஆசைப்பட்டாலும் அப்படிச் செய்ய முடியாதபடி, பாவம் செய்யாமல் இருக்கக்கூடாத ஒரு நிர்ப்பந்தமான சுபாவத்தை அவன் பெற்றான் (ரோமர் 7:18-20).

எகிப்தின் இராஜாவாகிய பார்வோன் தனக்குப் பட்டணங்களைக் கட்டிக்கொள்ள ஆசைப்பட்டான். தன் விருப்பத்தை நிறை

வேற்றும்படித் தனது அடிமைகளான இஸ்ரவேலரைக் கட்டாயப் படுத்தி அவர்களை நெருக்கினான் (யாத். 1:11). ''உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது'' (1 யோ. 5:19) இந்த உலகத்தின் அதிபதியாகிய (யோ. 14.30) சாத்தான் தனது விருப்பங்களைத் தன்னுடைய அடிமைகளான மனுஷரைக் கொண்டு நிறைவேற்றுகிறான், ''அவனுடைய இச்சையின்படிச் செய்ய மனதாயிருக்கிறீர்கள்'' என்று இயேசு அதனால்தான் சொன்னார் (யோ. 8:44, 45). மேலும் சாத்தான் செய்கிறதாக எதைக் காண்கிறீர்களோ. அதையே நீங்களும் செய்கிறீர்கள்'' என்றும் சொன்னார் (யோ. 8:38). சாத்தானே ஆதிமுதலே பாவம் செய்கிறவனாயிருப்பதால் (1 யோ 3:8) அவனையே எப்போதும் கண்டு கொண்டிருக்கிற அவனுடைய அடிமைகளும் பாவத்தையே செய்கிறார்கள்

இப்படியாக பாவத்தின் வல்லமை மனுஷனுடைய இருதயத்தை அடிமைப்படுத்தியிருக்கிறது. ''எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத்தக்கவன் யார்?'' (எரே. 17:9). மனுஷனுடைய இருதயம் அவ்வளவு தூரம் கெட்டுப் போயிருக்கிறது. ''வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும். அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய் சாட்சிகளும், தேவதூஷணங்களும் புறப்பட்டு வரும்'' (மத். 15:18,19) என்று இயேசு சொன்னார். ''எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக் கூடுமோ? கூடுமானால் தீமை செய்யப் பழகின நீங்களும் நன்மை செய்யக்கூடும்'' (எரே. 13:23) என்று தேவவசனம் சொல்லுவதால், மனுஷனுடைய இருதயத்தை விட்டுப் பாவ சிந்தையை மாற்றுவது கூடாத காரியம். உதாரணமாக, எகிப்தின் அடிமைத்தன ஜீவியத்தில் பழகிப்போன இஸ்ரவேலர், தாங்கள் விடுதலைப் பெற்ற பிறகும், அந்த அடிமை சுபாவம் முற்றிலும் நீங்க பெறாதவர்களாய், எகிப்தை விட்டுத் தூரத்தில் வனாந்திரத்தில் இருக்கும் போது. ''தங்கள் இருதயங்களில் (எண்ணங்களில், விருப்பங்களில்) எகிப்துக்குத் திரும்பினார்கள்'' என்று வாசிக்கிறோம் (அப். 7;39).

எகிப்தில் இஸ்ரவேலர் தங்கள் பெலன், ஆரோக்கியம் ஞானம், தாலந்துகள் எல்லாவற்றையும் பார்வோனுக்காகச் செல

விட்டது போல, பாவியானவனும் தனக்குள்ள நலமானவைகளை யெல்லாம் சாத்தானுக்காகச் செலவிடுகிறன். இப்படியாக அடிமை யானவன் தன்னைத்தான் விடுவித்துக் கொள்ள முடியாது. இஸ்ர வேலருடைய அடிமைத்தனத்தை மாற்றப் பரலோகம் ஒரு செயல் திட்டத்தை (Programme) போட்டது. அதின்படி ஒரு மோசே அவர்களுக்கு இரட்சகனை அனுப்பப்பட்டான். அதுபோலவே ''பாவத்தின் சம்பளம் மரணம்'' என்ற (ரோ. 6:23) மாற்றமில் லாத தேவ சட்டத்தின்படி நம்பிக்கையற்ற மனுக்குலத்தை மீட்கும் படியாய்த் தேவன் ஒரு வழியை ஆயத்தம் பண்ணினர். அந்த வழி நம்முடைய கர்த்தராகிய இயேசுவே (யோ. 14:6). ''குமாரன் உங்களை விடுதலையாக்கினல் மெய்யாகவே விடுதலை யாவீர்கள்'' (யோ. 8:36)

7

மோசேயும், இயேசுவும்

(எபி. 3:2)

மோசேயைக் கொண்டு இஸ்ரவேலரை எகிப்திலிருந்து மீட்கத்தேவன் ஒருவிதமாய் புரோக்ரோம் போட்டிருக்க, அவனே தன் சொந்த யுக்தியின்படி ஒரு ப்ளான் போட்டான். கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை இன்னாரென்று தன் ஜனத்துக்கு வெளிப் படுத்தி அவர்களைத் தன் பக்கமாக இழுத்து, பார்வோன் அரமனை யிலிருந்த போது நான் கற்ற எகிப்தின் [உலகத்தின்] சகல ஞானத்தையும் (அப். 7:22) யுத்த முறைமைகளையும் கொண்டு இஸ்ரவேலரை பழக்கி பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் விரோத மாக எழும்பி விடுதலை பெறுவது அவனது திட்டமாயிருக்கலாம். எப்படியெனில் ''இராஜாவின் கோபத்துக்கும் பயப்படாத'' மோசே [எபி 11:27] ''காரியம் நிச்சயமாய் வெளிப்பட்டது'' என்று பயப்படுகிறன் (யாத். 2:14). அதாவது அவனுடைய திட்டம்பற்றி சமயத்துக்கு முன்னே தெரிய வந்தது என்று மாத்தி ரம் அவன் பயப்படுவதாய் பைபிள் சொல்லுகிறது.

அவனுடையது மனுஷ ஆலோசனை. ஆனல் தேவன் சொல்லுகிறர், ''என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல'' (ஏசா. 55:8). அவனு டைய யோசனை தோல்வியில முடிந்தது. தேவ ஆலோசனையின் படியில்லாது பணம், மற்றும் பல உலக முகாந்திரங்கள் மூலம் ஆத்துமாக்களைப் பிடிக்க நினைப்பதும் மோசேயின் தவறுக்கு

ஒத்ததுதான். எகிப்திலே பெரிய ஆளாக இருந்து ''ஜனத்தை இரட்சிக்கப் போகிறேன்'' என்று மோசேயால் ஒன்றும் செய்ய முடியாமற் போயிற்று. தங்களை மனுக்குலத்தின் இரட்சகர்களாகக் கூறிக் கொண்டவர்கள் எத்தனையோ பேர் சரித்திரத்தில் உண்டு. பைபிளிலும் உண்டு (அப். 5:36 37) ஒன்றும பிரயோஜனப்படவில்லை. மோசே தேவனால் அனுப்பப்பட்டபோதுதான இரட்சிப்பு நிறைவேறிற்று யாத். 4:2 3, 20 - ஆச்சரியமான இந்த வசனங்களைப் பாருங்கள் கோல் மோசேயினுடையதுதான் அவன் அதைக் கீழே போட்டு விட்டுத் தேவன் திரும்பக் கையில் எடுக்கச் சொன்ன பிறகு அது தேவனுடைய கோலாய் எண்ணப்படுகிறது. தன்னுடைய யோசனைகளை விட்டு விட்டுத் தேவ ஆலோசனைக்குக் கீழ்ப்படிந்த பிறகு மோசே தேவசித்தத்தின்படியுள்ள இரட்சகனாகிறான். முதலாவது மோசேதானே எகிப்தை விடவேண்டியதாயிருந்தது. வனாந்திரத்தில் 40 வருஷம் அவனுக்குப் பயிற்சி கொடுத்து. ஞானயறிவை, மனுஷ ஆலோசனையை, சுயத்தை, மற்ற எல்லா எகிப்தின் வாசனையையும் அவனிலிருந்து எடுத்துப் போட்டு. ஏற்றவேளை வந்தபோது எகிப்தோடு கொஞ்சமும் ஐக்கியமில்லாத. எகிப்தின் அடிமையாக இல்லாத ஒரு மோசேயையே தேவன் இப்போது அனுப்புகிறார்.

நம்மைப்போல பாவமுள்ள ஒரு இயேசு அல்ல, நமக்காகப் பாவம் ஆக்கப்பட்ட இயேசுவே [2 கொரி 5:21] நமக்கு இரட்சகரானார். அதனால்தான் ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுசர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை'' (அப். 4:12). மனுசன் பூமியிலிருந்து உண்டானவன்; அவரோ வானத்திலிருந்து வந்த கர்த்தர் (யோ. 8:23; 1 கொரி. 15:47). மனுசனுடைய பாவ சுபாவமுள்ள ஒரு இயேசு அல்ல. அடிமையின் (மனுச) ரூபமெடுத்த இயேசுவே மனுசருடைய மீட்பரானார் (பிலி. 2:6-8). ஆதியில் தேவசாயலாய் பாவமில்லாது சிருஷ்டிக்கப்பட்ட மனுசன் பாவத்தில் விழுந்தபின் அவனுக்குப்பிள்ளைகள் உண்டானபோது அவனுடைய சாயலாய் பாவ சுபாவத்தோடு பிறந்தார்கள் (ஆதி 5:3] இயேசுவோ இந்தப் பாவ சுபாவமுள்ள ஒரு மனுசனிலிருந்து பிறக்கவில்லை. அவர் ஒரு மனுசனாகிய யோசேப்பின் குமாரன் என்று எண்ணப்பட்டார் (லூக்கா 3.23). அவர் ஏற்றவேளை வந்தபோது அவர் ஸ்திரியினிடத்தில் (கலா. 4.4). ஒரு கன்னிகையாகிய மரியாளடத்தில் (மத். 1:16) பரிசுத்த ஆவியால் (லூக்கா 1:35) தோன்றினவர். அவர் மரியாளி

உத்திலும் சரீரம் எடுக்கவில்லை. அவருடைய சரீரம் தேவனால்
ஆயத்தப்படுத்தபட்டு மரியாளுடைய கர்ப்பத்தில் அவரால்
போஷிக்கப்பட்ட ஒன்று (எபி. 10:5) உதாரணமாக வனாந்திரத்
தில் இஸ்ரவேலர் சாப்பிடும்படியாக மன்னா கொடுக்கப்பட்டது.
பூமியிலுள்ள மனுஷர் சாப்பிட்ட மன்னாதான். ஆனால் பூமியிலுள்ள
தானியம் முதலான பொருட்களால் செய்யப்பட்ட மன்னா அல்ல
அது (சங். 78:24, 25) இந்த மன்னா இயேசுவே (யோ. 6:51).
இது இயேசுவின் மனுஷத்துவத்தையும் தேவத்துவத்தையும்
நன்றாய் விளக்கும்.

"என்னில் பாவம் உண்டென்று உங்களில் யார் சொல்லக்
கூடும்" என்று இயேசு கேட்டபோது, ஒருவராலும் அவரைக்
குற்றப்படுத்த முடியவில்லை (யோ. 8:46). "நான் குற்றமில்லாத
இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தேன்" என்று அவருக்குத்
துரோகியாய் மாறின யூதாசும் சாட்சியாய்ச் சொன்னான்
(மத் 27:4). அவரை நியாயம் விசாரித்து, அவர் நீதி
மானென்று அறிந்த பின்பும் யூதருக்குப் பயந்ததினால் அவரைச்
சிலுவையிலறையும்படிக்கு ஒப்புக் கொடுத்த ரோம கவர்னராகிய
பிலாத்துவும் "இவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன்"
(யோ. 19:6, லூக்கா 23:14) என்று எழுதிக் கொடுத்தான்.
அதாவது குற்றமற்றவன் என்று ஒரு நீதிமன்றம் தீர்ப்பு வழங்
கிய பின்னரும் குற்றம் சாட்டப்பட்டவர் தண்டனைக்குள்ளான
சம்பவம் சரித்திரத்திலேயே இது ஒன்றுகத்தான் இருக்க முடியும்.
இப்படி பாவமேயில்லாது, பரிசுத்தராய் மனுஷ வடிவில் வந்த
தேவனாகிய இயேசுவேயல்லாது, நம்மைப் போல ஒரு பாவியால்,
அவன் உலகத்தில் எவ்வளவு உயர்ந்தவனாலும், மகானென்றும்
ரிஷியென்றும் அழைக்கப்பட்டாலும் நம்மை நம்முடைய பாவத்
திலிருந்து இரட்சிப்பது என்பது கூடவே கூடாத காரியம்.

வனாந்திரப் பயிற்சி 40 வருடம் முடிந்தபோது மோசே
எகிப்துக்கு இஸ்ரவேலருடைய மீட்புக்காக அனுப்பப்பட்டான்.
மனுஷன் பாவத்தில் விழ்ந்து 40 நூற்றாண்டுகள் ஆனபோது
இயேசு மனுக்குலத்தின் மீட்புக்காக பூமிக்கு அனுப்பப்பட்டார்.
தேவனுடைய வீட்டில் மோசே எங்கும் உண்மையுள்ளவன் என்று
தேவனே சாட்சி கொடுக்கிறார் (எண். 12:7). தம்முடைய பிதா
வின் வீட்டில் இயேசு உண்மையுள்ளவராக இருந்தார்
(யோ. 4:34, 5:30, 6:38, மத். 26:39, எபி 3:2-6). தேவனு
டைய பயங்கரமான நியாயத் தீர்ப்பு ஜனத்தின்மேல் வர இருந்த

போது, அப்படி நேராதபடி, மோசே தேவனுக்கு முன்பாகத் திறப்பின் வாயிலிலே நின்றான் (சங். 106: 23). அதாவது ஜனத்துக்காக வேண்டுதல் செய்தான். நம்மேல் வரவேண்டிய தேவ கோபாக்கினை இயேசுவின் மேலாகி (ஏசா. 53ம் அதி., ரோ. 5:8,9. யோ. 3:14-18, 36) தேவனுக்கும் நமக்கும் நடுபாகத் திறப்பின் வாயிலிலே அவர் நின்றார். இந்த நியாயத் தீர்ப்பின்று நீங்கி இயேசுவை ஏற்றுக் கொண்ட (ரோ. 8:1) பரிசுத்தவான்களாகிய அவருடைய பிள்ளைகள் தவறுகள் பாவங்கள் செய்யும்போதும் அவர்களுக்காக இப்போதும் தேவனிடத்தில் வேண்டுதல் செய்து பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் (எபி 7:25).

8

பஸ்காவும், இயேசுவின் கல்வாரி மரணமும்

(1 கொரிந்தியர் 5:7)

பஸ்காவைக் குறித்து தேவன் கருத்தோடு எச்சரிப்போடு மோசேயோடு பேசுகிறார் [யாத். 12ம் அதி]. அது நித்திய பிரமாணமாக இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது. அது இயேசுவின் கல்வாரி மரணத்துக்கு நிழலாயிருப்பதினால் அத்தனை விசேஷம் பெற்றது. எகிப்தின்மேல் தேவனுடைய நியாயத் தீர்ப்பு வந்தது. அப்போது எகிப்தியரின் தலைப்பிள்ளைகளெல்லாம் சங்கரிக்கப்பட்டார்கள். இந்த நியாயத் தீர்ப்பு இஸ்ரவேலர் மேலும் வாராதபடி ஒரு பரிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஒரு ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு அதின் இரத்தம் நிலைக்கால்களில் பூசப்பட்டது. சங்கார தூதன் எகிப்தில் வரும்போது இந்த இரத்தம் பூசப்பட்ட வீடுகளைக் காணும்போது கடந்து போவான். பஸ்கா என்றால் கடந்து போதல் என்று அர்த்தம். அதனால்தான் ரோமர் 8:1ல் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களுக்கு [அவருடைய கல்வாரி மரணத்தை விசுவாசித்து ஏற்றுக் கொண்டவர்களுக்கு] இனி நியாயத்தீர்ப்பில்லை என்று பவுல் சொல்லுகிறார்.

மோசே எகிப்தில் எத்தனையோ அற்புதங்களைச் செய்தான் ஆனால் அவை ஒன்றும் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்தினின்று இரட்சிக்கவில்லை. அடிக்கப்பட்ட பஸ்கா ஆட்டுக்

குட்டியின் இரத்தமே அவர்களை இரட்சித்தது. உலகத்தில் எத்தனையோ பெரிய பெரிய சம்பவங்கள் நடந்திருக்கின்றன. நம்முடைய கர்த்தரும் அநேக அற்புதங்களைச் செய்தார். ஆனாலும் அவை அல்ல. இயேசு தம்முடைய கல்வாரி மரணத்தில் சிந்தின அவருடைய இரத்தமே உலகத்தை இரட்சித்தது. வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியென்றும், ஒவ்வொருவருக்கும் ஒரு ஆட்டிக்குட்டி என்றும் வசனத்தில் காண்கிறோம் (யாத். 12:3). ஒரு ஆட்டுக் குட்டிதான் ஒரு வீட்டில் அடிக்கப்படுவது, அதின் அர்த்தம் என்னவென்றால், ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். ''அது எனக்காக அடிக்கப்படுகிற ஆட்டுக்குட்டி'' என்று இயேசு ''உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டி'' ஒவ்வொரு பாவியும் அவர் எனக்காக, என் பாவங்களுக்காக மரித்தார்'' என்று நினைக்க வேண்டும்.

பஸ்காவின் ஆசரிப்பு முறை : பஸ்கா ஆட்டுக் குட்டி ஆணாய், ஒரு வயதுள்ளதாய், பழுதற்றதாய் இருக்க வேண்டும். ஆபிப் மாதம் 10ம் தேதி வீட்டில் கட்டப்பட்டு, 14ம் தேதி [4ம் நாள்] சாயங்காலம் அடிக்கப்பட வேண்டும். அதின் இரத்தம் வீட்டின் பக்கத்து நிலைக்கால்களிலும், மேல் நிலையிலும் (கீழ் நிலையில் அல்ல) பூசப்பட வேண்டும். விடியற் காலத்துக்கு முன்னே பஸ்காவின் மாமிசம் பச்சையாகவோ, தண்ணீரில் வேக வைத்தோ அல்ல. நெருப்பினால் சுடப்பட்டு முழுவதுமாய் சாப்பிடப்பட வேண்டும். கசப்பான கீரையோடும், புளிப்பில்லாத அப்பத்தோடும் அதைப் புசிக்க வேண்டும். புசிக்கும்போது அரையைக் கட்டிக்கொண்டு, கையில் தடிப் பிடித்துக் கொண்டு, காலில் பாதரட்சை அணிந்து கொண்டு தீவிரமாய்ப் புசிக்க வேண்டும்.

இது அத்தனைக்கும் ஆவிக்குரிய அர்த்தமுண்டு. ஒரு வயது என்பது பூரணத்தைக் காட்டுகிறது. இயேசு பூரண மனுஷனாகவும் பூரண தெய்வமாகவும் வந்தார். ஆண் என்பது புருஷத்துவதத்தை குறிக்கும். கல்வாரி மரணத்தில் அடங்கிய சொல்லொண்ணா சரீர மரணத்தின் வேதனையும், உலகத்தின் பாவம் தன்மேல் சுமத்தப்படும்போது, பாவத்தைப் பாராத சுத்தக்கண்ணராகிய தேவனை விட்டுப் பிரியும் அந்த புத்திக் கெட்டாத ஆத்தும மரணத்தின் வேதனையும் எப்படிப்பட்டது என்று நன்றாய் அறிந்திருந்தும், பெரும் போராட்டத்துக் கிடையில் கெத்சமெனே தோட்டத்தில் அதைத் தீர்மானத்தோடு ஏற்றுக் கொண்டதில் இயேசுவின் புருஷத்துவம் விளங்கிற்று.

தீவட்டிகளோடும், பட்டயங்களோடும், தடிகளோடும் தம்மைத் தேடிப் பிடிக்க வந்த கூட்டத்தினரிடம் ''நீங்கள் தேடுகிற இயேசு நான்தான்'' முன்சென்று தம்மை ஒப்புக் கொடுத்ததில் அவருடைய புருஷத்துவம் விளங்கிற்று. பாடுகள் தம்மை எதிர் நோக்கியிருக்கும் எருசலேமுக்குப்போக தம்முடைய முகத்தைத் திருப்பினார் என்று வாசிக்கிறோம் (லூக்கா 9:51). ஆங்கிலத் தில்—He stedfasty set his face to go to Jerusalem—என்று இருக்கிறது. இதே விஷயம் ஏசாயா 50:7ல் (எருசலேமுக்குப் போக) ''முகத்தைக் கற்பாறையைப் போலாக்கினேன்'' -I set ony face like a flint Eng)—என்று வருகிறது. அவருடைய தீர்மானத்தில் எவ்வளவு உறுதி, புருஷத்துவம் பாருங்கள் அதனால்தான் ஒரு புருஷத்துவத்தோடு எருசலேமுக்கு முந்தி (பின்னிட்டு அல்ல) நடந்து போன இயேசுவைக் கண்டு சீடர் கள் (லூக்கா 19:28) பயந்து திகைக்கிறார்கள் (மாற்கு 10:32).

4 நாட்கள் சோதித்த பின்பும் பஸ்கா ஆட்டுக்குட்டியில் பழுது காணக்கூடாது. தேவனுடைய கணக்குப்படி ஒருநாள் என்பது ஆயிரம் வருஷம் (சங். 90:4): மனுஷ சரித்திரம் ஆரம் பித்த நாலாயிரம் வருஷம் ஆனபோது இயேசு பூமிக்கு வந்தார். அது மட்டும் பரலோகத்திலிருந்த அவரில் பழுது காணப்பட நியாயமில்லை. இன்னும் தீர்க்கதரிசனக் கணக்குப்படி ஒருநாள் என்பது ஒரு வருஷம் (எசேக். 4:6) இயேசு நாலு வருஷங்கள் பூமியில் ஊழியம் செய்தார். அவரை விரோதித்தவர்கள் கூட ஒரு குற்றமும் அவரிடத்தில் காணமுடியவில்லை. இனி மனுஷக் கணக்குப்படி (1 நாள் = 1 நாள்) அவர் எருசலேமில் தமது ஜீவியத்தின் கடைசி நான்கு நாட்களும் ஊழியம் செய்யும்போது அவரை வலையில் அகப்படுத்த எவ்வளவோ தந்திரங்களை கையாண்டும் ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. அவரை காட்டிக் கொடுத்தவன், அவரை நியாயம் விசாரித்த ரோம கவர்னர், அவரோடு சிலுவையிலடிக்கப்பட்ட ஒரு கள்ளன் எல்லோரும் அவர் பழுதற்றவர் என்றே ஒரே தீர்ப்பையே கொடுக்கிறார்கள்.

பஸ்கா ஆட்டுக்குட்டி சாயங்காலம் அடிக்கப்பட வேண் டும். யூதருடைய முறைமையில் இது பிற்பகல் மூன்று மணி. இந்த மூன்று மணிக்கும் விசேஷம் உண்டு. ஆதி 3:8ல் பகலின் குளிர்ச்சியான வேளை என்று வருவது மூலபாஷையில் பிற்பகல் மூன்று மணியைக் குறிக்கும். அந்த வேளையில்தான் ஆதாம் பாதீஸை விட்டுப் பாவத்தினிமித்தம் துரத்தப்பட்டான். அதே சமயத்தில், பிற்பகல் மூன்று மணிக்கு இயேசு சிலுவையில் நம்முடைய பாவங்களுக்காக மரித்து அடைபட்ட பரதீஸை

மனுஷருக்குத் திறந்து விட்டார். யூதருடைய மணிக்கணக்கு காலை 6 மணிக்கு ஆரம்பிக்கும். அப்படியானால் 9ம் மணி என்பது பிற்பகல் 3 மணி. அப்போது அவர் ஜீவனை விட்டார் (மத். 27:46) என்று காண்கிறோம். ஆகவே இனி ஒரு பஸ்கா அடிக்கப்படத் தேவையில்லை. காலையில் ஆதாம் கையை நீட்டிக் கனியைப் பெற்றுப் புசித்துப் பாவம் செய்தான். அதே வேளையில் தான்—3ம் மணி நேரத்தில் காலை 9 மணியளவில் இயேசுவின் கைகளில் ஆணிகள் அடிக்கப்பட்டன. (மாற். 5:25) ஆதாம் தான் நிர்வாணியாய் இருப்பதைக் கண்டு தனக்குத்தானே இலைகளைக் கொண்டு ஒரு வஸ்திரத்தை உண்டு பண்ணினான். அது வாடிப்போய் உதிர்ந்து திரும்பவும் தேவன் தோட்டத்துக்கு வருகிற வேளையிலே (3 P.M.) நிர்வாணியாகவே இருக்கிறான். நம்முடைய கர்த்தரும் நிர்வாணியாய் சிலுவையில் கிடந்தார் ஸ்திரீகள் தூரத்தில் நின்று பார்ப்பதற்கு அது ஒரு காரணம் (லூக் 23:49). ஆதாம் தன் சொந்த முயற்சியால் உண்டு பண்ணின ஆடை கெட்டுப்போனது மத்தியானம் 12 மணியளவில். தேவன் ஒரு ஆட்டுக்குட்டியை அடித்து நிரந்தரமான ஒரு தோல் ஆடையை (ஆதி. 3:21) உண்டு பண்ணிக் கொடுத்து 3 மணியளவில் நமக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியான இயேசு நம்முடைய பாவ நிர்வாணத்தை மூடும்படித் தான் நிர்வாணியாகி 3 மணியளவில் மரித்து மனுஷனுக்கு இரட்சிப்பின் வஸ்திரத்தைச் சம்பாதித்துக் கொடுத்தார். மனுஷன் தன்னுடைய யோசனையின்படி ஏற்படுத்திக் கொண்ட எல்லா இரட்சிப்பின் வழிகளும் (இலை ஆடைகள்) ஒன்றுக்கும் உதவாது. தேவ ஆலோசனையின்படி இயேசுவின் மூலம் கொடுக்கப்பட்ட இரட்சிப்பின் வழியோ நிரந்தரமானது. (தோல் ஆடை) இந்த இரட்சிப்பின் வஸ்திரத்தை உண்டாக்க இயேசு சிலுவையில் நிர்வாணியாய்க் கிடந்து துடிப்பதை—தோல் உடை உண்டாக்குவதற்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி துடிப்பதை மறைக்கப் பூமியெங்கும் அந்தகாரம் உண்டானது. ஆறும் மணி நேரம் (மதியம் 12 மணி முதல் 9ம் மணி நேரம் [பிற்பகல் 3 மணி] வரை (லூக். 23:44).

பஸ்காவைப் புசிக்கும்போது கட்டப்பட்ட அரையும், கையில் பிடித்த கோலும், காலில் அணிந்த பாதரட்சையும் அவர்கள் ஒரு பிரயாணத்துக்கு ஆயத்தமாயிருந்ததைக் காட்டும். எகிப்தை விட்டுப் புறப்படவென்று அவர்கள் தீவிரித்துச் சாப்பிட்டார்கள். பிசைந்த மா புளிக்குமுன் (யாத். 12:34) அவர்கள் எகிப்தை விட வேண்டியதிருந்ததென்றால் அவர்கள் எத்தனை

தீவிரமாய்ச் சாப்பிட்டிருக்க வேண்டும்! கல்வாரியின் இரத்தத்தால் இரட்சிக்கப்பட்டவன் உலகத்தைப் பழைய பாவத்தை, ஜீவியத்தை விடத் தீவிரப்பட வேண்டும். பிசைந்த மா புளிக்கு முன்—சத்தியத்தைக் கேட்டுக் கீழ்ப்படிந்து விசுவாசத்துக்குள் வரும்போது உலகத்தின் ஆலோசனைகள், ஆசைகள் வந்து விசுவாசத்தைக் கெடுத்துவிடாதபடி, இரட்சிப்பை நஷ்டப்படுத்து முன் எகிப்தை—உலகத்தை விட வேண்டும். ''உம்மைப் பின்பற்றி வருவேன். ஆனால் முதலில் போய் வீட்டிலிருந்தவர்களிடத்தில் வழியனுப்பிக்கொண்டு வருகிறேன்'' என்று இயேசுவிடம் ஒருவன் சொன்னான். (லூக் 9:61, 62) இயேசு ''சரி'' என்று சொல்லவில்லை. பிசைந்த மா புளிக்குமுன் எகிப்தை விட வேண்டும். வீட்டிலிருப்பவர்களிடம் சொல்லப்போனால் அவர்கள் கொடுக்கும் உபதேசம் ஆலோசனை பிசைந்த மாவைப் புளிக்கச் செய்யாதா? கண்டிப்பாக விசுவாசத்தை விட்டுவிட்டு சத்தியத்தினின்று வழி விலகச் செய்யும் தம்மிடம் சுகம் பெற்ற ஒருவனிடம் ''திரும்பவும் நீ கிராமத்துக்குள் போக வேண்டாம்'' என்று எச்சரித்தார் (மாற். 8:26) அவன் பழைய சூழ்நிலைக்கு ஜீவியத்துக்குத் திரும்பினால் பிசைந்த மா புளித்துப் போகும் என்று அறிந்தே அவர் சொன்னார். மேலும் ஒரு நாள் எக்காளம் தொனிக்கும். இமைப் பொழுதில் மறுரூபமடைவோம். (1 கொரி. 15:51.) ஆமாம், நம்முடைய கர்த்தருடைய இரகசிய வருகைக்காக ஆவலோடு காத்து நிற்கிறோம் அந்த மோட்ச பிரயாணத்துக்கு (கறை திரையற்றவர்களாய் — எபே. 5:27) நம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஏசா. 6ம் அதிகாரத்தில் நாம் காணும் சேராபீன்கள் இரண்டு செட்டைகளால் முகத்தை மூடி, இரண்டு செட்டைகளால் கால்களை மூடி, இரண்டு செட்டைகளை விரித்து எப்போதும் பறப்பதற்கு ஆயத்தமாயிருக்கின்றன. தேவ கட்டளை எப்போது வரும் என்ற ஒரு தயார் நிலையில் அவை இருக்கின்றன. அதுபோலவே விசுவாசிகளும் இப்பொழுது கர்த்தர் வந்தாலும் அவரோடு போகும் ஒரு ஆயத்த நிலையில் எப்போதும் இருக்கவேண்டும்: நாம் பிரயாணிகள் என்பதை மறந்து போகவே கூடாது.

இது உலகத்துக்கு இராக்காலம். ஒரு பகல் காலம் உண்டு அது ஆண்டவருடைய ஆயிர வருஷ அரசாட்சி பகலுக்கு ஆரம்பத்தில் ஒரு விடியற்காலம் உண்டு சூரியன் உதிக்குமுன் தோன்றும் விடிவெள்ளி அந்த விடியற்காலத்தில் வரும்: பகலை ஆளுவது சூரியன் (ஆதி 1:16). நம்முடைய சூரியனை (மல். 4:2) ஆயிரம்

வருஷம் அரசாளும்படி பகிரங்கமாய் வருமுன்னால் விடிவெள்ளி நட்சத்திரமாக (வெளி. 22:16) அந்தப் பகலுக்கு கொஞ்ச நேரத்திற்கு முன் இரகசியமாகத் தம்முடையவர்களைச் சேர்க்கும்படியாய் வருவார். அப்படி விடிவெள்ளி தோன்றும் அந்த விடியற்காலத்துக்காக ''எப்பொழுது விடியும்'' என்று ஜாமக்காரனைப் போலக் காத்து தவிக்கிறோம் (சங். 130:6). அந்த விடியற்காலத்துக்கு முன்பு நெருப்பில் சுட்டு பஸ்காவை முழுவதுமாய் புசிக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் நிறைவைப்பெற்று முழுவதும் வசனத்தின்படியுள்ள ஜீவியத்தில் பரிசுத்தப்படவேண்டும். இயேசு வார்த்தையானவர் (வெளி. 19:13) என்றால், பஸ்காவைப் புசிப்பதும் வசனத்தைப் புசிப்பதும் ஒன்றுதான். அப்படியானால் ''இது வேண்டும். அது வேண்டாம்'' என்று அல்ல முழுச் சத்தியத்தின்படி முழு உபதேசத்தின்படியுள்ள ஜீவியம் வேண்டும். நம்முடைய ஜீவியம் முழுவதும் வசனத்தின்மேல் கட்டப்பட்டதாக இருக்க வேண்டும்.

பஸ்காவின் இரத்தம் நிலைக்கால்களில், மேல் சட்டத்தில் பூசப்பட வேண்டும் கீழ்ச் சட்டத்தில் பூசக்கூடாது. அதாவது காலில் பஸ்காவின் இரத்தம் மிதிபடக்கூடாது. இதற்கு எபிரேயருக்கு எழுதின நிருபத்தில் விளக்கம் தரப்படுகிறது. (எபி. 10:26-31). இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட ஒரு விசுவாசி மீண்டும் பாவத்திற்குள் விழுவானானால் அவன் தேவனுடைய குமாரனை காலின்கீழ் மிதிக்கிறானென்றும், அவனைப் பரிசுத்தப்படுத்தின இரத்தத்தை அசுத்தப்படுத்துகிறானென்றும், கிருபையின் ஆவியை நிந்திக்கிறானென்றும் வசனம் சொல்லுகிறது. அப்படிப்பட்டவர்களுக்குக் கடுமையான தேவ தண்டனையுண்டு என்றும் வசனம் எச்சரிக்கிறது (எபி. 6:4-8): அதனால் தான் பவுலும் தகுந்த பரிசுத்தமில்லாமல் கர்த்தருடைய பாத்திரத்தில் பானம் பண்ணாதபடிப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று எச்சரிக்கிறார் (1 கொரி. 11:27)

கசப்பான கீரையோடு பஸ்காவைப் புசிக்க வேண்டும். எகிப்தின் அடிமைத்தனத்தில் தாங்கள் பட்ட கசப்பான அனுபவங்களை நினைவு கூர்ந்து தங்களை அதிலிருந்து விடுவித்திருக்கிற பஸ்காவை நன்றியோடு புசிக்க வேண்டும். கசப்பு பாவத்தைக் காட்டும் (எபி 12:15). கல்வாரி மரணத்தினால் மீட்கப்பட்ட ஒருவன் தன் பாவத்துக்கு அடிமையாய் ஜீவித்த காலத்துப் பரிதாப நிலையை நினைத்தும், ''பாவத்துக்குச் சம்பளமான மரணத்திலிருந்து'' தான் மீட்கப்பட்டிருப்பதை உணர்ந்தும் இயேசுவை

ஸ்தோத்தரிப்பாளுக! எகிப்து உபத்திரவத்தையும், கண்ணீரையும், புலம்பலையும் குறிக்கும் (2 ராஜா. 14:26. Eng; எரே. 6:26; 31:15, ஆமோஸ் 5:10) எகிப்தின் உபத்திரவம் மாத்திரமல்ல வனாந்தர ஜீவியத்திலும் அநேக உபத்திரவங்கள் இஸ்ரவேலுக்குக் காத்திருந்தன; நம்முடைய புதிய விசுவாச ஜீவியத்திலும் வேறு விதமான (ஆனால் நிச்சயமாக) உபத்திரவங்கள் உண்டு. ஏனென்றால் "அநேக உபத்திரவங்கள் மூலமாகத்தான் தேவனுடைய ராஜ்யத்தை (கானானைச்) சுதந்தரிக்க வேண்டும் என்பது தேவசித்தம் (யோ. 16:33 மத் 5:10-12). ஆனால் பரலோகத்தில் நமக்குப் பலன் மிகுதியாயிருப்பதால் நாம் உபத்திரவத்தினிமித்தம் சந்தோஷப்பட்டுக் களிகூர வேண்டும் என்கிறார் நம்முடைய கர்த்தர்.

புளிப்பில்லாத அப்பத்தோடு பஸ்காவைப் புசிக்கவேண்டும் கிறிஸ்தவன் தன் ஜீவியத்திலும் உபதேசத்திலும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். புளிப்பு உபதேசத்தில் உள்ள மாறுபாட்டையும் (மத். 16:5,6,11,12), ஜீவியத்தில் உள்ள தாறுமாறையும் (1 கொரி. 5:1-8) காட்டும்.

உபதேசத்தில் உள்ள புளிப்பு :

துர் உபதேசம் என்பது வேதத்தைப் புரட்டுகிறது என்று அர்த்தம் (2 பே. 3:16). வேதத்தின் சத்தியத்தை மாறுபாடாய் (அப் 2:40; 20:30) பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியல்ல. தங்கள் மூளையறிவில் நின்று சூழ்நிலைக்கேற்றவாறு தேவ வசனத்தைக் கலப்பாய் பேசுகிறவர்கள் (II கொரி 2:17)

தேவனுடைய வசனத்தினால் மறுபிறப்பு உண்டாகிறது என்பது சத்தியம் (1 பே. 1:13, யாக். 1:18). இல்லை, ஞானஸ்நானத்தில் உண்டாகிறது என்பது துர் உபதேசம் விவாகம் கனமானது. பரிசுத்தமானது என்பது வசனம் (எபி. 13:14), அது அசுத்தமானது. விவாகம் பண்ணக்கூடாது என்பது பிசாசுகளின் உபதேசம் (1 தீமோ. 4:1-3).

துர் உபதேசக்காரர் மூலமும் தேவனுடைய கிரியைகள் நடக்கிறதே!? நியாயமான கேள்விதான். பிலேயாம் தேவனுடைய ஆவியைக் கொண்டுதான் பேசினான். அவன் சொன்ன தீர்க்கதரிசனமெல்லாம் சரிதான் ஆனால் பிரித்தெடுத்த அநுபவம் தேவையில்லையென்பது அவனுடைய உபதேசம் (2 பே. 2:15,16; வெளி 2:14, 15). அதனால் இஸ்ரவேலர் மோவாபியரோடு கலந்து விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதைப் புசித்துத் துன்

மார்க்கத்திலும் விழுந்தார்கள். அதின் பலனய் 24,000 பேர் செத்துப்போனர்கள் (எண். 25:9). பிலேயாமும் பட்டயத்தினல் வெட்டப்பட்டு மடிந்தான். ஆகவே பவுல் சொல்லுகிறபடி ''அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியாவது (தேவனுடைய நியாயத்தீர்ப்பு) பரிசோதிக்கும்'' (1 கொரி. 3:11-15). தேவனுடைய ஊழியக்காரர்தான் இமனேயும் அலெக்சந்தரும் ஆனல் துர் உபதேசம் கொண்டு அநேகருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப் போட்டார்கள். அவர்களைப் பவுல் சாத்தானுக்கு ஒப்படைத்தார் (1 தீமோ. 1:19, 20, II தீமோ 2:17,18). தேவ கோபம் அவர்கள் மேல் அப்படிப் பற்றி எரிகிறது. அதனல்தான் துர் உபதேசக்காரருக்கு வாழ்த்துதல் சொல்லவோ, வீட்டில் ஏற்றுக் கொள்ளவோ வேண்டாம் என்று யோவான் எச்சரித்துப் புத்தி சொல்லுகிருர் (II யோ. 8.11). நம்முடைய கர்த்தரும் பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய துர் உபதேசத்தைக் கண்டித்துப் பேசினர் (மாற்கு 8:15). பவுலும் துர் உபதேசக்காரரைக் குறித்து எச்சரித்தார். இந்தக் கடைசிக் காலங்களில் ஜனம் சத்தியத்துக்குச் செவிகொடாமல் தங்கள் இச்சைகளுக்கேற்ற, காதுக்கின்பமான துர் உபதேசப் பிரசங்கங்களைக் கேட்கப்போகும் என்று பவுல் மூலம் பரிசுத்த ஆவியானவர் அன்றே உரைத்தார் (II தீமோ. 4:3).

ஜீவியத்திலுள்ள புளிப்பு :

கொரிந்து சபை பலவித கிருபையின் வரங்களால் நிறைந்த ஒன்று. அப்படிப்பட்ட சபையில் ஒரு விசுவாசி விபச்சார பாவத்திலிருந்தான். ஒருவேளை அவன் பெரிய மனுஷன் என்பதாலோ மற்றச் சபையார் அவனைக் கண்டிக்கவில்லை. ஆனல் அதைக் கேள்விப்பட்டவுடனே பவுல் வெகுவாய் அவனுடைய பாவத்தைக் குறித்தும். சபையாருடைய நிர்விசாரத்தைக் குறித்தும் கடிந்து பேசுகிருர். (1 கொரி. 5ம் அதி) கொஞ்சம் புளித்தமாவுதான்; ஆனல் பிசைந்த மா முழுவதையும் புளிக்கப்பண்ணும் என்று சுட்டிக் காட்டுகிருர். ஒருவனிலுள்ள பாவம் கண்டிக்கப்பட்டு அவன் பரிசுத்தப்படாவிட்டால் மற்றவரும் கெட்டுப்போக ஏது வாகும் (எபி. 12:15). இவ்விதமாய் கண்டிக்கப்பட்ட அந்த விசுவாசி மனக் கடினத்தில் விழாதபடி (எபி. 3:13) பாவ உணர்வுள்ளவனுய்த் திருந்தினன் திரும்பவும் சபையில் சேர்த்து கொள்ளப்பட்டு நித்திய ஜீவனை இழந்துபோகாதபடி காத்து கொண்டான் (II கொரி 7.8-16) இப்படிப்பட்ட நிலையில் திரும்ப

வரும் விசுவாசியைத் மன்னித்துத் திரும்பவும் சபையில் சேர்த்துக் கொள்ளலாம். அவன் அழுது தேவனோடு ஒப்புரவாகிவிட்டான் அல்லவோ! ஆனால் சாத்தானுக்கு ஒப்படைக்கப்பட்ட அவன் மாம்சத்தில் மிகவும் பாதிக்கப்பட்டான் என்பதை மறக்கலாகாது. பாவம் செய்த தாவீதுக்கு தேவன் மன்னிப்புக் கொடுத்தாரே என்று பாவத்தின் வஞ்சனையினால் இழுக்கப்பட்டுச் சிலர் பாவம் செய்து தங்களைச் சமாதானப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் மன்னிப்பு கிடைத்தபோதிலும் தாவீது பட்ட அடிக்குக் கணக்கு உண்டோ! ஐயோ, பெற்ற மகனால் உண்டான உபத்திரவம், அவமானம், பூதா தவிர மற்றக் கோத்திரத்தாருடைய கலகம், சீமேயினுடைய நிந்தனை, கடைசியாக மரணப் படுக்கையிலும் கூட அவனைத் தொடர்ந்து வந்த பட்டயம்—இனியும் வேறு என்ன வேண்டும்! ஆகவே தேவனுடைய சபை ஜீவியத்திலும் உபதேசத்திலும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். ஏனெனில், "நான் பரிசுத்தராயிருப்பது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கொஞ்சம் புளித்த மாவு தான்; ஆனால் பிசைந்த மா முழுவதையும் புளிக்கப் பண்ணிவிடும்.

பாவத்தில் விழுந்துபோன விசுவாசியோடு நடந்துகொள்ளும் விதம்

ஒருவனுடைய பாவத்தைக் குறித்துக் கேள்விப்படும்போது முதலாவது அவனுக்காகப் பாரத்தோடு ஜெபிக்க வேண்டும் (1 யோ. 5:16). பாவத்தில் விழுந்தது சவுல் — இராமுழுவதும் ஜெபத்தில் இருந்தது சாமுவேல் (1 சாமு. 15:11). இதில் தன் கண்ணில் உத்திரம் வைத்துக் கொண்டு பிறன் கண்ணிலுள்ள துரும்பைப் பார்க்கும் நிலையில் போகக்கூடாது. முதலாவது தான் அந்தப் பாவத்தில் இல்லாத பரிசுத்த நிலையில் இருக்கிறதைத் தேவசந்நிதியில் நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டும். பின்பு அவன் தனித்திருக்கையில் அவனோடு அவன் குற்றத்தைக் குறித்து உணர்த்திப் பேசி போதனை கொடுக்கவேண்டும் (மத் 18 15, எபே. 5:19, 1 தீமோ. 4:13). சாந்தமுள்ள ஆவியோடே அவனை அணுகவேண்டும் என்பது பவுலின் ஆலோசனை (கலா. 6:1) இப்படிச் செய்தும் அவன் திருந்தாமற்போனால் இன்னும் இரண்டு பேரோடு அவனிடம் போகவேண்டும் (மத் 18:16). அவர்கள் அவனோடு ஞானமாய் இடைபடவேண்டும் (1 கொரி. 6:5) இதற்குப் பின்பும் அவன் சரிப்படாவிட்டால் சபையில் இக்காரியத்தைப் பற்றிச் சொல்லவேண்டும் அப்படிச் சபைக்கும் அவன் கீழ்ப்படாமற்போனால் சபையைவிட்டு அவனை நீக்க

வேண்டும். (மத். 18:17, 18) இனி அவன் புறஜாதியை அல்லது அஞ்ஞானியைப் போலவும் எண்ணப்பட வேண்டும். அதாவது இரட்சிக்கப்படாத அவிசுவாசியைப் போலாவான். அவனோடு எந்தவிதமான ஐக்கியமும் மற்ற விசுவாசிக்குக் கூடாது (1 கொரி. 5:11, 12): பாவத்தில் விழுந்துபோன விசுவாசியை எப்படியும் சரிப்படுத்தித் திரும்பவும் தேவனோடுள்ள ஐக்கியத்திற்குள் கொண்டு வரப் பிரயாசப்படுவது மற்றெல்லா விசுவாசிகளின் மேலும் விழுந்த கடமையாயிருக்கிறது (யூதா 22ம் வச).

பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டபோது இஸ்ரவேலர் பெற்றுக்கொண்ட விடுதலைகள் நான்கு

1 பார்வோனிடமிருந்து விடுதலை :

இயேசு பிசாசின் வல்லமையில் அகப்பட்டவரை விடுதலையாக்குகிறவராகச் சுற்றித் திரிந்தார் (அப் 10:38) சாத்தானின் அதிகாரத்திலிருந்தும் பாவத்தின் வல்லமையிலிருந்தும் இயேசுவின் இரத்தத்தின் மூலம் விடுதலையுண்டாகிறது (அப். 26:18). இருப்பு இரதங்களையுடைய பலம் பொருந்திய இராஜாவான பார்வோனுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாவது என்பது ஒரு சாதாரண காரியமல்ல திரும்பவும் இஸ்ரவேலரை அடிமைப்படுத்தும் நோக்கத்துடன் அவர்களைத் தொடர்ந்து வந்த பார்வோனும் அவனுடைய சேனையும் முற்றிலுமாய் அழிந்தனர் (யாத். 15:4,5,9,18) இப்பிரபஞ்சத்தின் தேவனும் ராஜாவுமான சாத்தானி (11 கொரி. 4:4) டமிருந்தும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளாகிய அவனுடைய சேனையிடமிருந்தும் (எபே 6:11) இயேசுவாலேயன்றி வேறொருவராலும் நம்மை விடுதலையாக்க முடியாது சாத்தான் சிங்கம் (1பேது. 5:8) அவ்வளவு பலம் பொருந்தினவன். அவனிடமிருந்து அவனைக்காட்டிலும் பலம் பொருந்திய யூதா கோத்திரத்துச் சிங்கமாகிய (வெளி 5:5) இயேசுவால்தான் நம்மை விடுவிக்க முடியும்.

2 எகிப்திலிருந்து அல்லது எகிப்தியரிடமிருந்து விடுதலை

உலக முறைமைகள் வழிபாடுகளிலிருந்து விடுதலை கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் முன்னோர்கள் முறைய ஆதரித்து வந்த பாரம்பரியங்களிலிருந்து விடுதலை (1பே. 1:18,19) மனுஷ கற்பனைகளான பாரம்பரியங்களிலிருந்து விடுதலை (மாற்கு 7:7-9) உலகத்துக்கு ஒத்த வேஷம் (ரோ 12:2) தரிக்காதபடி உலகத்தால் கறைப்படாத (யாக் 1:23) ஒரு விடுதலையான ஜீவியம் நாம் உலகத்திலிருக்கிறோம் ஆனால் உலகம்

தமக்குள் வரக்கூடாது படகுதான் தண்ணீரில் மிதக்க வேண்டும். தண்ணீர் படகுக்குள் வரக்கூடாது. உலகத்தாருடைய மார்க்கங்களைக் கற்றுக் கொள்ளாதிருங்கள் என்பது தேவகட்டளை (எரே. 10:1) உலகத்தை ஜெயித்தவர் இயேசு (யோ. 16:33) அவருடைய இரத்தால் மீட்கப்பட்டவர்களும் உலகத்தை ஜெயித்துக் கொண்டேயிருக்கிறார்கள் (1யோ 5:4).

3 தரித்திரத்திலிருந்து விடுதலை.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்படும்போது பொன்னோடும் வெள்ளியோடும் புறப்பட்டார்கள் (யாத் 12.35,36 சங். 105:37) ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் மீட்கப்பட்ட அவருடைய சபையில் தரித்திரன் இருக்கக் கூடாது என்பது தேவனுடைய சித்தம் (உபா. 15:4,5,6) நீ கடன் வாங்குவதில்லை கொடுப்பாய் என்பது அவருடைய வாக்குத்தத்தம் (உபா. 28:12) (இரட்சிக்கப்பட்ட) பிரியமானவனே உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து (Prosper-Eng) சுகமாயிருக்க வேண்டும் என்பதே (IIIயோ. 2) பரலோகத்தின் வாஞ்சையாயிருக்கிறது.

4 வியாதியிலிருந்து விடுதலை.

எகிப்திலிருந்து புறப்பட்டபோது இஸ்ரவேலருடைய கோத்திரத்தில் பெலவீனப்பட்டவன் ஒருவனுமில்லை என்று வசனம் சொல்லுகிறது (சங். 105:37) பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தால் மீட்கப்பட்ட பிறகுதான் அப்படியாயிற்று அதை இப்படி விளக்கலாம். நெருப்பினால் சுட்ட பஸ்கா மாமிசத்தை புளிப்பில்லாத அப்பத்தோடு மீட்கப்பட வேண்டிய ஒவ்வொருவனும் புசிக்க வேண்டியதாயிருந்தது. புளிக்காத மாவு கொண்டு செய்யும் அப்பமும் தண்ணீரில் வேகவைக்காத மாமிசமும் எவ்வளவு கடினமாயிருக்கும் என்று நாம் அறிவோம் அப்படியானால் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு இரத்தம் நிலைக்கால்களில் பூசப்பட்டவுடனே வீட்டில் இருந்த எந்த வியாதியஸ்தனும், பெலவீனனும், வயோதிபனும் ஆரோக்கியம் பெற்று பஸ்காவைப் புசித்தார்கள். அதைப் புசிக்கத்தக்கப் பெலனடைந்தார்கள் என்பதே நடந்திருக்க வேண்டிய காரியமாகும். இது அற்புதம்தான். ஆமாம் அவர் தம்முடைய வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கினார் (சங். 107:20) இயேசுவின் இரத்தத்தால் ஒருவனுடைய பாவங்கள் மன்னிக்கப்படும்போது அவனுடைய நோய்களெல்லாம் குணமாகிறது (சங். 103:3) தேவன் இயேசுவை நமக்காகச் சிலுவையில் வியாதியுமாக்கினார் — God made him

SICK — என்பதே மூல பாஷையிலுள்ள பொருள் (ஏசா. 53:5). அதனால்தான் பேதுரு "அவருடைய தழும்புகளால் நாம் குணமாகிறோம்" (1பே. 2:24) என்று எடுத்துச் சொல்கிறார். அன்றைய வழக்கத்தின்படி இயேசு வாரினால் அடிக்கப்பட்டபோது அவர்மீது 39 அடிகள் விழுந்திருக்க வேண்டும் (II கொரி. 11:24) உலகத்தின் வியாதிகளுக்கு அடிப்படைக் காரணங்கள் 39 என்று மருத்துவ வல்லுநர்கள் சொல்லுகிறார்கள். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் என்றால் அவருடைய தழும்புகளால் குணமாக்க முடியாத ஒரு வியாதியேனும் உலகத்தில் இல்லை. அல்லேலூயா! மேலும் நாம் பார்த்த III யோவான் 2ம் வசனத்தின்படி மீட்கப்பட்டவன் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கவும் (in health-Eng) வேண்டும் என்பதே தேவசித்தமும் அவருடைய வாக்குத்தத்தமுமாயிருக்கிறது.

பஸ்கா இராப்போஜனத்துக்கு நிழல்

பஸ்கா ஆசரிக்கப்பட்டது முதலாவது எகிப்தில் பின்பு தேவனால் இது வருஷந்தோறும் உள்ள ஒரு ஆசரிப்பாக நியமிக்கப்பட்டது. இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டது முதலாவது ஆசரிக்கப்பட்ட பஸ்கா பின்பு வருஷந்தோறும் ஆசரிக்கப்பட்ட பஸ்கா அதின் நினைவுகூருதலுக்காக (யாத் 12:14 உபா. 16:3) இயேசுவின் கல்வாரி மரணம் உலகத்தைப் பாவத்திலிருந்து மீட்டது இந்தக் கல்வாரி மரணத்தின் நினைவுகூருதலுக்காக கர்த்தருடைய இராப்போஜனம் கர்த்தராலேயே நியமிக்கப்பட்டது [லூக் 22:19 1கொரி. 11:25] ஆகவே எகிப்தில் ஆசரிக்கப்பட்ட பஸ்கா கல்வாரி மரணத்துக்கும், அதன் பின்னர் ஆசரிக்கப்பட்ட பஸ்கா கர்த்தருடைய இராப்போஜனத்துக்கும் நிழலாயிருக்கிறது. புதிய ஏற்பாடு பொருளும் பழைய ஏற்பாடு நிழலுமானால் கர்த்தருடைய இராப்போஜன ஆசரிப்பு ஒழுங்கு நமக்கு பழைய ஏற்பாட்டு வசனத்திலிருந்தே கிடைக்கும். கர்த்தருடைய இராப்போஜனம் நினைவுகூருதலுக்காக என்றால், கத்தோலிக்கர் சொல்வதுபோல இராப்போஜனத்தில் பரிமாறப்படும் அப்பமும் திராட்சரசமும் கர்த்தருடைய சரீரமாயும் இரத்தமாயும் மாறுகின்றன என்பது வசனத்துக்கும் சத்தியத்துக்கும் விரோதமான உபதேசமல்லவா?

எகிப்தை விட்டு, செங்கடலைக் கடந்து, வனாந்திரத்துக்கு வந்த பின்புதான் நினைவு கூறுதலின் பஸ்கா ஆசரிக்கப்பட்டது அப்படியே உலகத்தை வெறுத்து மனந்திரும்பி—எகிப்தைவிட்டு—பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று - செங்கடலைக் கடந்து [1 கொரி. 10:1-3, அப். 2:38]-மாறுபாடுள்ள சந்ததியை

விட்டு விலகிப் பிரித்தெடுத்த அநுபவத்தில் வந்து — வருந்தாத்தில் [அப். 2:40] இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளே இராப்போஜனத்தில் பங்குபெற வேண்டும் இரட்சிக்கப்பட்டவர்களே அதில் பங்கு பெற வேண்டும் என்பது வசனம் பணத்தினால் கொள்ளப்பட்ட அடிமையானவன் பஸ்காவை ஆசரிக்கலாம் [யாத். 12:44] கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் [1பேது. 1:18, 19] கிரயத்துக்குக் கொள்ளப்பட்ட [1கொரி. 6:20, 7:23] அவருடைய அடிமைகளான விசுவாசிகள் பங்கு பெறலாம். விருத்தசேதனம் பண்ணப்பட்டவனே புசிக்கலாம் [யாத். 12:48]. புதிய ஏற்பாட்டில் விருத்தசேதனம் மறுபடி பிறப்பின் அநுபவத்தைக் காட்டுகிறது [கொலே. 2:11, ரோ. 2:28,29] இப்படியாக மறுபடியும் பிறந்த விசுவாசியானவனே இராப்போஜனத்தில இடம் பெற வேண்டும் அந்நிய ஜாதிக்காரர்கள், பரதேசிகள், கூலியாட்கள் பஸ்காவைப் புசிக்கக்கூடாது [யாத். 12:43, 45] "அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாகிய" [எபே. 2:10] விசுவாசிகளே **தேவனுடைய பிள்ளைகளே** இராப்போஜனத்தில் பங்கு பெற வேண்டும்: இஸ்ரவேலனிலும் அதாவது தேவ ஜனத்திலும் பிரேதத்தால் தீட்டு பட்டவனும், தூரப பிரயாணம் போனவனும் குறித்த நாளிலல்ல அடுத்த மாதம் அதே நாளில் பஸ்காவை ஆசரிக்கவேண்டும் [எண். 9:9-11] பிரேதம் பாவத்திலும் அக்கிரமத்திலும் மரித்துக் கிடக்கிற [எபே 2:1] அவிசுவாசியை காட்டுகிற விசுவாசியானவன் உலகத்தாரோடு ஐக்கியப்பட்டு அசுத்தப்பட்டாலே அவன் இராப்போஜனத்தில் பங்கு பெறக்கூடாது என்றால், அந்தப் பிரேதத்தோடு, அவிசுவாசியோடு சேர்ந்து இராப்போஜனம் எடுப்பது எப்படி? விசுவாசிக்கும், அவிசுவாசிக்கும் ஐக்கியமேது? [2கொரி. 6:15,16, 1கொரி 10:20.]. தூரப் பிரயாணம் போனவனும் குறித்த காலத்திலுள்ள பஸ்காவையல்ல, அடுத்த மாதம் அதை ஆசரிக்க வேண்டும் [எண். 9:10]. இருதயத்தில் தேவனை விட்டுத் தூரமானவர்கள் [எபே. 2:13, ஏசா 59:2] இருதயம் கொண்டு எகிப்துக்குத் திரும்பினவர்கள் [அப். 7:39] அதாவது உலக காரியங்களில் மூழ்கிப்போய் ஜெபத்திலும், வசனத்தை வாசித்து தியானிப்பதிலும், சபையின் ஐக்கியத்திலும் சரிவர இல்லாத விசுவாசி தேவனுக்கு முன்பாகத் தன்னைச் சரிபடுத்திக் கொண்டு இராப்போஜனத்தில் பங்குபெற வேண்டும். இப்படியிருக்க தூரத்திலேயே இருப்பவனோடு அவிசுவாசியோடு இராப்போஜனம் பெறுவது எப்படி? இத்தகை பரிசுத்தமானதென்று பஸ்கா இராப்போஜனம்

ஆகையால் தகுந்த பரிசுத்தமில்லாமல் பங்குபெறுவது தண்டனைக்குரியது ஆகும் என்று பவுல் எச்சரிக்கிறார் [1 கொரி. 11:27-31].

மற்றப்படி, சுத்தமுள்ளவனுமிருந்து, பிரேதத்தால் தீட்டுப்படாதவனும், தூரப்பிரயாணம் போகாதவனுமாயிருந்தால் ஒரு இஸ்ரவேலன் கண்டிப்பாகப் பஸ்காவை ஆசரிக்க வேண்டும் (எண். 9:13) அதற்குரிய இஸ்ரவேலனாகிய விசுவாசியும் தகுந்த பரிசுத்தத்தில் இருந்தால் கண்டிப்பாக இராப்போஜனம் பெற வேண்டும். அதின் மூலம் அவன் "என்னுடைய மரணத்தை நினைவு கூறுங்கள்" என்ற கர்த்தருடைய |கட்டளையை நிறைவேற்றுகிறான். (2) தனக்குத் தேவனோடும் தேவனுடைய பிள்ளைகளோடும் உள்ள ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறான். (3) "கர்த்தர் வருமளவும்" என்று வாசனத்தில் காண்பதால் (1 கொரி 11:26) அவர் வருவார் என்ற விசுவாசத்தைத் தெரிவிக்கிறான். மேலும் அவரோடு கூடத் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பந்தியிருக்கப் போவதை ஆவலோடு எதிர்பார்த்தும் நிற்கிறான் (மத். 26:29).

இராப்போஜனம் நடத்த வேண்டிய இடம்

எகிப்தில் ஆசரிக்கப்பட்ட பஸ்காவுக்கும், பின்பு ஆசரிக்கப்பட்ட நினைவுகூறும் பஸ்காவுக்கும் ஒரு பெரிய வித்தியாசமுண்டு. முன்னது ஒவ்வொரு வீடுகளிலும் அடிக்கப்பட்டது. பின்னது தேவனுடைய ஸ்தானத்தில் — ஆலயத்தில் மாத்திரம் அடிக்கப்பட்டது. (உபா. 16:5-7) ஆகவே இராப்போஜனமும், ஆலயம் என்ற பழைய ஏற்பாட்டு நிழலுக்குப் பொருளான ஜீவனுள்ள தேவனுடைய சபையில் (1 தீமோ 3:15) நடத்தப்பட வேண்டும். சபை என்பது கட்டிடம் அல்ல, "எங்கே என் நாமத்தினாலே இரண்டு மூன்று பேர் கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் நான் இருப்பேன்" என்று சொன்ன கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின்படி (மத். 18;20) விசுவாசிகள் கூடுகிற இடமே சபை.

இராப்போஜனம் நடத்த வேண்டியவர்

ஆலயம் என்றால் அங்கே தேவ ஊழியத்துக்கென ஆசாரியர்கள் உண்டு. தமது ஆசாரிய ஊழியத்துக்கென்று லேவியரைத் தேவன் பிரித்தெடுத்தார். தேவனால் பிரித்து அழைக்கப்பட்டாலொழிய அவருடைய ஊழியத்தை ஒருவனால் செய்யமுடியாது (எபி 5:4) கர்த்தருடைய உயிர்த்தெழுதலினால் சபைக்குக் கிருபா வரங்களும், ஊழியர்களும் கிடைக்கப்பெற்றது (எபே. 4:7-13) தேவன் தமக்கு வேண்டிய ஊழியர்களை அழைத்துப் பிரித்து எடுத்தார். ஊழியர்களை நியமிப்பது தேவனே (1 கொரி. 12:28)

எல்லோரும் விசுவாசிகளே. ஆனால் அவர்களிலிருந்து தேவன் ஊழியக்காரரைத் தெரிந்தெடுக்கிறார் (அப். 13:42). இந்த ஊழியக்காரரே புதிய ஏற்பாட்டு லேவியர்கள். இவர்களே சபை கூடும் ஆலயத்தில் நினைவு கூருதலின் பஸ்காவாகிய இராப் போஜனத்தை நடத்த வேண்டும். மற்றப்படி விசுவாசிகள் நடத்தக் கூடாது. (ரோ. 12:3).

9

எகிப்தை ஏன் விட்டார்கள்?

அடுத்ததாக தேவனுடைய ஜனம் எகிப்தை விடவேண்டியதின் காரணம் என்ன என்பதை நாம் அறிய வேண்டும். (1) தேவன் ஆபிரகாமோடு "உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அந்த தேசத்தாரை சேவிப்பார்கள் என்றும், அவர்க்ள் பல வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும்,......நாலாம் தலைமுறையிலே அவர்கள் இவ்விடத்திற்கு திரும்பி வருவார்கள் .... ஆதி 15:13-16. ஆகையால் ஜனம் எகிப்தை விடவேண்டியது அவசியம். (2) தேவனை ஆராதிப்பதற்காக தேவன் தம் ஜனத்தை எகிப்திலிருந்து விடுவித்தார். ஏனென்றால் தம் ஜனம் எகிப்திலிருந்து அவிசுவாசிகளோடு தேவனை ஆராதிக்கக் கூடாது என்பது தேவனுடைய திட்டம்.

அந்தப்படியே புதிய ஏற்பாடு விசுவாசிகளாகிய நமக்காகவும் தேவனால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒரு வீடு பரலோகத்தில உண்டு. எபி 11:10. அந்த வீட்டுக்கு நாம் போக வேண்டும். ஆகையால் நாம் எகிப்தாகிய உலகத்தை விட்டுத்தான் ஆக வேண்டும்.

அதுமாத்திரமல்ல. நாம் பரிசுத்தரான தேவனை ஆராதிக்கிறவர்கள். அவர் பரிசுத்தராயிருக்கிறபடியால் நாமும் பரிசுத்தராயிருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நாமும் அவிசுவாசிகளிடம் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்களாய் தேவனை ஆராதிக்க வேண்டும்.

ஆராதனையும் அதின் முக்கியத்துவமும்

வேதாகமத்தில் மிக முக்கியமான ஒன்றுதான் ஆராதனை. தேவனை ஆராதிப்பதற்காக தேவன் தம்ஜனமாகிய இஸ்ரவேலரை எகிப்திலிருந்து மீட்டுக்கொண்டார். 'வனாந்தரத்தில் எனக்கு

ஆராதனை செய்ய என் ஜனங்களை அனுப்பிவிடவேண்டும் என்று சொல்லுப படி எபிரேயருடைய தேவனாகிய சர்த்தர் என்னை உம மிடத்திற்கு அனுப்பியும் யாத் 7:16. ''எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு'' யாத் 8:1,20; 9:1,13; 10:3,7,8; 10:24 தேவன் தம் ஜனம் தம்மை ஆராதிப்பதற்காக அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். தேவன் நம்மை பாவத்திலிருந்தும், சாத்தானுடைய அடிமைத் தனத்திலிருந்தும் விடுவித்ததின் நோக்கம் நாம் அவரை ஆரா திக்க வேண்டும் என்பதே.

ஆபிரகாம்; ஈசாக்கு, யாக்கோபு முதலிய நம்முடைய முப்பிதாக்கள் தேவனை ஆராதனை செய்தார்கள். ஆபிரகாம் தான போன எல்லா இடங்களிலும் தேவனை ஆராதிப்பதற்காக பலி பீடத்தைக் கட்டினார்.

இயேசு ஆராதனையைக் குறித்து மக்களிடம் உபதேசித்தார் ஆதி திருச்சபை ஞாயிற்றுக்கிழமையில் ஒழுங்காய் தேவனை ஆராதனை செய்தார்கள். ஆராதனையின் ஒழுங்கைக் குறித்துப் பவுல் சபைக்கு எழுதினார். மேலே காணகிற பிரகாரம் ஆராதனை மிகவும் முக்கியமான ஒன்று தான் என விளங்குகிறது.

யாரை ஆராதிக்கவேண்டும்? யாரை ஆராதிக்கக் கூடாது?

i] சாத்தானை ஆராதனை செய்யக்கூடாது. மத்:4:9 ''என்னைப் பணிந்து கொண்டால் இவைகளையெல்லாம் நான் உமக்குத் தருவேன்'' என்று சாத்தான் சோதிப்பதற்காக இயேசு விடம் சொன்னான். சாத்தானை ஆராதிக்கிறவர்களாகிய ஒரு நல்ல கூட்டம் இன்று உலகத்தில் உண்டு. அமெரிக்காவிலும், இங்கி லாந்திலும் சாத்தானுக்காக கோவில்களைக் கட்டி ஆராதனை நடத்துகிறவர்கள் உண்டு. தமிழ்நாட்டில் சாத்தான் கோவில்கள் தாராளமாகக் காணலாம். இப்படி சாத்தானை ஆராதிக்கிறவர் களாகிய அநேகரை சாத்தான் உலகில் தயார் பண்ணியிருக் கிறான். ஆனால் நாம் சாத்தானை ஆராதிக்கக் கூடாது.

ii] இயேசுவின் தாயாகிய மரியாளை நாம் ஆராதிக்கக் கூடாது இயேசு பிறந்த போது சாஸ்திரிகள் அவரைப் பார்க்கிற தற்காகப் போனார்கள் குழந்தையையும், தாயையும் கண்டவர் களாகிய சாஸ்திரிகள் தாயை பணிந்து கொள்ளாமல் இயேசுவை மாத்திரம் பணிந்து கொண்டார்கள். ஆகையால் தேவனையன்றி வேறொரு வரையும் பணிந்து கொள்ளக் கூடாது என்று நாம் அறிய வேண்டும். மத் 2:11.

iii] தேவ ஊழியரை ஆராதிக்கக்கூடாது. அப்போஸ்தல ராகிய பவுல் லீஸ்திராவில் முடவனான ஒருவனுக்கு இயேசுவின் நாமத்தில் ஜெபித்து விடுதலை கொடுத்தார். திடீரென்று பூமாலை களுமாய் அவரைப் பணிந்து கொள்ளும்படி மக்கள் வந்தார்கள் ஆனால் அவரைப் பணிந்து கொள்ளக்கூடாதென்று அவர்களை விலக்கினான் அப். 14:8-18, தேவனால் அனுப்பப்படுகிற அவர் கள் ஊழியர்கள் மூலமாய் தேவன் பெரிய காரியங்கள் செய்யும் போது தேவனுக்கு கொடுக்க வேண்டிய மகிமையை தேவனுக்குக் கொடுக்காமல் மனுஷனுக்குக் கொடுக்கும்படி சாத்தான் மக்களை ஏமாற்றுகிறான். இது சாத்தானுடைய பெரிய தந்திரம். தபால் காரன் நமக்கு வேறொருவர் அனுப்பிய பணத்தைக் கொடுக்கும் போது நாம் அதைப் பெற்றுக்கொண்டபின் அவனுக்கு நன்றி சொல்லவேண்டிய தேவை இல்லை. பணம் அனுப்பியவர்க்கு நன்றி செலுத்த வேண்டும். இப்படி தேவனால் அனுப்பப்படுகிற ஊழியர்கட்கு தேவனுக்குக் கொடுக்க வேண்டிய மகிமையை கொடுக்கக் கூடாது. இப்படி அநேக ஊழியர்களை கெடுப்பதற்கு சாத்தான் மக்களை தூண்டிவிட்டு தேவகிருபையிலிருந்து விழுந்து போனதை கண்ணால் காண்கிறோம்.

iv] தேவதூதர்களை ஆராதிக்கக் கூடாது. யோவான் அப் போஸ்தலனுக்கு கடைசிநாளில் நடக்கவேண்டியவைகளை தேவன் தமுடைய தூதன் மூலம் காட்டிக் கொடுத்தார். அப்பொழுது யோவான் அவரைப் பணிந்துகொள்ளும்படி பாதத்தில் விழுந்தார். உடனே தேவதூதன் என்னைப் பணிந்து கொள்ள வேண்டாம். தேவனைப் பணிந்து கொள் என்றான். வெளி. 22:8,9,

யாரை ஆராதிக்க வேண்டும்?

நாம் தேவனை ஆராதிக்க வேண்டும். (யோ. 4 23,24) உலகத்திலுள்ள எல்லா ஜீவன்களும் தேவனை ஆராதிக்க வேண் டும். எல்லா தேவதூதர்களும் தேவனை ஆராதிக்க வேண்டும். எல்லா சூரிய, சந்திரன் முதலிய கிரகங்களும் தேவனை ஆராதிக்க வேண்டும் (சங். 148) தேவனை இப்படி ஜீவனுள்ளதும் ஜீவனற்ற துமான எல்லாம் சர்வவல்ல தேவனை மாத்திரம் ஆராதிக்க வேண்டும்.

நம்முடைய ஆராதனை எப்படி இருக்க வேண்டும்?

ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிக்க வேண் டும் யோ. 4:23, 24; நம்முடைய ஆராதனை இதயத்தின் ஆழத்தி லிருந்து ஆராதிக்க வேண்டும் மனுஷரால் எழுதப்பட்ட ஏதோ சில வற்றை வாசித்துவிடுகிறது ஜெபமல்ல என்று இயேசு கூறினர்.

மாத் 7:6, 7; தம்முடைய தகப்பனோடு நாம் பேசவேண்டிய காரியங்களை வேறொருவர் நமக்கு எழுதிக் கொடுக்க வேண்டிய தேவை இல்லை. நாம் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும் என்பதே அவரது சித்தம்.

ஆராதனையில் என்னவெல்லாம் இருக்கும் என்பதையும் யோசிப்போம்.

பழைய ஏற்பாடு காலத்திலும்; புதிய ஏற்பாடிலும் ஆராதனைக்குப் பாட்டு பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள் எஸ்றா 3:11. எபே. 5:19. பாட்டுக்களை ஆவியோடும் கருத்தோடும் நாம் பாட வேண்டும் என்று பவுல் சொல்லுகிறார். 1 கொரி. 14:15. நாம் பரலோகத்திற்கு போன பின்பும் பாட்டு பாடமுடியும். வெளி 5:9,10. இப்படி நாம் ஆராதனையில் பாட்டுப் பாடி தேவனை மகிமைப்படுத்த வேண்டும்.

மாத்திரமல்ல, நம்முடைய ஆராதனையில் சாட்சிக்கும் நல்ல ஸ்தானத்தை வசனம் கொடுத்திருக்கிறது. ஏசா. 8:20, மத். 10:32, சங் 10:1-3, வெளி. 12:11, அப். 1:8, 1 யோ. 1:1-3.

ஆராதனையில் சங்கீதம் வாசிக்கிற பழக்கம் ஆதிச் சபையில் இருந்தது. 1கொரி. 14:26, எபே. 5:19. ஆராதனையில் உபதேசம் உண்டு. 1 கொரி. 14:26, 1 தீமோ. 4:13, கொலே 1:28. விசுவாசிகளை தப்பிதமான உபதேசங்களிலிருந்தும், பாவங்களிலிருந்தும் சீர்திருத்துவதற்கு உபதேசம் தேவையாயிருந்தது. ஆகையால் ஆராதனையில் உபதேசம் மிகவும் முக்கியமானது.

ஆராதனையில் அன்னியபாஷை, வியாக்கியானம், தீர்க்கதரிசனம் எல்லாம் தேவையாயிருக்கிறது. 1கொரி. 14:26. ஆனால் எல்லாம் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் இருக்க வேண்டும். 1கொரி. 14:28-33, 39.

நாம் ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிக்கும் போது பாவிகள் மனம் திரும்பவேண்டும். 1கொரி. 14:23-25. நம்முடைய ஜெபம், பாட்டு, சாட்சி, உபதேசம், அன்னியபாஷை, வியாக்கியானம், தீர்க்கதரிசனம் முதலியவைகள் பாவிகளை பாவ உணர்ச்சியுடையவர்களாக மாற்ற வேண்டும். அவர்கள் மனம் திரும்பி தேவனண்டையில் திருந்த வேண்டும்.

ஆராதனையில் வியாதியஸ்தர் குணமாக வேண்டும் என்றும் காண்கிறோம். அப் 4:30, 31. நம்முடைய ஆராதனைக்கு வருகிற

வியாதியஸ்தர்கள் இயேசுவிலுள்ள விசுவாசத்தால் வியாதியினின்று பரிபூரணமடைதலை பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆராதனையில் மிகவும் முக்கியமான வேறொன்று இராப் போஜனம் அப். 20:7 வாரத்தின் முதல் நாளில் அவர்கள் அப்பம் பிட்கும்படியாக வந்தபோது, என்று காண்கிறபடியால் அவர்கள் வந்ததின் முக்கியத்துவம் அப்பம் பிட்குவது என்று காண்கிறோம். ஆகையால் இராப்போஜனம் என்பது மிகவும் முக்கியமான ஒன்று.

ஆராதனையில் காணிக்கையும் உண்டு. 1 கொரி. 16:2 காணிக்கை எடுப்பது விசுவாசத்தின் குறைவு என்றும், அது பாவம் என்றும் சிலர் நினைக்கிறார்கள் அப்படியில்லை. ஆதித் சபையிலும், பழைய ஏற்பாடு காலத்திலும் இந்த பழக்கம் இருந்தது. விதவையான ஒரு ஏழை ஸ்திரீ காணிக்கை போடும்போது இயேசு அதைப் பார்த்தார் என்று காண்கிறோம். மாற். 12:41-44. இது தப்பானால் இயேசு கண்டிப்பாக அதைக் கண்டிப்பார். ஆகையால் ஆராதனையில் காணிக்கையும் உண்டு.

ஆம், நம்முடைய ஆராதனை வேதத்திற்கு ஒத்ததாயிருக்க வேண்டும். நம்முடைய ஆராதனை மனுஷரால் எழுதினவைகளை பின்பற்றுவதல்ல மாற். 7:6,7. நம்முடைய ஆராதனை ஆவியோடும், உண்மையோடும் இருக்க வேண்டுமென்று கர்த்தர் சொன்னார். யோ. 4:23, 24. எபே. 5:18, 19 நம்முடைய ஆராதனையில் பாவிகள் வருமானால் அவர்கள் இயேசுவைக் கண்டு மனம் திரும்புகிறார்களா? வியாதியஸ்தர்கள் குணமாகிறார்களா? தேவனுடைய கிரியை நடக்கிறதா? ஆம், தேவனுடைய வசனப்பிரகாரமான ஆராதனை செய்வதற்கு தேவன் கிருபை தருவாராக

10

சுற்றிப் போகப் பண்ணுகிறார்.

யாத். 13:17, 18

இஸ்ரவேல் புத்திரர் ராமசேசையிலிருந்து சுக்கோத்துக்குப் புறப்பட்டார்கள். யாத். 12:37. பல ஜாதியான ஜனங்களும் அவர்களுடன் புறப்பட்டார்கள். யாத். 12:38. தேவனை ஆராதிப்பதற்

காக தேவனுடைய ஜனம் புறப்படும்போது தேவனுடைய தரிசன மில்லாதவர்களும் அவர்களுடன் புறப்படுவார்கள். இது சாத்தானுடைய பெரிய தந்திரம். தேவனுடைய அழைப்பு கிடைத்தவராகிய ஆபிரகாமுடன் மற்றும் பலரும் புறப்பட்டார்கள். அந்தப்படியே குணப்படாதவர்களும், தேவனுடைய சந்திப்பில்லாதவர்களும் சபைக்குள்ளே நுழைந்து சபைக்கு பெரிய குழப்பங்களை உண்டு பண்ணுவார்கள்.

பெலிஸ்திய தேசவழியாய் போவது சமீபமான வழி. ஆனால் அந்த வழியே அவர்களை விடாமல் வனாந்தரம் வழியாய் சுற்றிப் போகப் பண்ணினார் ஏன்? ஜனம் யுத்தம் கண்டு பழக்கமுள்ளவர்கள் அல்ல. யுத்தத்தைக் கண்டால் அவர்கள் பயப்படுவார்கள். எகிப்தியர் அவர்களை திரும்பவும் எகிப்திற்கு கொண்டு போவதற்காக வரும்போது, எகிப்தியரைக் கண்டதும் அவர்கள் பயந்தார்கள் யாத் 14:10 நமக்கு கொடுக்க வேண்டிய ஆசீர்வாதங்களை ஏன் சீக்கிரத்தில் கொடுக்காமல் இருக்கிறார் என்று நினைக்கலாம். பெரிய சோதனைகளை சீக்கிரமாய் கொடுக்காமல் நம்முடைய திராணிக்கு தக்கதாய் நம்மை நடத்துவார்.

நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காண மாட்டீர்கள்.

இஸ்ரவேலர் தேவனுடைய சத்தத்திற்கு கீழ்ப்பட்டு புறப்படுகிறார்கள். இவர்கள் புறப்பட்டுப் போனார்கள் என்பதை எகிப்தியர் கேட்டபோது அவர்களுக்கு கோபம் உண்டாயிற்று. இவர்களைத் திரும்பவும் அடிமைகளாக்க வேண்டும் என்கிற நோக்கத்துடன் அவர்களைப் பின்பற்றுகிறார்கள்.

நாம் பாவத்தையும், சாத்தானையும் விட்டு விலகினால் மீண்டும் நம்மை அதே பாவத்திற்குள் கொண்டு போவதற்காக சாத்தான் முயற்சி பண்ணுவான். கலா, 5:1. ஆனபடியினாலே நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள். IIபே. 2:19-22 எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமைப்பட்டிருக்கிறானே கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால் அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டுவிலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.

நாய் தான் கக்கினதைத் தின்னவும் கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழி ன்படியே அவர்களுக்குச் சம்பவித்தது "இயேசுவின் இரத்தத்தி னால் மீட்கப்பட்ட ஒரு விசுவாசி மீண்டும் பாவத்திற்குள் விழுவானா ல் அவன் தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதிக்கிறான் என்றும் அவனைப் பரிசுத்தப்படுத்தின இயேசுவின் இரத்தத்தை அசுத்தப்படுத்துகிறான் என்றும் கிருபையின் ஆவியை நிந்திக் கிறான்" என்றும் வேதாகமம் சொல்லுகிறது. அப்படிப்பட்டவர் களுக்கு தேவனுடைய கடுமையான தண்டனை வருமென்று பவுல் சொல்லுகிறார். எபி. 10:26-31; எபி 6:4-8. ஆகையால் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நாம் உலகத்தை விட்டாலும் உலகத்தின் ஆசை நம்மை விடாது. நாம் பாவத்தை விட்டாலும் பாவத்தினுடைய ஆசை நம்மை விடாது ஆதி. 4:7. நாமோ பாவத்தை மேற்கொள்ள வேண்டும்.

இஸ்ரவேலரை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் எகிப்தியர் அவர்களுடைய சர்வ வல்லமையுடன் வருகிறார்கள் விசுவாசியை எப்படியாவது விழத்தள்ள வேண்டும் என்ற நோக் கத்துடன் சாத்தான் சர்வ வல்லமையுடன் வருவான். ஆனால் அவன் ஒரு வழியாய் வரும்போது, அவனை ஏழு வழியாய் விரட்டு கிற சர்வ வல்லவராகிய தேவன் நம்மோடிருக்கிறார். உபா.28:7. ஏசா. 54:17, இஸ்ரவேலர் பயந்தார்கள். யாத். 14:10, நமக்கு எதிரிடையாய் சாத்தான் வரும்போது நாம் பயப்படவேண்டிய தேவை இல்லை. கொடூரமானவர்களின் சீறல், மதிலை மோதிய அடிக்கிற பெருவெள்ளத்தைப்போல் இருக்கையில் நீர் ஏழைக்குப் பெலனும், நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனும், பெரு வெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலமும், வெயிலுக்கு ஒதுங்கும் நிழலுமானவர் என்பதை (ஏசா 25:4) நாம் அறியுமானால் பயப் பட வேண்டிய தேவை இல்லை. எலிசாவுக்கு விரோதமாய் அநேக போர்ச்சேவகர்கள் வந்து நிறைந்தவுடனே அவருடைய வேலைக் காரன் பயந்தான். ஆனால் தேவனுடைய சர்வவல்லமையை நன்றாய் அறிந்தவராகிய எலிசா பயப்படவில்லை. 2 இராஜா 6:14-17 ஆம் தேவனுடைய பிள்ளையே நாம் அவருடைய உள்ளங்கையில் இருக்கிறோம் என்பதை நாம் மறக்க வேண்டாம். ஏசா. 49:2, சங் 34:7,19, ஆகையால் நம்முடைய சத்துருக்கள். பாதாள வாசல்படிகள் ஒருக்காலும் மேற்கொள்ளாது. மத்.16:18.

ஜனம் மோசேயுடன் முறுமுறுத்தார்கள் எகிப்தியருக்கு வேலை செய்கிறது நலம் என் எங்களை புறப்படப் பண்ணி வைத்தீர், என் றார்கள். இது இன்றும் ஜனம் செய்கிறதுதான் சோதனைகள் வரும் போது எல்லா இக்கட்டுகளிலிருந்தும் நீங்கலாக்கி இரட்சிக்கிறவரி டம் (சங் 107:13) அவர்கள் ஜெபிக்காமல் மோசேயுடன் முறு

முறுத்தார்கள். நாம் நம்முடைய சோதனையில் மனுஷரோடு, நம்முடைய தலைவர்களிடம் வருத்தப்பட வேண்டாம்.

''பயப்படாதிருங்கள், நீங்கள் நின்று கொண்டு (Stand still Eng. & Malayalam) இன்றைக்கு கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள்'' என்று மோசேஜனங்களுடன் சொன்னார். யாத். 14:13,14, இஸ்ரவேலர் ஏறக்குறைய 25 இலட்சம் இருந்தார்கள். இவர்கள் எல்லாம் சேர்ந்து முறையிட்ட போதிலும் மோசே கொஞ்சமும் கலங்கவில்லை. விசுவாசிகள் கலங்கலாம், முறுமுறுக்கலாம். ஆனால் ஊழியக்காரன், தலைவர் அசையக் கூடாது அவன் கலங்கினால் எல்லாம் நஷ்டமாகும் சபையின் போதகரே! சபையார் எல்லாரும் ஒன்றுபோல ஒன்றாய் கலங்கலாம். ஆனால் நீயோ கலங்க கூடாது, அசையக கூடாது ''நீங்கள் நின்று கொண்டு இன்றைக்கு கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்'' என்கிற வசனம் ஆங்கிலத்தில் கொஞ்சம் வித்தியாசம் உண்டு Stand still உறுதியாய் நில் என்று, தான் ஆம், விசுவாசியே சாத்தான் சர்வவல்லமையுடன் வருவான். நீ பயப்படாதே, கலங்காதே, திகையாதே நான் உன் தேவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். சத்துருவால் அழிக்கப்படுவதற்காய் தேவன் தம் ஜனத்தை அழைத்துக் கொண்டு வரவில்லை. நீ உறுதியாய் நின்றால் மாத்திரம் போதும் சாத்தான் வெட்கப்படுவான் அவன் தோற்கடிக்கப்பட்ட சத்துரு என்பதை மறவாதே.

தேவன் தம்முடைய தூதனை அவருக்கு முன் அனுப்பினது அவர்களுக்குத் தெரியாது. பார்வோனும் சேனைகளும் வருகிறதைக் கண்டவுடன் தேவனுடைய தூதன் ஜனங்களின் பின்னால் போய் நின்றார், யாத், 14:19 நாம் அதைரியப்பட வேண்டாம். தேவன் தம்முடைய தூதர்களை அனுப்பி நம்மைக்காப்பாற்றுவார். சங் 34:7,19 எலிசாவுடையமலை நிறைய தூதர்களை அனுபபி அவரைக் காப்பாற்றினவர் இன்றும் காப்பாற்ற வல்லவர். 2. இரா. 6:14-17 தேவன் பலத்த கீழ்க்காற்றினால் செங்கடலை இரண்டாக பிரித்தார். இஸ்ரவேல் ஜனங்கள் அந்த செங்கடல் வழியாய் வனாந்திரத்திற்கு புறப்பட்டார்கள். பார்வோனும் சேனைகளும் இஸ்ரவேலரை பின்பற்றினார்கள். ஆனால் தேவனுடைய வல்லமையினால் கடல் மீண்டும் பழையது போல் மூடிற்று பார்வோனும் சேனைகளும் அந்தக் கடலில் அமிழ்ந்து போனார்கள். ஆம், நாம் சத்துருக்களை கண்டு பயப்பட வேண்டாம். தேவன் உனக்காக யுத்தம் செய்வார்.

1

வனாந்திர ஜீவியம்

இஸ்ரவேலர் தங்களுடைய ஜீவியத்தில்ஒரு புது அநுபவத்தில் பிரவேசிக்கிறார்கள். எகிப்திலிருந்து தேவன் அற்புதமான வழியில் அவர்களைக் கொண்டு வந்த படியால் அவர்கள் நடனமாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். ஆனால் தண்ணீரில்லாமல் மூன்று நாட்கள் கஷ்டப்பட்டார்கள் அப்படியவர்கள் கஷ்டப்பட்டு 'மாரா' என்கிற இடத்திற்கு வந்தார்கள். அங்கே தண்ணீர் இருந்தது. ஆனால் அது கசப்பான படியால் குடிக்க முடியாது. அப்போது ஜனங்கள் மோசேயுடன் முறுமுறுத்தார்கள். யாத் 15:22-27 மோசேயின் ஜெபத்தைக் கேட்ட தேவன் ஒரு மரத்தைக் காண்பித்தார். மோசே அந்த மரத்தை தண்ணீரில் போட்டவுடன் அது மதுரமாயிற்று.

ஈசாயின் அடிமரத்திலிருந்து தோன்றிய கிளையாகிய (ஏசா. 11:1) இயேசு நம்முடைய கசப்பான ஜீவியத்தில் வரும் போது அந்த ஜீவியம் மதுரமாயிருக்கும். கசப்பு மூன்று காரியங்களைக் காட்டுகிறது.

1) கசப்பு கஷ்டப்பட்ட ஜீவியத்திற்கு நிழல். யாத். 12:8
2) பின் வாங்கின ஜீவியம் எபி 12:15
3) மரணத்திற்கு இது நிழல் வெளி, 8:11, 12

நம்முடைய கஷ்ட ஜீவியத்தில் இயேசு வரும்போது அது இனிப்பாக மாற்றப்படும். பாவத்தால் கசப்பாகி, மரணத்திற்கு அடிமையாகிய இந்த உலக மக்களை மதுரமாக்குவதற்காக இயேசு வந்தார். அந்த மரத்தை வெட்டி தண்ணீரில் போட்டதும் கசப்பு மாறினது போல் ஈசா என்கிற அடிமரத்திலிருந்து தோன்றிய மரமாகிய இயேசு கல்வாரியில் வெட்டப்பட்டதின் பலனாய் உலகமாகிய தண்ணீரில் மதுரமான ஜீவன் - நித்திய ஜீவன் உண்டாயிற்று

இந்த உலகமாகிய வனாந்திர ஜீவியத்தில் அநேக விதமான கஷ்டங்கள் நமக்குண்டு. யோ. 16:33 ஆனால் இயேசு நம்முடைய ஜீவியத்தில் வரும்போது கசப்புமாறி இனிப்பாகும் கிறிஸ்தவ ஜீவியத்தில் முதலாவது கசப்பு. பிற்பாடு அது இனிப்பாய் மாற்றப்படும். யாக்கோபுக்கு முதலில் கிடைக்கப்பட்ட மனைவி அழகில

லாத லேயாள் இரண்டாவது அருகுள்ள மனைவியாகிய ராகேல் கிடைத்தாள். யோசேப்பின் ஜீவியம் கஷ்டத்தில் துவங்கியது. அது கடைசியில் மதுரமாயிற்று. ஒரு ஸ்திரீ பிரசவிக்கும் போது அவள் வேதனையினால் துக்கப்படுகிறாள். ஆனால் பிரசவித்த பின் அவளுக்கு மகன் கிடைக்கப்பட்டபடியால் அவள் சந்தோஷிக்கிறாள். யோ. 16:33 அந்தப்படியே நம்முடைய ஜீவியத்திலும் சோதனைகளும் துன்பங்களும் உண்டாகும் ஆனால் இயேசுவோடிருக்கும் போது அது கஷ்டமாய் தோன்றாது. கசப்பிருந்தால்தான் இனிப்பின் மேன்மையை அறிய முடியும்.

ஆம் நம்முடைய மாராவை மதுரமாக்குகிற தேவன் நம்மோடிருக்கிறார். தேவன் நம்மை நித்தம் கஷ்டத்தின் வழியாய் நடத்துகிறவரல்ல.

வனாந்திரத்தில் முதலாவது கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் ''நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்'' யாத் 15:26 இந்த வாக்குத் தத்தம் எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் வாக்குத்தத்தம் தேவன் நமக்கு வியாதியிலிருந்து விடுதலை கொடுக்கிறவர் தேவன் கொடுக்கிற எல்லா வாக்குத்தத்தங்களுக்கும் சில சட்டங்களையும் கொடுப்பார் தேவன் நம்மை குணமாக்குவதற்கும் சில நிபந்தனைகளை (சட்டங்களை) சொல்லியிருக்கிறார்.

(1) நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தை கவனமாய் கேட்டு,

(2) அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து,

(3) அவர் கட்டளைக்கு செவி கொடுத்து (4) அவருடைய நியாயங்கள் யாவையும் கைக்கொண்டால் நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின, வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் யாத். 15:26. கர்த்தர் நம்மை குணமாக்குவார், அது உண்மை ஆனால் குணமாக வேண்டுமானால் அவருடைய வார்த்தைகளைக் கவனமாய் கேட்டு அவருடைய கட்டளைகளுக்கு பரிபூரணமாய் கீழ்ப்பட வேண்டும்.

மீண்டும் தாவீது தம் சங்கீதத்தில் சொல்லுகிறதைப் பாருங்கள் ''அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து உன் நோய்களையெல்லாம் குணமாக்கி'' சங். 103:3 என்று காண்கிறோம். அக்கிரமங்களை மன்னிக்கிறார் என்பதை ஒரு சிலர் விட்டு விடுகிறார்கள். அக்கிரமங்களை மன்னித்தால்தான் நோய்களை குணமாக்க முடியும்.

அடுத்ததாக யாக்கோபு அப்போஸ்தலன் வியாதியிலிருந்து விடுதலை பெறுவதற்காக என்ன சொல்லுகிறார் என்பதைப் பார்ப்போம். "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால் அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக, அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்காக எண்ணெயைப் பூசி ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார் அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். யாக். 5 14,15. "அவன் பாவம் செய்தவனானால்" என்று காண்கிறோம். மனிதனுடைய பாவம் வியாதிக்குக் காரணம் ஆகையால் வியாதி குணமாவதைப் பார்க்கிலும் முக்கியமானது பாவத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொள்வது நீ உன் வியாதியிலிருந்து விடுதலை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் அறிக்கை செய்து விட்டு விடாத ஒரு பாவமும் உனக்குள் இருக்கக் கூடாது எல்லா பாவங்களையும் அறிக்கை செய்து விட்ட பிறகு அந்த வியாதியை இயேசுவின் நாமத்தில் கடிந்து கொள். உடனே வியாதி உன்னை விட்டு நீங்கும்.

அடுத்ததாக யாக்கோபு வேறொரு காரியம் சொல்கிறார். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை குணமாக்கும். "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண்பாய்" என்று கர்த்தரும் சொல்லியிருக்கிறார். விசுவாசமுள்ள ஜெபம், நீதிமான் செய்யும் ஊக்கமான ஜெபம் என்பவைகளை நாம் கொஞ்சம் நன்றாய் சிந்திக்க வேண்டும்

நீதிமான் யார்? பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவன் (ரோம. 4 5) தன் பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டு பாவ உணர்ச்சியுடன் பாவங்களை அறிக்கை செய்து விட்டவன் தான் தேவனால் நீதிமான் ஆக்கப்பட்டவன் இப்படி நீதிமானாக்கப்பட்டவனை செய்யும் ஊக்கமான ஜெபம் குணமடைவதற்கு தேவை இரண்டாவதாக விசுவாசமுள்ள ஜெபம் தேவை. இயேசு எனக்காகப் பாவமாக்கப்பட்டார் என்பதை விசுவாசிக்கும் போது நமக்கு பாவமன்னிப்பு கிடைக்கிறது. அந்தப்படியே இயேசு எனக்காகப் வியாதியாக்கப்பட்டார். என்பதை விசுவாசித்து ஜெபம் பண்ணின பிறகு எனக்கு வியாதி உண்டு என்று மனதிலும் நினைக்கக் கூடாது. "அவருடைய தழும்புகளால் குணமானோம்" என்கிற வசனத்தை 1 பே. 2:24 நாம் முழு இருதயத்துடன் விசுவாசிக்க வேண்டும். அவருடைய தழும்புகளால் குணமாகலாம் என்று அல்ல குணமாகும் என்றும் அல்ல குணமானேன் என்று நம்ப வேண்டும். ஜெபித்தபின் ஒருக்காலும் சந்தேகம்

வரக்கூடாது அப்போது சாத்தான் வெட்கப்படுவான். நீ குண மாவாய் யாத். 23:25.

மாத்திரமல்ல விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளத் தில் ஒன்று வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள். அவர் கள் குணமாவார்கள் என்பதே. மாற் 16:18 ஆகையால்; உண்மை யான எந்த விசுவாசிக்கும் வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைத்து ஜெபிப்பதற்கு தேவனுடைய வசனம் ஒத்துக்கொள்கிறது. ஆம், அவர் இன்றும் வியாதியஸ்தர்களை குணமாககுகிறார்.

2

வானத்திலிருந்து ஆகாரம்

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டார்கள். வனாந்திரத்தி ஆகாரமில்லாமல் அவர்கள் தேவனுக்கும் தம்முடைய தாசனுகி மோசேக்கும் விரோதமாய் முறுமுறுத்தார்கள். யாத் 16:1,2 அவ களை அற்புதமாய் எகிப்திலிருந்து மீட்டுக்கொண்டவராகிய தேவ செங்கடலைப் பிளந்தவர், மாராவிலே தண்ணீரை மதுரமாக்கினவ அவர்களுக்கு ஆகாரத்தையும் கொடுக்க வல்லவர் என்பதை அவ கள் மறந்து விட்டார்கள் ஆம் தேவனுடைய பிள்ளையே நீ தேவ டத்திலிருந்து எத்தனையோ நன்மைகளைப் பெற்றிக்கிறாய் ஆனா நீயும் சோதனை வேளையில், கஷ்டத்தின் வேளையில் அவர்களை போல் தேவனுக்கு விரோதமாய் முறுமுறுத்தது இல்லையா ஐயோ! தேவன் உனக்குப் பெரிய காரியங்களைச் செய்வதற் வல்லவர்.

மன்னா

இஸ்ரவேலருக்கு தேவன் வானத்திலிருந்து அப்பத்தை கொடுத்தார். யாத்தி. 16:4. சங். 78:24,25 ஆம். பரலோகத் விருக்கும் தூதர்கள் சாப்பிடும் ஆகாரமாகிய மன்னாவை தே மனுஷர்களுக்கு கொடுத்தார். சங் 78:24,25 ஆம், நம்மு தேவன் அற்புதவான். அதிசயமுள்ளவர். வல்லமையின இரா உனக்காக தேவன் ஆகாயத்தின் பலகணிகளைத் திறந்து இ போதாமல் வருமளவும் உன்னை ஆசீர்வதிக்க வல்லவர் என போதாமல் ... தைத் தின்போம் என்னத்தைக் குடிப்போம் என்று நீ கவ படாதே இவைகள் உனக்குத் தேவை என்பதை அவர் அறி லூக். 12:22,31

மன்னாவைக் குறித்தும் அதின் ஆவிக்குரிய அர்த்தத்தைக் குறித்தும் யோசிப்போம்.

1) மன்னா பரலோகத்திலிருந்து தேவனால் கொடுக்கப்பட்டது யாத். 16:4 இயேசு பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவராகிய ஜீவ அப்பம். யோவான். 6:51.

2) தினமும் தேவையான மன்னாவைப் பொறுக்க வேண்டும் யாத். 16:41 தேவனுடைய வசனமாகிய மன்னாவை தினமும் நாம் புசித்துப் பலப்பட வேண்டும் சங். 119:147,148 அப். 17:11 ஒரு விசுவாசி தினமும் தேவனுடைய வசனத்தைக் கற்றுக்கொண்டு தியானித்து வளர்ச்சியடைய வேண்டும்.

3 இந்த மன்னா உறைந்த பனிபோல் பரிசுத்தமானது யாத். 16:14 உறைந்த பனி பரிசுத்தமானது சங். 51:7, 110:3 தேவனுடைய வசனம் பரிசுத்தமானது. சங். 18:30. எபே. 5:26 தேவன் பரிசுத்தராகையால் அவருடைய வசனமும் பரிசுத்தம் இந்த பரிசுத்தமான வசனம் நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறது.

4) மன்னா தேவனால் கொடுக்கப்பட்டது யாத். 16:15 யோ. 6:31, 32 தேவனுடைய வசனமாகிய கிறிஸ்துவும் தேவனால் கொடுக்கப்பட்டவர் யோ. 3:16 வனாந்திர ஜீவியத்தில் மன்னா கூடாமல் அவர்களுக்கு ஜீவிக்க முடியாது. அந்தப்படியே கிறிஸ்துவைக் கூடாமல் நமக்கும் ஜீவிக்க முடியாது. யோ. 6:44.

5) தேன் கூட்டிய பணிகாரத்தைப் போல் ருசியாயிருந்தது. யாத். 16:31. சங். 19:10 தேவனுடைய வசனம் வெண்மையானதும், தேனைப் பார்க்கிலும் தெளிதேனைப் பார்க்கிலும் மதுரமானது சங். 19:9, 119:103.

6) வல்லமையான ஆகாரம் சங். 78:23,24 தேவனுடைய வசனம் வல்லமையுள்ளது. எபி. 4:12 இயேசு வானத்திலும் பூமியிலும் சர்வாதிகாரி. மத். 28:18 தேவனுடைய வசனம் மனுஷனுடைய இருதயத்தை புதுசிருஷ்டியாக்குவதற்கு வல்லமை உள்ளது அந்த வசனம் வியாதியை நீக்குவதற்கு வல்லமையுள்ளது.

7) மன்னாவை எடுத்து இடித்து அதை பிசைந்து சாப்பிட வேண்டும். எண். 11:7 தேவனுடைய வசனத்தை வாசித்து தியானம் செய்ய வேண்டும். பெரோயா விசுவாசிகள் தெசலோனிக்கிய விசுவாசிகளைப் பார்க்கிலும் நற்குணசாலிகளாவதற்கு காரணமென்னவென்றால் தேவனுடைய வசனத்தை அவர்கள் தினமும் சோதித்து வந்தார்களாம் ஆம், நாம் தேவனுடைய வசனத்தை வாசிக்கிறவர்களாய் மாத்திரமல்ல அவைகளை நன்றாய் சோதித்து ஆராய்ந்து கற்றுக்கொள்ளுகிறவர்களாயும் இருக்க வேண்டும். அப். 17:11.

இஸ்ரவேலருடைய பின்வாங்கின ஜீவகாலத்தில் அவர்கள் மன்னாவை வெறுத்தார்கள். எண். 11:4-7 அவர்களுக்கு இந்த மன்னாவைத் தவிர வேறொன்றும் இல்லையே என்று முறுமுறுத்தார்கள், தேவனுடைய கிருபையிலிருந்து ஒரு விசுவாசி சோர்ந்து போனால் அவன் தேவனுடைய வசனத்தை வெறுப்பான். அவர்கள் வசனத்தை விரும்பமாட்டார்கள். தேவனுடைய வசனத்தைக் கேட்டால் அவர்கள் தூங்குவார்கள்.

வனாந்திர காலம் முழுவதும் மன்னாவைப் புசித்து அவர்கள் ஜீவித்ததுபோல நம்முடைய உலகத்திலுள்ள ஜீவகாலம் முழுவதும் தேவனுடைய வசனத்தை மாத்திரம் புசிக்க வேண்டும்.

3

கன்மலையின் தண்ணீர்

யாத். 17:1-7

தேவனால் ஜனங்கள் நடத்தப்படுகிறபோது மீண்டும் தண்ணீரில்லாமல் கஷ்டப்பட்டார்கள். ஜனங்கள் முன்புபோல் முறுமுறுத்தார்கள். மோசே தேவனிடம் ஜெபித்தார். இஸ்ரவேல் மூப்பர்களில் சிலரைக் கூட்டிக் கொண்டு நீ நதியை அடித்த கம்புமாய் ஓரேபுக்கு போ என்று தேவன் சொன்னார். ஓரேபில் கன்மலையின் மேல் நான் நிற்பேன் என்றும் நீ கன்மலையை அடிக்க வேண்டும் என்றும்? கர்த்தர் சொன்னார். அந்தப்படியே மோசே கன்மலையை அடித்தார். திடீரென்று தண்ணீர் புறப்பட்டது ஜனங்களும், ஆடுமாடுகளும் தண்ணீரைக் குடித்து உயிர் அடைந்தார்கள் உலகமாகிய இந்த வனாந்திர ஜீவியத்தில பரிசுத்தாவியானவராகிய தண்ணீரில்லாமல் நமக்கு ஜீவிக்க முடியாது. இந்தக் கன்மலை கிறிஸ்து சங். 19:14 2 பேது. 2:4-8 அடிக்கப்பட்ட கன்மலையென்றால் நமக்காக கல்வாரியில் அடிக்கப்பட்டவராகிய கிறிஸ்து என்பதே அதின் அர்த்தம். 1 பே. 2:24 கன்மலை அடிக்கப்பட்டதின் பலனாய் பரிசுத்தாவியை தேவன் நமக்குத் தந்தார். பண்டிகையின் கடைசி நாளில் இயேசு நின்று கொண்டு ''ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக் கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார்''

யோ. 7:37-39 வனாந்திரத்தில் அடிக்கப்பட்ட கன்மலையின் தண்ணீரைக் கொடுத்ததுபோல் நாம் ஜீவிப்பதற்கு பரிசுத்தாவியாகிய தண்ணீர் தேவையாயிருக்கிறது இது தாகமாயிருக்கிறவர்களுக்குத் தான் கிடைக்கும். பரிசுத்தாவியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிற ஆவல் மானானது நீரோடையை வாஞ்சித்துக் கதறுகிறது போல (சங். 42:1,2) ஒரு பெரிய தாகமுடையவர்களாய் இருக்க வேண்டும். அவர்கள்தான் இந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பரிசுத்தாவியின் அபிசேகம்

இயேசு உயிர்த்தெழுந்த பிறகு "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன் நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்." லூக். 24:48,49 அப். 1:4,5 பெந்தேகோஸ்து பண்டிகையின் நாளில் 120 பேர் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் வாக்குத்தத்தம் நிறைவேறும்படி பரிசுத்தாவிக்காகக் காத்திருந்தார்கள். அப். 1:15 அவர்கள் ஜெபம் பண்ணும் போது பரிசுத்தாவியானவர் அக்கினிமயமான நாவுகளைப்போல் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது அப் 2:3 அப்போது அவர்கள் பரிசுத்தாவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் அவர்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். அப் 2:4 வெவ்வேறு பாஷைகளில் பேசினார்கள் என்று அல்ல. "பேசத் தொடங்கினார்கள்" என்றுதான் உள்ளது அதின் அர்த்தமென்னவென்றால் அன்று முதல் அந்நிய பாஷைகளில் பேசுவதற்கு ஆரம்பமாயிற்று என்றுதான் இன்றும் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அது சபையை பரிசுத்தாவியானவர் எடுக்குமளவும் கர்த்தருடைய இரகசிய வருகை வரைக்கும் பேசிக் கொண்டிருப்பார்கள்.

பரிசுத்தாவியின் அபிஷேகம் வாக்குத்தத்தம்

பெந்தேகோஸ்தே நாளில் ஜனங்கள் பரிசுத்தாவியினால் நிறைந்தவர்களாய் அந்நிய பாஷைகளில் பேசி தேவனை மகிமைப் படுத்தின சந்தர்ப்பத்தில் இது யோவேல் தீர்க்கதரிசி மூலம் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் என்று பேதுரு சொன்னார். யோவே. 2:28,29. அப் 2:16,17 மாத்திரமல்ல வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்றும் சொன்னார். அப். 2:39

நம்முடைய கர்த்தர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த பிறகு ''என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன் நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்'' என்று கட்டளையிட்டார். லூக் 24:49 அவர்கள் தேவாலயத்தில் தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டிருந்தார்கள். லூக் 24:52,53 ''யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். நீங்கள் சில நாட்களுக்குள்ளே பரிசுத்தாவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்'' என்கிற கர்த்தருடைய கட்டளையின்படி சீஷர்கள் காத்திருந்து ஜெபித்து பரிசுத்தாவியைப் பெற்றார்கள். அப். 1:4,5.

எபேசுவில் அபிஷேகம்

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசுவுக்குப் போனார். அங்கே சில விசுவாசிகளைக் கண்டார்கள். ''நீங்கள் விசுவாசிகளான போது பரிசுத்தாவியைப் பெற்றீர்களா?'' என்று கேட்டார். அவர்கள் அந்த உபதேசம் தெரியாமல் இருந்தார்கள். என்னவென்றால் அவர்கள் அப்பொல்லோவின் உபதேசத்தினால் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றவர்கள். பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்து ஜெபித்தார். அவர்கள் பரிசுத்தாவியைப் பெற்றார்கள் அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசினார்கள். அப். 19:1-7

செசரியா பட்டணத்தில் அந்நிய பாஷை

தேவனால் சந்திக்கப்பட்ட கொர்நேலியு பேதுருவின் பிரசங்கத்தை கேட்பதற்காக ஆள் அனுப்பினார். பேதுரு அவன் குடும்பத்தில் பிரவேசித்த போது தேவனுடைய சத்தியத்தைக் கேட்பதற்காக ஆயத்தமாயிருக்கிற ஒரு கூட்டத்தை கண்டார். இயேசுவின் கல்வாரி மரணம் மூலம் நாம் பெற்றுக்கொள்கிற பாவமன்னிப்பை குறித்து பேதுரு பேசினார். அப். 10:39,40 அவர்கள் பரிபூரணமாய் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார்கள். அவர்கள் பிரசங்கம் கேட்டுக் கொண்டிருக்கும் போது பரிசுத்தாவியானவர் அவர்கள் மேல் இறங்கினர் எல்லோரும் பரிசுத்தாவியால் நிறைந்தார்கள் அந்நியபாஷைகளில் பேசினார்கள். அப். 10:44,45.

கடைசி நாட்களில் அபிஷேகம்

கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்கிற இயேசுவின் வாக்குத்தத்தப்பிரகாரம் இன்றும் அநேகரை தேவன் அபிஷேகம் பண்ணுகிறார்.

உலகத்தின் எல்லா இடங்களிலும் தேவன் பரிசுத்தாவியின் அபிஷேகத்தை அனுப்புகிறார். எல்லோரும் பரிசுத்தாவியினால் நிறையவேண்டும் என்பதே தேவசித்தம்.

பரிசுத்தாவியின் அபிஷேகத்தை ஒருவன் பெற்றால் அதின் அடையாளம் என்ன?

இஸ்ரவேல் ஜனத்திற்கு ஒரு இராஜா வேண்டும் என்று அவர்கள் தேவனிடம் கேட்டார்கள். அதற்காக தேவன் சவுல் என்று பேருள்ள ஒரு வாலிபனை தெரிந்து கொண்டார். அந்த வாலிபனை சாமுவேல் தீர்க்கதரிசியிடம் அனுப்பினார். தீர்க்கதரிசி அவனை அபிஷேகம் பண்ணி அவனைமற்ற தீர்க்கதரிசிகளிடம் அனுப்பினார். அப்பொழுது அவன் மேல் தேவனுடைய பரிசுத்தாவியானவர் இறங்கினார் பரிசுத்தாவியானவர் அவன் மேல் இறங்கினார். அப்போது அவன் வேறொரு மனுஷனானான் 1சாமு. 10:6,10-13 பரிசுத்தாவி அவன் மேல் வல்லமையோடு இறங்கினபோது அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார். கீசின் மகனுக்கு வந்தது என்ன? என்று மக்கள் கேட்டார்கள். அவனில் பரிசுத்தாவி வந்த போது இப்போது இயருக்குள் ஏதோ சம்பவித்துள்ளது என்று வெளியரங்கமாய் மக்கள் உணரக் கூடிய சூழ்நிலை உருவாயிற்று 1சாமு. 10:11 சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ? என்று மக்கள் ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டார்கள். இப்படி ஒருவன் பரிசுத்தாவியை பெறும்போது அவனில் ஒரு பெரிய மாறுதல் காணலாம்

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கட்டளைப்பிரகாரம் அவருடைய சீஷர்களாகிய 120 பேரும் தேவனால் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்ட பரிசுத்தாவிக்காய் காத்திருந்தார்கள். பரிசுத்தாவியானவர் அவர்கள் மேல் இறங்கினார் அப். 1:15,2:1-4 அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷையில் பேசி தேவனை மகிமைபடுத்தினார்கள். பரிசுத்தாவியை பெற்றதாக நாம்வாசிக்கிற எல்லா இடங்களிலும் அவர்கள் அந்நிய பாஷையில் பேசினார்களென்றும் வாசிக்கிறோம். அப் 10:44-46, 19 1-7, 8:14-18

மாத்திரமல்ல பேதுரு பெந்தேகோஸ்தே நாளில் வந்த ஜனங்களோடு பேசும்போது ''காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்'' என்று பேசினார். அப். 2:33

சமாரியாவிலுள்ள விசுவாசிகளுக்கு பரிசுத்தாவி "தந்தருளப் படுகிறதை சீமோன் கண்டபோது" (அப். 8:18) என்று வாசிக்கிறோம். ஆகையால் ஒருவன் பரிசுத்தாவியைப் பெறும் போது காண்கிறதும் கேட்கிறதுமான அனுபவம் உண்டாகும் என்று திட்டமாகக் காண்கிறோம். பெந்தெகொஸ்தே நாளில் ஜனங்கள் பரிசுத்தாவியால் நிறைந்த போது அவர்கள் மதுபானிகள் என்று நினைத்தார்கள். அதிலிருந்தும் விளங்குகிறது என்னவென்றால் மதுபானிகளைப் போல் ஏதோ சில செய்கைகள் அவர்கள் செய்தார்கள், என்பதே அவர்கள் பரிசுத்தாவியை பெற்றபோது மக்கள் கண்டார்கள் என்றும் கேட்டார்கள் என்றும் எழுதப்பட்டிருக்கிற பிரகாரம் அவர்கள் அந்நிய பாஷைகளில் பேசினார்கள் என்று மாத்திரமல்ல அவர்களுடைய சரீரத்திலும் அசைவில் சில அடையாளங்கள் காணப்பட்டன.

தானியேல் தீர்க்கதரிசி பரிசுத்தாவியால் நிறைந்தபோது நடுக்கத்துடன் முழங்கால்களையும் உள்ளங்கைகளையும் ஊன்றி நின்றார் அவருடைய சரீரத்தின் பலன் எல்லாம் போயிற்று. உருவம் மாறி வாடிப்போயிற்று திடனற்றுப் போனார் என்றும் காண்கிறோம். நடுக்கத்துடன் என்கிற வார்த்தை மூலபாஷையிலும் மலையாள பாஷையிலும் மாத்திரம் உண்டு இன்றும் மக்கள் பரிசுத்தாவியை பெறும்போது நம்முடைய சரீரத்தில் சில வித்தியாசங்கள் உண்டாகிறது மல்லாமல் அந்நிய பாஷைகளில் பேசவும் செய்கிறது. எல்லோரும் அந்நிய பாஷைகளில் பேசுகிறீர்களா? என்று பவுல் கேட்டபடியால் (1கொரி. 12:30) பரிசுத்தாவியை பெற்ற எல்லோரும் அந்நிய பாஷைகளில் பேசமாட்டார்கள் என்று ஒரு சிலர் நினைக்கிறார்கள் 1 கொரிந்தியர் 12ம் அதிகாரத்தில் காணுகிறது வரங்களை குறித்துத்தான் அந்நிய பாஷையில் பேசுகிறீர்களா? என்று கொடுக்காமல் அந்நிய பாஷைகளில் பேசுகிறீர்களா? என்று பன்மை கொடுக்கப்பட்டுள்ளது 1கொரி. 12:30. 1கொரி. 12:10ல் வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும் என்று கொடுக்கப்பட்டிருக்கிறபடியால் பற்பல பாஷைகளைப் பேசுதல் ஒரு வரம் என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஒருவன் பரிசுத்தாவியை பெறும் போது அவன் நிச்சயமாய் அந்நிய பாஷையில் பேசுவான் என்பதற்கு சந்தேகமில்லை ஆகையால் பவுல் அந்நிய பாஷைகளில் பேசுகிறீர்களா என்று கேட்கிறது பாஷைகளை குறித்த வரத்தைத்தான்

அந்நிய பாஷை மக்களுக்கு விளங்குமா ?

இது முக்கியமான ஒரு கேள்விதான் அந்நிய பாஷை என்கிற வார்த்தைக்கு தெரியப்படாத பாஷை என்று (Unknown Tongue) என்று ஆங்கிலத்தில் 1கொரி. 14:2ல் காண்கிறோம்.

அந்நிய பாஷையில் ஒருவன் பேசினால் மக்களுக்கு விளங்காது என்பதற்கு சந்தேகமில்லை அது விளங்குமானால் அந்நிய பாஷை அல்லவே. ஒருவன் அந்நிய பாஷையில் பேசும்போது மக்களுக்கு விளங்காது என்று பவுல் சொல்கிறார். அந்நிய பாஷையில் பேசுகிறவன் சபையின் பிரயோஜனத்திற்காக வியாக்கியானம் வரத்திற்காக ஜெபிக்க வேண்டும் என்று வேதாகமம் சொல்கிறது. அதின் அர்த்தமென்னவென்றால் மக்களுக்கு அந்நிய பாஷையில் பேசினால் விளங்காது என்பதே பரிசுத்தாவியை பெற்றவர்கள் ஆவியில் பாடல்களைப் பாடவும் ஸ்தோத்திரம் செய்யவும் ஜெபிக்கவும் செய்யலாம். ஆனால் அது சபையாருக்கு விளங்காதபடியால் ஆவிக்குரிய வளர்ச்சியை கொடுக்க முடியாது என்று வசனம் கூறுகிறது வசனம் கூறுவதிலிருந்து அந்நிய பாஷை மக்களுக்குப் புரியாது என்று விளங்குகிறது எல்லோரைப் பார்க்கிலும் அதிகமாக அந்நிய பாஷை பேசுகிறவராகிய பவுல் மற்றவர்களுக்கு விளங்குவதற்காக சபையில் மக்களுக்கு விளங்கும்படி சொந்த பாஷையில் பேச வாஞ்சிக்கிறேன் என்று சொன்னார். 1கொரி. 14:18,19 சபையாரெல்லாரும் சேர்ந்து அந்நிய பாஷையில் பேசிக்கொண்டிருக்குமானால் மக்களுக்கு விளங்காது என்று பவுல் சொல்லுகிறார் 1கொரி. 14:23 மாத்திரமல்ல அவர்கள் பைத்தியக்காரர் என்று மக்கள் நினைப்பார்கள் என்றும் எழுதப்பட்டிருக்கிறது ஒசியா 9.7 1கொரி 14:26 முதல் 32 வரை நாம் வாசிக்கும்போது சபையில் அந்நிய பாஷையில் ஒருவர் பேசுமானால் ஒவ்வொருவராய் பேசவும் என்றும் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும் என்று எழுதப்பட்டிருக்கிறது என்னவென்றால் ஒவ்வொருவராய் பேசி அதன் அர்த்தத்தைச் சொன்னால்தான் மக்களுக்குப் புரிந்து கொள்ள முடியும்.

பெந்தேகோஸ்து நாளில் பேசின அந்நிய பாஷை மக்களுக்குப் புரிந்ததா ?

பெந்தேகோஸ்தே நாளில் பேதுரு எழுந்து நின்று அந்நிய பாஷையில் பிரசங்கம் பண்ணினர் என்றும் மக்களுக்கு அது அவரவருடைய சொந்த பாஷையில் விளங்கினார்கள் என்றும் மக்கள் நினைக்கிறார்கள். ஆனால் இன்று பேசுகிற அந்நிய பாஷை என் விளங்கவில்லை என்றும் அவர்கள் கேட்கிறார்கள். 120 பேர் அந்நிய பாஷைகளில்தான் பேசினார்கள். ஆனால் பேதுரு பிரசங்கம் பண்ணினது அந்நிய பாஷையில் அல்ல நம்முடைய தாய் மொழியில் கலிலேயாக்காரராய இவர்கள் பேசுகிறார்களே என்று ஆச்சரியத்துடன் மக்கள் கேட்கிறதையும் இவர்கள் மதுபானிகள் என்று வேறொரு கூட்டத்தார் சொல்லுகிறதையும் கேட்டபடியால்

அவர்களுக்குப் பிரதியுத்திரமாக பேதுரு பண்ணின பிரசங்கம்தான் அப்போஸ்தலர் நடபடிகள் 2ம் அதிகாரம் 14 முதல் 36 வரை உள்ள வசனங்கள் என்பதை நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும் இஸ்ரவேலர்கள் எந்தெந்த இடங்களுக்குப் போனாலும் எந்தெந்தப் பாஷைகளைப் பேசினாலும் அவர்களுடைய மத பாஷை யாகிய எபிராய பாஷையை நன்றாக கற்றுக் கொள்வது அவர்களு டைய பழக்கம். அவர்களுடைய ஆராதனையும் மற்ற ஆவிக்குரிய எல்லா காரியங்களையும் எபிராய பாஷையில் தான் செய்வார்கள். அன்று கூடிவந்திருந்தவர்கள் பல பாஷைக்காராயிருந்த போதி லும் அவர்களுடைய மத பாஷையாகிய எபிராய பாஷையில்தான் அவர்களோடு பேதுரு பேசினார். அப்பொழுது அவர்கள் எல்லாருக் கும் அது நன்றாய் விளங்கிற்று அது அல்லாமல் பேதுரு அந்நிய பாஷையில் பேசவும் மற்றவர்களுக்கு அவரவருடைய பாஷையில் விளங்கவும் இல்லை.

பரிசுத்தாவியின் அபிஷேகமும், மறுபிறப்பும் இரண்டு அனுபவங்கள்.

மறுபிறப்புதான் பரிசுத்தாவியின் அபிஷேகம் என்று ஒருசிலர் நினைக்கிறார்கள் ஆனால் தேவவசனத்தை நன்றாகக் கற்றுக் கொள் ளும்போது மறுபடியும் பிறப்பது வேறு என்றும் பரிசுத்தாவியின் அபிஷேகம் வேறு என்றும் விளங்குகிறது. ஒருவனை மறுபிறப்பின் அனுபவத்திற்குள் வழிநடத்துகிறவர் பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துபவர் பரிசுத்தாவியானவரே. யோ. 16:8 அப்படி பரிசுத்தாவியானவர் பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தும் போதும் தேவனுடைய வசனம் ஒருவனை மறுபிறப்பின் அனுபவதிற்குள் கொண்டு வருகிறது 1 பே. 1:23 1 கொரி, 4:15 யாக் 1:18 இப்படி மறுபடியும் பிறக்கப்பட்ட ஒருவனுக்குள் கிறிஸ்துவின் ஆவி உண்டு. என்னவென்றால் கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவனல்ல. ரோ. 8:9 மறுபடியும் பிறந்தவர்களாகிய தம்முடைய பிள்ளைகள் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற வேண்டும் என்று தேவவசனம் கூறுகிறது.

கர்த்தாகிய இயேசுவானவர் பரிசுத்தாவியானவரால் பிறந் தார். லூக். 1:32 அவர் வளர்ந்ததும் பரிசுத்தாவியானவரால் லூக். 2:40 ஆனால் அவர் ஞானஸ்நானம் எடுக்கும் போது பரிசுத் தாவியானவர் அவர்மேல் இறங்கினார் என்று நாம் வாசிக்கிறோம். லூக். 3 21,22. அவர் பிறந்ததும் வளர்ந்ததும் பரிசுத்தாவியான வரால் ஆனால் அவர் ஞானஸ்நானம் பெற்றபோது பரிசித்தாவியின்

ஊக் 3:21,22 இயேசுவினுடைய சீஷர் அபிஷேகத்தைப் பெற்றார். ஊக். 3:21,22 இயேசுவினுடைய சீஷர்கள் மறுபடியும் பிறந்தவர்களாயிருந்தார்கள். என்னவென்றால் அவர்களுடைய பெயர் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்று இயேசு அவர்களோடு சொன்னார். ஊக். 10 20 இப்படி மறுப்பிறப்பின் அனுபவத்திற்குள் வந்தவர்களாகிய சீஷர்களோடு பரிசுத்தாவியின் அபிஷேகத்திற்காக அவர்கள் காத்திருக்க வேண்டுமென்று இயேசு சொன்னார் ஊக்24:48,49 அப் 1:4,5,8 அவர்கள் ஒரே இடத்தில் உட்கார்ந்து கர்த்தருடைய வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படுவதற்காக ஜெபித்தார்கள். பத்தாவதுநாள் அவர்கள் பரிசுத்தாவியால் நிறைந்தார்கள். இதிலிருந்து மறுபடியும் பிறப்பு அனுபவமும் பரித்தாவியின் அபிஷேகமும் இரண்டு அனுபவங்கள் என்று விளங்குகிறது.

சுவிஷேகனுகிய பிலிப்பு சமாரியாவிலேபோய் எழுப்புதல் கூட்டங்களை நடத்தினர். அதின் பலனாய் அநேகர் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும் அற்புத சுகம் அடையவும் ஞானஸ்நானம் எடுக்கவும் காரணமாயிற்று அப். 8:12,13 சமாரியர் தேவ வசனத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்று எருசலேமிலுள்ள அப்போஸ்தலர் கேட்டபோது 'அவர்களுக்குப் பரிசுத்தாவி கிடைப்பதற்காக அவர்களுக்கு ஜெபிக்கும்படி' பேதுருவையும், யோவானையும் அனுப்பினார்கள். அவர்கள் சமாரியரோடு பரிசுத்தாவியின் அபிசேகத்தை குறித்து சம்பாஷித்து அவர்களுக்காக ஜெபித்தார்கள். அப்போது அவர்கள் பரிசுத்தாவியின் அபிஷேகத்தைப் பெற்றார்கள். அப். 8.14-17 சமாரியர் பிலிப்புவின் ஊழியத்தால் இரட்சிக்கப்பட்டவர்கள். அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து ஜெபித்தபோது அவர்கள் பரிசுத்தாவியை பெற்றார்கள். சமாரியர் பரிசுத்தாவி பெறும்படியாக அப்போஸ்தலர்கள் பேதுருவையும், யோவானையும் அங்கே அனுப்பினார்கள் என்று வாசிக்கிறபடியால் மறுபிறப்பும் பரிசுத்தாவியின் அபிஷேகமும் இரண்டு அனுபவங்கள் என்று காண்கிறோம்.

இப்படி மறுபடியும் பிறந்தவர்களாகிய சமாரியருக்காக பேதுருவும் யோவானும் ஜெபம் பண்ணும்போது அவர்கள் பரிசுத்தாவியால் நிறைந்தார்கள். அன்றையத்தினம் வரையும் அவர்கள பரிசுத்தாவியை பெறவில்லை அப். 8:15 அவர்கள் கைகளை வைத்து ஜெபித்ததும் அவர்கள் பரிசுத்தாவியை உடனே பெற்றார்கள். அப் 8:17 பரிசுத்தாவியின் அபிஷேகமும் மறுபிறப்பும் ஒரே அனுபவமானால் சமாரியர் பரிசுத்தாவியை பெறுவதற்காக அப்போஸ்தலர்களை அனுப்ப வேண்டியதில்லை.

பெந்தெகோஸ்தே நாளில் பேதுருவின் பிரசங்கத்தால் இரட்சிக்கப்பட்ட ஜனங்களோடு இயேசுவால் கொடுக்கப்பட்ட பரிசுத்தாவியின் வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பேதுரு கூறினர். அப், 2:38-40

அப்போஸ்தலனுகிய பவுல் எபேசுவுக்குப் போகும் போது அங்கே சில விசுவாசிகளைக் கண்டார். அவர்களைக் கண்டதும் 'நீங்கள் விசுவாசிகளான போது பரிசுத்தாவியைப் பெற்றீர்களா? என்று கேட்டார் அது ஆங்கிலத்தில் Have you received Holy-Ghost since ye believed? என்று காணலாம். நீங்கள் விசுவாசித்த போது என்று அல்ல விசுவாசித்த பிறகு என்று தான் ஆங்கிலத்தில் உள்ளது. அவர்கள் அப்பொல்லோவின் ஊழியத்தால் மனந் திரும்பி ஞானஸ்நானம் எடுத்தவர்கள் பவுல் அவர்கட்காக ஜெபித்தபடியால் அவர்கள் பரிசுத்தாவியின் அபிஷேகத்தை பெற்றார்கள் என்று காண்கிறபடியால் மறுபிறப்பும், பரிசுத்தாவியின் அபிஷேகமும் இரண்டு அனுபவங்கள் என்று திட்டமாய் காண்கிறோம். அப் 19:1-6 மாத்திரமல்ல நீங்கள் சுவிசேஷத்தைக் கேட்ட பிறகு சத்தியத்தை அறிந்த பிறகு விசுவாசித்த பிறகு பரிசுத்தாவியின் அபிஷேகமும் மறுபிறப்பும் இரண்டு அனுபவங்கள் என்று வெளிப்படுத்துகிறது.

பரிசுத்தாவியை பெற்றுக்கொள்ளும் விதம்

1. இயேசுவின் பக்கத்தில் போக வேண்டும் யோ. 7:37 இயேசுவின் பக்கத்தில் நாம் போவதற்கு தடையாய் இருப்பது நம்முடைய பாவங்கள். ஏசா, 59:2 அந்தப் பாவங்களை நாம் அறிக்கை செய்து பரிபூரண பிரதிஷ்டை அனுபவத்திற்குள் வர வேண்டும். ரோ. 12:1,2 (Full surrender life) என்னவென்றால் நம்முடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதுமாய் அவருக்காக பிரதிஷ்டை பண்ணவேண்டும். அப்படி நாம் ஒரு புது சிருஷ்டியின் அனுபவம் உடையவர்களாய் நம்மிலுள்ள பழைய அனுபவங்களெல்லாம் பரிபூரணமாய் மாற்றப்பட்டு புது துருத்தியாய் மாற்றப்படும்போது தேவன் தமது பரிசுத்தாவியின் அபிஷேகத்தை நம்மேல் ஊற்றுவார். நாம் புது துருத்தியாய் மாற்றப்படாவிட்டால் புது ரசமாகிய பரிசுத்தாவியை அவர் நம்மேல் ஊற்றமாட்டார்.

2. அடுத்ததாக நாம் பரிசுத்தாவியை பெறவேண்டுமென்கிற ஒரு பெரிய தாகமுடையவர்களாய் மாற்றப்படவேண்டும் அதாவது மானனது நீரோடையை வாஞ்சித்துக் கதறுவதுபோல நம்முடைய ஆவி தேவன்மேல் ஜீவனுள்ள தேவன் மேலேயே தாகமாயிருக்க

வேண்டும். அப்படிப்பட்ட தாகம் இருந்தால்தான் நாம் பரிசுத்தா வியை பெற்றுக்கொள்ள முடியும். சங் 63:1, 143:6 ஏசா. 44:2,3 41:17 யோ, 7:37-39

3. தேவனுக்கு பூரணமாய் முழு இருதயத்துடன் கீழ்ப்படிகிற வர்கட்குத்தான் தேவன் தம்முடைய பரிசுத்தாவியை கொடுப்பார். அப். 5:32

4. நாம் இருதயத்தில் பரிசுத்தஉள்ளவர்களாய் கர்த்தரை நம்முடைய இருதயத்தில் கண்டு கொண்டிருக்கிற ஒரு அனுபவம் அவர் என்னுடைய வலது பாரிசத்தில் இருக்கிறார். என்கிற முழு நிச்சயம் நமக்கு உண்டாக வேண்டும். அவரை நம்முடைய இருத யத்தில் நாம் காணும் போது நம்முடைய இருதயம் மகிழ்ந்து நாவு களிகூர வேண்டும். இருதயம் நல்ல விசேஷத்தினால் பொங்கி இரட்சிப்பின் சந்தோஷத்தினால் நிறைந்து விசுவாசத்தால் நம்மோ டிருக்கிற இயேசுவைக்கண்டு மகிழ்ந்து தேவனை மகிமைப்படுத்தும் போது நம்முடைய நாவு களிகூறுவதுதான் அந்நிய பாஷை. அப். 2:25-28 சங் 45:1

பரிசுத்தாவியின் அபிஷேகத்திற்காக நாம் வேறொன்றும் செய்ய வேண்டியதில்லை ஒரு சிலர் செய்கிறதுபோல மெதுவாய் கொட்டித்து கடைசியில் அதிவேகமாய் கொட்டித்து ஒரு உணர்ச் சியை உண்டாக்குகிறது. பரிசுத்தாவியின் அபிஷேகமல்ல மேலே எழுதப்பட்டிருகிற பிரகாரம் தேவனோடு சரியான ஐக்கியத்துக் குள் வந்தவர்களாய் அதிதாகத்துடன் கர்த்தாவே இந்த அனுப வத்தை எனக்கும் தாரும் என்று அவர் கொடுக்குமளவும் நாம் அவருடன் கெஞ்சிக் கேட்க வேண்டும் அப்பொழுது அவர் தம் முடைய பரிசுத்தாவியானவரால் நம்மை நிறைப்பார். மத் 7:7-11 லூக். 11:5-13.

கொர்நேலியுவின் வீட்டிலுள்ளவர்கள் கர்த்தருடைய தாசனு பேதுரு மூலமாய் கர்த்தர் சொல்லுகிற சத்தியங்களை ஆவலுடன் கேட்டுக் கீழ்ப்படிவதற்காய் காத்திருந்தார்கள் அவர்கள் கீழ்ப்படி தலின ஆவியோடும் தேவபயத்தோடும் முழு பிரதிஷ்டையோடும் தேவனுடைய சந்நிதானத்தில் உட்கார்ந்து தேவனுடைய சத்தியத்தைக் கேட்டபோது தேவன் அவர்கள்மேல் பரிசுத் தாவியை ஊற்றினார். அப். 10:33-48.

கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்கிற (அப். 2:17) கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்பட்டு ஜெபிக்கிற எல்லாருக்கும் தேவன் தம்முடைய பரிசுத் தாவியை கொடுப்பார்.

தேவன் எதற்காக நம்மை பரிசுத்தாவியால் அபிஷேகம் பண்ணுகிறார் ?

"நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார் தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார்" அப். 10:38 தேவன் இயேசுவை அபிஷேகம் பண்ணினபடியால் அவர் நன்மை செய்தார் என்றும் பிசாசினால் கட்டப்பட்டிருந்தவர்களை விடுதலை ஆக்கினார் என்றும் நாம் வாசிக்கிறோம் அந்தப்படியே இன்னும் கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியினாலே நிறைக்கிற பிள்ளைகளோடு இருந்து பிசாசின் கட்டிலிருந்து மக்களை அவிழ்த்து விடவும் மக்களுக்கு நன்மை செய்யவும் செய்கிறார் சங்கீதம் 133 ல் பிரதான ஆசாரியனாகிய ஆரோனுடைய தலைமேல் ஊற்றப்பட்ட அபிஷேகம் அவருடைய தலைமுதல் வஸ்திரத்தின் ஓரம் வரையிலும் ஓடுகிறதாய் எழுதப்பட்டிருக்கிறது நம்முடைய பிரதான ஆசாரியனாகிய இயேசுவின் சிரசில் ஊற்றப்பட்ட அதே அபிஷேகம் அவருடைய சபையாம் சரீரமாகிய வஸ்திரத்தோடே இன்னும் ஓடிக்கொண்டே இருக்கிறது. அவருடைய வஸ்திரத்தின் ஓரம் சபையினுடைய கடைசி நாட்களைக் காட்டுகிறது. அவர்மேல் ஊற்றப்பட்ட அதே அபிஷேக தைலம் பெந்தேகோஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் மேல் ஊற்றப்பட்டது இன்னும் அதே அபிஷேக தைலந்தான் நம்மிலும் ஊற்றப்பட்டுக் கொண்டு இருக்கிறது ஆம் இயேசுவின்மேல் ஊற்றப்பட்ட அதே பரிசுத்த ஆவியை பேதுருவின் மேலும் பவுலின் மேலும் பிலிப்பின் மேலும் தேவன் ஊற்றினார். அவர்கள் மேல் ஊற்றப்பட்ட அதே பரிசுத்த ஆவிதான் நம்மிலும் ஊற்றப்பட்டிருக்கிறது. ஆகையால் முதலாவது நூற்றாண்டிலே பரிசுத்தவான்களை கரங்களில் எடுத்தவர் அதே ஆவியை உனக்கும் கொடுத்திருக்கிறபடியால் தேவன் உன்னையும் உபயோகிப்பார் என்கிற நல்ல நிச்சயம் உனக்குள் இருக்க வேண்டும் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவி வேறு என்றும் நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவி வேறு என்றும் நினைக்க வேண்டாம். தேவன் அவர்களுக்கும் நமக்கும் ஒரே வல்லமையுள்ள பரிசுத்த ஆவியைக் கொடுத்திருக்கிறார். அவர்கள் மூலமாய் தேவன் என்னவெல்லாம் செய்தாரோ அந்தப்படியே அதே பரிசுத்த ஆவி நமக்குள்ளும் இருக்கிறபடியால் நம் மூலமாயும் தேவன் கிரியை செய்ய முடியும்.

இயேசுவைக் கைது செய்தபின் ஒரு வேலைக்காரி பெண் முன்பாக நான் இயேசுவை அறியேன் என்று மறுதலித்தவனாகிய பேதுரு பரிசுத்த ஆவியானவரால் நிறைப்பட்ட போது பிரதான ஆசாரியர் முன்பாகவும், பரிசேயர் சதுசேயர் இவர்கள் முன்பாகவும் நின்று கொண்டு நீங்கள் சிலுவையில் அறைந்தவராகிய இயேசுவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார் அதற்கு நாங்கள் சாட்சிகள் என்று தைரியமாய் சொன்னார். அப். 4.5-12 இந்த தைரியம் பேதுருவுக்கு எப்படி கிடைக்கப்பெற்றது? பயத்தின் ஆவியை பெறாமல் அப்பா பிதாவே என்று கூப்பிடுகிற புத்திர சுவிகாரத்தின் ஆவியை பெற்றதினால் தான் அப். 8:15 2 தீமோ 1:7 இப்படி பயம் இல்லாமல் தைரியத்தோடு உறுதியாய் தேவனுடைய வசனத்தைப் பேச வேண்டுமானால் நாம் பரிசுத்த ஆவியை பெற்றே தான் ஆக வேண்டும். அப். 4:30,31,13.

அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியை பெற்றபிறகு சாத்தான் மேல் பரிபூரண அதிகாரமுடையவனாய் தேவனால் அனுப்பப்பட்ட படியால் அவர் போயிருந்த எல்லா இடங்களிலும் வியாதிகள் குணமாகவும் பிசாசின்பிடியில் அகப்பட்டவர்கள் விடுதலையாகவும் செய்தார்கள். அதே பரிசுதத ஆவி உனக்குள்ளும் இருக்கிறபடியால் உனக்கும் அந்தப்படியே செய்ய முடியும்.

முதலாம் நூற்றாண்டிலே பரிசுத்த வான்கள் வெள்ளியும் பொன்னும் உடையவர்களாயிருக்கவில்லை ஆனால் இயேசுவின் நாமம் உடையவர்களாயிருந்த படியால் அவர்கள் பரிசுத்த ஆவியின் மூலமாய் பெரிய ஊழியங்களை நடத்தினார்கள். இன்று நமக்கும் தேவ ஊழியம் நடக்கிறதற்காக பணம் தேவை அல்ல' தேவனுடைய வல்லமையாகிய பரிசுத்த ஆவியே தேவையாயிருக்கிறது.

ரோமன் அரசாங்கத்தை நடுங்க வைத்ததும் பிரதான ஆசாரியர்களும் யூதஜனங்கள் முழுவதும் பயந்து போகக்கூடிய நிலையில் படிப்பில்லாத பேதைகளாகிய தம்முடைய பரிசுத்தவான்கள் மூலமாய் கிரியை நடக்கக்காரணம் அவர்களுடனே இருந்த பரிசுத்த ஆவியின் அபிஷேகமே. இன்று உலகத்தில் எங்கு பார்த்தாலும் பெந்தேகோஸ்தே அனுபவமுடைய தேவபிள்ளைகளைக் காணலாம். உலகப் பிரசங்கியாராகிய சகோ T.L, ஆஸ்பான் என்பவர் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தவராய் இருந்தார். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தேவன் அவரை வல்லமையாய் உபயோகிக்கிறார். நீயும் இந்தப் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள் உனக்கும் அதே ஆவியை தேவன் கொடுப்பார். உனக்கும் ஒரு பெரிய ஊழியம் உண்டு.

4

இஸ்ரவேலர்க்கும் அமலேக்கியர்க்கும் உள்ள யுத்தம்

யாத். 17:8-16

இஸ்ரவேலர் அமலேக்கியரோடு யுத்தத்திற்குப் போகவில்லை அமலேக்கியர் இஸ்ரவேலரோடு யுத்தத்துக்கு வருகிறார்கள். இந்த அமலேக்கியர் மாம்ச சுபாவத்தைக் காட்டுகிறது. நாம் மாம்சத்தோடு யுத்தம் பண்ணுவதில்லை, மாம்சம் நம்மோடு யுத்தத்திற்கு வருகிறது ஆகையால் நாம் மாம்சத்தோடு யுத்தம் செய்து அதை மேற்கொள்ள வேண்டும். வேறொரு விதமாய் சொல்லுமானால் நாம் சாத்தானோடு யுத்தத்திற்காக போகிறதில்லை அவன் நம்மோடு யுத்தத்திற்கு வருகிறான். எபே 6:11,12 ஆகையால் அவனை நாம் யுத்தம் செய்து மேற்கொள்ள வேண்டும். 1 யோ, 2:14.

அமலேக்கியர் யுத்தம் பண்ணும்போது மோசேயும் ஆரோனும் மலைமேல் ஏறி மோசே தனது கரங்களை உயர்த்திக் கொண்டே இருந்தார். மோசேயுடைய கரங்கள் உயர்ந்திருக்கும்போது இஸ்ரவேலர்க்கு வெற்றி உண்டாகும். மோசேயின் கரங்கள் தாழ்ந்தால் இஸ்ரவேலர்க்கு வெற்றி உண்டாகும். மோசேயுடையகரம் உயர்த்தப்பட்டது போல நமக்காக உயர்த்தப்பட்ட கரத்துடன் இயேசு பரலோகத்தில் இருக்கிறார். ஆகையால் நமக்கு வெற்றி உண்டு என்பது நிச்சயம், நமக்கு சாத்தானிடம் தோல்வியே இல்லாமல் வெற்றியுடையவர்களாய் நாம் ஜீவிப்பதற்காக இயேசுவுடைய உயர்த்தப்பட்ட கரம் வெற்றியின் கரம் நமக்குப் பரலோகத்தில் உண்டு. மனுஷனான மோசேயின் கரம்பலவீனம் மூலமாய் தாழ்ந்து போனபடியால் ஆரோனும் ஊரும் இரண்டு பக்கத்திலும் அவருடைய கரங்களை தாங்கிக்கொண்டு நின்றார்கள். சூரியன் மறையும் வரை அப்படியே நின்றார்கள். அதினால் இஸ்ரவேலர்க்கு வெற்றி உண்டாயிற்று. நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் கரங்கள எந்தக் காலத்திலும் எந்தக்காரணத்தாலும் தாழ்ந்து போகிற கரங்கள் அல்ல. அது கடந்த இரண்டாயிரம் வருஷங்களாய் உயர்ந்து கொண்டே இருக்கிறது மனுஷருடைய கரங்கள் எல்லாம் தாழ்ந்து போகிற கரங்கள். ஆனால் இயேசுவின் கரமோ எந்தக் காலத்திலும் தாழ்ந்து போகாது. நம்முடைய ஜீவியத்தில் நமக்கு தோல்விக்கு ஏதுவில்லை. என்னவெனில் நமக்காக உயர்த்தப்பட்ட கரத்தை

விசுவாசத்தால் பார்க்கும்போது தைரியமாக சாத்தானுடன் யுத்தம் பண்ண முடியும் நமக்கு உதவி செய்கிற மனுஷ கரங்கள் எப்போதும் பலமாக இருக்கும் என்று நாம் நினைக்கக்கூடாது அது தாழ்ந்து போகலாம் ஆனல் நம்முடைய கர்த்தரின் கரமோ எந்தக் காலத்திலும் சோர்ந்து போகாது.

அமலேக்கியரை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணவேண்டும் என்று தேவன் சொன்னர் சாத்தானையும் அவனு டைய எல்லா கிரியைகளையும் நாசம் பண்ணவேண்டியது நம்மு டைய வேலை அதற்காக உயர்த்தப்பட்ட கர்த்தருடைய கரம் நமக் காக பரலோகத்தில் உண்டு. அங்கே மோசே ஒரு பலிபீடத்தைக் கட்டி தேவனை மகிமைப்படுத்தின பிறகு அந்த பலிபீடத்திற்கு யெகோவா நிசி (கர்த்தரின் கொடி) என்று பெயரிட்டார். நம்மு டைய ஜீவகாலம் எல்லாம் நமக்கு வெற்றியை கொடுக்கிற ஜெயத் தின் கொடியாகிய இயேசுவோடு நாம் போவோமானல் பரிபூரண மான ஜெயஜீவியம் செய்ய முடியும்.

அமலேக்கியர் யுத்தம் பண்ணும் விதம்

இஸ்ரவேல் ஜனங்கள் வனந்திரப் பிரயாணத்தில் இளைத்து விடாய்த்திருக்கிறதை அமலேக்கியர் அறிந்து பின்னல் நின்றவர் களாகிய பலவீனரையெல்லாம் சங்கரித்தனர் நம்முடைய வனந் திரப் பிரயாணமாகிய கிறிஸ்தவ ஜீவியத்தில் அக்கினி ஸ்தம்பமும், மேகஸ்தம்பமும் ஆகிய பரிசுத்தாவியானவரால் நாம் வழி நடத்தப் பட்டாலும் தேவனோடு முகம் முகமாய் பேசி நேரடியாக ஆசீர் வாதத்தைப் பெற்றுக் கொண்டவனாகிய மோசேயின் தலைமையில் நடத்தப்பட்டாலும் சில வேளைகளில் சோர்வு உண்டாகலாம். நம்மு டைய ஜீவியத்தில் சோர்வு உண்டா? இல்லையா? என்று சாத்தான் நம்மை எப்போதும் பார்த்துக்கொண்டே இருக்கிறன். நமக்கு சோர்வு உண்டாகக்கூடிய அநேக சூழ்நிலைகள் உலகத்தில் உண்டு அப்படி நாம் சோர்ந்து போகும்போது சாத்தான் நம்மில் நுழை வதற்காக முயற்சி பண்ணுவான். ஆகையால் நாம் சோர்ந்து போகாமல் ஜெபம் பண்ணவேண்டுமென்று இயேசு கட்டளையிட்டார் லூக். 18:1 எபி 12:3 நாம் மனுஷரைப் பார்த்தால் சில வேளை களில் சோர்வு உண்டாகலாம். ஆனல் இயேசுவை பார்போமா னல் எவ்விதக் காரணத்தினலும் நமக்கு சோர்வு உண்டாகாது.

அமலேக்கியர் பின்னல் நின்றவர்களை கொன்றுபோட்டார்கள் சாத்தான் நம்மை கொன்று போடாமல் இருக்க வேண்டுமானல் தெய்வீக காரியங்கள் எல்லாவற்றிற்கும் நாம் முன்னிலையில் நிற்க வேண்டும். அதாவது நம்முடைய ஜீவியத்தில் முதல் ஸ்தானம்

இயேசுவுக்கு கொடுக்க வேண்டும் என்பது தான். முதலாவது
நாம் தேவனையும் அவருடைய இராஜ்யத்தையும் தான் தேட
வேண்டும். அப்படி தேவனுடைய காரியத்துக்கு நாம் முதல்
ஸ்தானம் கொடுப்போமானால் அமலேக்கியனாகிய சாத்தானுக்கு
நம்மில் இடம் கிடைக்காது.

5

வனாந்திரத்தில் ஒரு நீதி மன்றம்

யாத். 18:13

ஏறக்குறைய 25 லட்சம் மக்கள் வனாந்திரத்தில் பிரயாணம்
செய்தார்கள். அவர்களை நடத்துவதற்காக தேவனால் கொடுக்கப்
பட்ட அக்கினி ஸ்தம்பமும் மேகஸ்தம்பமும் இருந்தன. அதுவும்
கூடாமல் தேவனால் அழைத்துப் பிரித்தெடுக்கப்பட்டவனாகிய
மோசேயையும் தேவன் கொடுத்திருந்தார் இப்படியெல்லாம்
தேவன் செய்த போதிலும் மேகஸ்தம்பத்திலும் அக்கினி ஸ்தம்பத்
திலும் போனவர்களாகிய இவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை
போட்டார்கள் தேவன் அவர்களின் மத்தியில் இருந்தார். இப்படிப்
பட்ட இந்த ஜனங்கள் சண்டை போடுவது ஒரு ஆச்சரியமான காரி
யம் என்று மக்கள் நினைக்கலாம். யாத் 18:13-15 இயேசுவும் சீஷர்
களோடு போகும் போது அவர்களில் யார் பெரியவர் என்கிற
எண்ணத்தினால் அவர்களுக்குள்ளே சண்டை உண்டாயிற்று
லூக். 9:46-48 எருதுகள் இல்லாத இடத்தில் களஞ்சியம் வெறுமை
யாயிருக்கும் நீதி 14:4 என்று சத்திய வேதம் சொல்லுகிறது.
இதின் அர்த்தம் என்னவென்றால் எருதுகள் இருக்குமானால் கண்
டிப்பாக அங்கே சாணியும் அசுத்தங்களும் உண்டாகும் என்பது
தான். விசுவாசிகள் இருக்குமானால் அதின் இடையில் சண்டைகள்
உண்டாக வேண்டும்என்று இல்லை. ஆனால் உண்டாகலாம் ஆனால்
இடறல் உண்டாக்குகிறவனுக்கு ஐயோ என்று இயேசு சொல்லி
இருக்கிறார். மத்.18:5-10 கிருபையின் வரங்களில் குறைவில்லாத
கொரிந்து சபையிலும் ஏதாவது சண்டை உண்டாகுமானால் அவர்
கள் என்ன செய்யவேண்டும் என்பதைக் குறித்து பவுல் அவர்கட்கு
எழுதினார். சகோதரனுக்கும் சகோதரனுக்கும் உண்டானவாழ்க்கைத்
தீர்க்கத்தக்க விவேகி ஒருவனாகிலும் உங்களுக்குள் இல்லையா?
என்று பவுல் கேட்கிறார். 1கொரி 6:5 பரிசுத்தவான்கள் மத்தியிலும்
சில வேளைகளில் வழக்கு உண்டாகலாம். அதனால் நாம் வழக்கு

உண்டாக்க வேண்டும் என்று இல்லை. அப்போஸ்தலனாகிய பவுலின் ஊழியத்தினால் உண்டானதும், அவர் அப்போஸ்தனுமாய் இருக்கிற கொரிந்து சபைக்குள்ளும் சில வேளை வழக்கு உண்டாகலாம். அப்போஸ்தலர்கள் மத்தியிலும் வாக்கு வாதம் உண்டானதாய் வேதம் கூறுகிறது. அப். 15:35-40 சபையில் ஏதாவது வழக்குண்டானால் உடனே விசுவாசிகள் அந்தக் காரியத்துக்காக பாரத்துடன் ஜெபிக்க வேண்டும். 1 யோ. 5:16

ஆதி அப்போஸ்தல சபையில் ஏதாவதும் பிரச்சனைகள் உண்டானால் அப்படிப்பட்ட காரியங்களை அப்போஸ்தலர்கட்கு எழுதி அவர்கள் மூலமாய் ஒழுங்கு பண்ணினார்கள். 1கொரி 7:1, 5:1-9 2கொரி. 7:8,16 திரித்துவத்தில் இரண்டாமவராகிய இயேசு தம்முடைய சீஷர்களை நடத்தும் போதும் சீஷர்களுக்குள்ளே சண்டை உண்டாயிற்று ஒன்பது கிருபையின் வரங்கள் நிறைந்தவராகிய அப்போஸ்தலர்களால் நடத்தப்படும் போதும் சபையில் சண்டை உண்டாயிற்று வழக்குண்டாவது ஆச்சரியமல்ல ஆனால் வழக்கை உண்டாக்குகிறவனுக்கு தேவனுடைய தண்டனை உண்டாகும். ஆகையால் நமது நிமித்தம் தேவகிருபையை விட்டு இழந்து போகாமல் நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

அந்தப்படியே அவர்களுக்குள்ளே உண்டாகிய வழக்குகளை தீர்ப்பதற்காக மோசே இருந்தார். மோசேக்கு இது மிகவும் பாரமாயிருக்கிறதை அவருடைய மாமனார் கண்டபோது அவருக்கு ஒரு ஆலோசனையை சொல்லிக் கொடுத்தார். மோசே தமக்கு உதவிக்காரராய் வேறு சிலரை நியமித்தார். தேவனுடைய சபையில் தேவன் உதவிக்காரராய் சிலரை வைப்பார். அவர்கள் அதற்கு தகுதியுடையவர்களாய் இருக்க வேண்டும்.

அவர்களுடைய தகுதிகள் :-

1) தேவனுக்குப் பயந்தவர்கள்
2) உண்மையுள்ளவர்கள்
3) பொருளாசையை வெறுக்கிறவர்கள்
4) திறமையுள்ளவர்கள்

புதிய ஏற்பாடிலும் அப்போஸ்தலர்களால் தெரிந்து கொள்ளப்பட்ட உதவிக்காரர்கள் அதற்கு தகுதி உடையவர்களாயிருந்தார்கள். (1) பரிசுத்த ஆவியால் நிறைந்தவர்கள் (2) ஞானத்தால் நிறைந்தவர்கள் (3) நற்சாட்சி உடையவர்கள்.

இப்படிப்பட்டவர்களை உதவிக்காரர்களாய் சபைக்குத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போஸ்தலர்கள் ஊழியத்துக்குப் போகும் போது யோவான் அவர்கட்கு உதவிக்காரனாய் போனார் என்று அப். 13:5 ல எழுதப்பட்டுள்ளது.

பழைய எற்பாடிலுள்ள உதவிக்காரர்கள் மோசேக்கு பூரணமாய் கீழ்ப்பட்டிருந்தார்கள். சபையிலுள்ள உதவிக்காரர்களும் சபையின் போதகர்களுக்குப் பூரணமாய் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் தலைவராய் இருக்கிறது எளிதான காரியமல்ல தேவனுடைய தாசனாகிய மோசேயைப் போல் மிகுந்த சாந்தகுணமுள்ள வேறொருவன் பூமியில் இல்லை என்று தேவனால் நற்சாட்சி பெற்றவராகிய மோசே (எண். 12:3) ஜனங்களுடைய தொந்தரவு தாங்க முடியாமல் இந்த ஜனங்களையெல்லாம் நான் கர்ப்பம் தரித்தேனோ? இந்த ஜனங்களை எல்லாம் என்னால் நடத்த முடியவே முடியாது என்று அழுது கொண்டு தேவனோடு சொன்னார். எண். 11:11-15 ஆண்டவரே நான் மரித்துப்போனால் பரவாயில்லை என்று அவர் சொல்ல வேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. ஒரு சபையின் போதகராக ஒருவர் இருக்கிறதைக் கண்டால் அவருக்குள்ள கஷ்டம் நமக்குத் தெரியாது. அவருக்கு சனபயைக் குறித்துள்ள பாரம், உத்திரவாதத்துவம் எல்லாம் மிகவும் முக்கியமானது சபையின் போதகர் ஆத்துமாக்களுக்காக தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் எபி. 13:16-17 சபையின் மக்களைக் குறித்து தேவன் அவர்களோடு கணக்கு கேட்பார். ஆகையால் மிகவும் ஜாக்கிரதையுடன் பயத்துடன் தங்கள் கையில் ஒப்புவிக்கப்பட்ட ஆத்துமாக்களைக் குறித்து உத்திரவாதத்துடன் தேவ ஊழியர்கள் இருக்க வேண்டும் என்னவென்றால் மனுஷனுக்கல்ல. தேவனுக்கு அவர்கள் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். பாவம் செய்த மக்களுக்காக மோசே விழுந்து கிடந்து மிகுந்த பாரத்துடன் அழுதார். யாத். 32:8-14 தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட எல்லா தலைவர்களும் இப்படி விழுந்து ஜனங்களுக்காக அழுது கண்ணீர் வடித்ததாய் நாம் காண்கிறோம் எண். 16:3-4 யோசு. 7:6.10 நெகேமி. 1:3-11 எஸ்றா. 10:1 எரே. 4:19 அப். 20:19, 31.

6

தேவஜனங்களுக்குரியபிரமாணங்களும் சட்டங்களும்

தேவனால் நடத்தப்படுகிற ஜனங்கள் என்றால் சட்டமும் ஒழுங்கும் இல்லாமல் மனம்போல நடக்கிறவர்கள் என்று அநேகர் நினைக்கிறார்கள். தேவன் தம்முடைய ஜனங்களை ஒழுங்கீனமாய் நடத்த விரும்புகிறதில்லை தேவனால் கொடுக்கப்பட்ட மோசே மூலமாய் தேவன் அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார் அவர்கள் ஒவ்வொருவரும் பூரணமாய் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டுத்தான் நடக்க வேண்டும். புதிய ஏற்பாடு விசுவாசிகளும் ஒழுங்கீனமாய் நடக்கக் கூடாது சபையானால் தேவன் அதற்கு சில ஒழுங்குகளைக் கொடுத்திருக்கிறார் ஒழுங்கீனமாய் நடக்கிறவர்களை விட்டு விலக வேண்டுமென்றும் அப்போஸ்தலர்கள் கூறினார்கள். 2 தெச. 3:6,7 தேவனால் கொடுக்கப்பட்ட மோசேக்கும் மூப்பர்களுக்கும் பழைய ஏற்பாடு விசுவாசிகள் கீழ்ப்பட்டு இருந்தார்கள். கீழ்ப்படியாமற் போனவர்களை தேவன் தண்டித்தார். எண். 14:1.2,26-45 16:1-35 17:1-13 புதிய ஏற்பாடு விசுவாசிகளும் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிற ஊழியர்களுக்குப் பரிபூரணமாய் கீழ்ப்படவேண்டும். எபி. 13:17 1 பே. 5:5 1 தீமோ. 3:5,12 தேவனால் கொடுக்கப்பட்டு இருக்கிற பிரமாணங்களை மக்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்காக தேவன் மோசேயையும், தீர்க்கதரிசிகளையும் வைத்திருந்ததுபோல் (லூக். 16:29) புதிய ஏற்பாடிலும் தேவன் தம்முடைய ஊழியர்களை வைத்திருக்கிறார். மோசே வனாந்திரத்தில் தேவனுடையஜனங்களை நடத்தியதுபோல் தேவனுடைய சபையும் தேவ ஊழியர்களால் நடத்தப்பட வேண்டும். எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போன மனுஷன் கள்ளன் கையில் அகப்பட்டபோது அவன் சத்திரக்காரனுடைய கையில் ஒப்புவிக்கப்பட்டான். இதுபோல புதிய ஏற்பாடு விசுவாசிகளும் சத்திரக்காரனை சபையின் போதகரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறார்கள். சமாரியாக்காரன் வரும்போது சத்திரக்காரனிடம் கணக்கு கேட்கிறது போல் மந்தையை மேய்க்கிற மேய்ப்பனாகிய போதகரிடம் தேவனால் ஒப்படைக்கப்பட்டிருக்கிற ஆத்துமாக்களைக் குறித்து சபையின் போதகர்கள் கணக்கு கொடுக்க வேண்டும். ஆகையால் விசுவாசிகள் மேய்ப்பர்களுக்கு பரிபூரணமாய் கீழ்ப்பட வேண்டும்.

தேவன் மோசேயை சீனாய் வனாந்திரத்தில் இருந்து பர்வதத்துக்கு அழைத்தார். தேவன் மோசேயோடு முகமுகமாய் பேசினார். மோசே தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட சத்தியங்களை இஸ்ரவேல் ஜனங்களுக்கு அறிவித்தார். யாத் 19:1-7 விசுவாசுகளாகிய நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளுகிற சத்தியங்களுக்கு கேள்வி கேட்காமல் கீழ்ப்படவேண்டும். மோசே கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக் கொண்டவைகளை மக்களுக்கு அறிவித்ததுபோல் தம்முடைய ஊழியர்கள் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டவைகளை மக்களுக்கு அறிவிக்க வேண்டும். 1 கொரி. 15:23 கலா 1:11,12 1 யோ 1:1-4 ஜனங்களைப் பரிசுத்தப்படுத்தி தெய்வீக தரிசனத்திற்காக ஆயத்தப்படுத்த வேண்டும் என்று தேவன் மோசேக்கு கட்டளையிட்டார், அந்தப்படியே மோசே செய்தார். ஜனங்கள் தேவனுடைய தரிசனத்தைக் கண்டதும் பயத்து நடுங்கினார்கள். மோசேயும் நடுங்கினார் என்று நாம் வாசிக்கிறோம். எபி. 12:18-21 யாத். 19:13-25 உபா. 5:22-33 யாத் 20:18-20

நியாயப்பிரமாணம் பயத்தினுடையதும் நடுக்கத்தினுடையதுமான பிரமாணம். ஆனால் கிருபையின் பிரமாணம் பயத்தின் பிரமாணமாயிராமல் அன்பின் பிரமாணமாயிருக்கிறது பட்சிக்கிற அக்கினியாகிய தேவனாய் தேவன் அவர்களுக்கு வெளிப்பட்டார். எபி 12 29 ஆனால் நமக்கோ தேவன் அன்பாகவே இருக்கிறார். 1யோ.4:9 அவர்களுக்கு கற்பலகைகளில் தேவன் பிரமாணத்தைக் கொடுத்தார். ஆனால்நமக்கு இருதயம் என்கிற சதையான பலகையில் எழுதப்பட்டிருக்கிறது.

நியாயப்பிரமாணம் எழுத்தினுடைய ஊழியம் ஆனால் கிருபையின் பிரமாணமோ ஆவியானவருடையஊழியம்நியாயப்பிரமாணம் எழுத்திற்குரியது. ஆனால் கிருபையின் பிரமாணமோ ஆவிக்குரியது நியாயப்பிரமாணம் மரணத்திற்குரிய பிரமாணம். ஆனால் கிருபையின் பிரமாணம் ஜீவனுக்குரிய பிரமாணம் நியாயப்பிரமாணம் மகிமைக்குரிய ஊழியம். ஆனால் கிருபையின் பிரமாணம் அதிமகிமையான ஊழியம் நியாயப்பிரமாணம் ஆக்கினைத் தீர்ப்பைக் கொடுக்கும் ஊழியம் கிருபையின் பிரமாணம் நீதியைக்கொடுக்கும் ஊழியம் நியாயப்பிரமாணம் ஒழிந்து போகிற ஊழியம் கிருபையின் பிரமாணம் நிலைத்திருக்கிறது. 2கொரி,3:3-18 நியாயப்பிரமாணம் பிழை உள்ளது. கிருபையின் பிரமாணம் பிழை இல்லாதது. எபி. 8:7-13 நியாயப்பிரமாணம் உருவழிந்து போகிறது. கிருபையின் பிரமாணம் ஒருக்காலமும் ஒழியாது,

மோசே கர்த்தருடைய சந்நிதானத்தில் நாற்பது நாட்கள் இருந்தார். தேவனிடத்திலிருந்து ஜனங்களுக்குத் தேவையான உபதேசங்களைப் பெற்றுக் கொண்டே இருந்தார். ஜனங்களை நடத்துவதற்காக மோசே மூப்பர்களையும் வைத்திருந்தார். யாத் 24:14 ஜனங்கள் பர்வதத்துக்குச் சமீபமாய் வந்தார்கள் அவர்களுக்கு ஒரு எல்லையை மோசே கொடுத்திருந்த படியினால் அவர்கள் அங்கே நின்றார்கள். மோசேயுடன் மூப்பர்களும் பர்வதத்துக்கு ஏறிப்போனார்கள். அவர்கள் தேவனைக் கண்டு மகிழ்ந்தார்கள். மோசே அவர்களையும் விட்டு கர்த்தருடைய மகிமையின் சந்நிதானத்திற்குப் போய் உட்கார்ந்தார் யாத். 24:13,18

பொதுமக்கள் பர்வதத்தினுடைய பள்ளத்தாக்கில்' இரண்டாவது கூட்டமாகிய மூப்பர்கள் பர்வதத்தில் ஏறினார்கள். மூன்றாவது மோசே தேவனுடைய பக்கத்தில் நெருங்கி இருந்தார். சீனாய்மலைப் பள்ளத்தாக்கில் நின்றவர்கள் அக்கினிப் புகை, மின்னல் முதலியவைகளையும், தேவனுடைய சத்தத்தையும் கேட்டார்கள். மூப்பர்கள், தேவனைக் கண்டு மகிழ்ந்தார்கள். ஆனால் மோசேயோ தேவனோடு நெருங்கி இருந்தார், தேவனோடு முகமுகமாய் அவர் பேசினார். இன்றும் இப்படிப்பட்ட மூன்று அனுபவங்களும் உண்டு. தேவனை தூரத்திலிருந்து கண்டு சத்தத்தைக் கேட்டு சந்தோஷிக்கின்ற ஒரு கூட்டத்தார். வேறொரு கூட்டத்தார் தெய்வீகக் காரியங்களில் கொஞ்சம் நெருங்குகிறவர் ஆனால் மோசேயோ தேவனோடு நெருங்கி பழகுகிறவர் நீ இதில் எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவன் என்பதை யோசித்துப்பார்.

மோசே ஜனங்களுக்காக தேவனுடைய சந்நிதானத்தில் ஜெபித்துக் கொண்டிருக்கும் போது சாத்தான் கிரியை செய்கிறான் மோசேயைக் காணவில்லை, ஆகையால் நமக்கு ஒரு தெய்வத்தை உண்டாக்க வேண்டுமென்று அவர்கள் யோசித்தார்கள். தேவனுடைய ஜனங்களை சோதிப்பதற்கு சாத்தான் சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தான்.

7

ஜனங்களின் விருப்பத்திற்கேற்ற 'ஊழியக்காரன்

தேவனால் அழைக்கப்பட்ட ஊழியக்காரனாகிய மோசேயுடன் ஜனங்கள் என்னவெல்லாம் சொன்னாலும் அவர் தேவனுடைய

சட்டத்தை எவ்விதக் காரணத்தினாலும் மாற்றி அமைக்கவில்லை மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கர்த்தருடைய சித்தம் அல்லாமல் வேறொன்றையும் அவர் விரும்புவதில்லை அவருடைய உபதேசத்திற்கு மக்கள் என்ன அபிப்ராயம் சொல்லுவார்கள் என் பதை அவர் யோசிக்கவில்லை. பரலோகம் அதற்கு ஆமென் என்று சொல்ல வேண்டுவதே அவர் விருப்பம்.

ஆம் விசுவாசியே தேவ ஊழியக்காரனே உன்னுடைய ஜீவியமும் செய்கையும் உபதேசங்களும் ஆராதனையும் எல்லாவற் றிற்கும் மக்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் குறித்து நாம் சிந்திக்க வேண்டாம். பரலோகம் இதற்கு என்ன சொல்லுகிறது என்பதை மாத்திரம் நீ யோசித்தால் போதும். நீ செய்கிறதற்கும் பேசுவதற்கும் எல்லாம் பரலோகத்திலிருந்து "ஆமென்" என்று சொல்லுகிறதா இல்லையா என்பதை நன்றாய் யோசித்துப் பார்க்க வேண்டும். மனிதன் அப்படியும் இப்படியும் பேசலாம். இன்று ஓசன்னா ஓசன்னா என்று பாடுகிறவர்கள் அதே தெருவின் அதே இடத்தில் வைத்து அதே வாயினால் சிலுவையில் அறை என்றும் சொல்வார்கள் ஆகையால் மனுஷனைப் பிரியப்படுத்த வேண்டாம் நாம் தேவனைத்தான் பிரியப்படுத்த வேண்டும்.

ஆரோன் மக்களைப் பிரியப்படுத்துகிற ஊழியக்காரன் மோசே தேவனுக்கு பயந்து தேவனைப் பிரியப்படுத்துகிற ஊழியக் காரருமாயிருக்கிறார். இன்றும் மனுஷருடைய நிலைக்கு எற்ற விதமாய் அவர்களைப் பிரியப்படுத்தி தேவ சத்தியத்தை மறைத்து ஜீவிக்கிற ஊழியர்காரர்கள் உண்டு 2 தீமோ. 4:3.4 ஆனால் உண்மையான ஊழியர்களோ கர்த்தர் கட்டளையிட்ட யாவையும் மக்களுக்கு உபதேசித்து (மத் 28:20) பிரயோஜனமானவைகள் ஒன்றையும் மறைக்காமல் (அப். 20.20) உபதேசிக்கிற ஊழியர் களும் உண்டு.

ஆனால் சத்தியத்தைப் பேசுகிறவர்களை மக்கள் விரும்புகிற தில்லை. தீர்க்கதரிசிகள் சத்தியத்தைப் பேசினார்கள் அவர்களைக் கல்லெறிந்து கொன்றார்கள். இயேசு சத்தியத்தைப் பேசினார் மக்கள் அவரை சிலுவையில் அறைந்தார்கள். அப்போஸ்தலர்கள் சத்தியத்தைப் போதித்தார்கள் அவர்கள் இரத்தசாட்சிகளாய் மரித் தார்கள். ஆம், அருமை விசுவாசியே நீ சத்தியத்திற்கு சாட்சியாய் இருக்கிறாயா? இல்லையா? என்பதை யோசித்துப்பார் ஆம் ஊழியக் காரனே நீ சமாதானமில்லாதிருந்தும் சமாதானம் சமாதானம் என்று சொல்லி தேவனுடைய ஜனமாகிய குமாரத்தியின் காயங் களை மேற்பூச்சாய் நீ குணமாக்குகிறாயா? (எரே 8: 1) நான் நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தைக் ஓடினேன். விசு

வசத்தைக் காத்தேன் என்று தைரியமாய் உன்னால் சொல்லக் கூடுமா? உண்மையுள்ளவனும் உத்தமனுமாகிய நல்ல உக்கிராணக்காரனே என்று பரலோகம் உன்னைக் கூப்பிடுமா? ஆரோன் மனுஷரைப் பிரியப்படுத்துகிற ஊழியக்காரன் மனுஷர்களுக்குப் பயப்படுகிற ஊழியக்காரன் மோசேயோ தேவனுக்குப் பயந்து சத்தியத்தை சத்தியமாய் போதிக்கிறவர். நீ எப்படிப்பட்டவன் என்பதை யோசித்துப்பார்.

8

தங்கத்தால் செய்யப்பட்ட கன்றுக்குட்டி

ஜனங்களுக்கு முன் செல்லும் தெய்வங்கள் வேண்டும் என்று மக்கள் விரும்பினார்கள். அவர்கள் ஆரோனிடம் இதைக் குறித்துச் சொன்னவுடன் ஆரோனும் அதை ஒத்துக் கொண்டான். அவர்களுக்கு தங்கத்தினால் ஒரு கன்றுக்குட்டியை செய்து கொடுத்தார் ஜனங்கள் கன்றுக்குட்டி முன்பாக பண்டிகையை ஆசரிக்கவும் விளையாடவும் செய்தார்கள். இந்தக் கன்றுக்குட்டிக்கு அவர்கள் கர்த்தர் என்று பெயர் கொடுத்தார்கள். யாத் 32:1-6 கர்த்தருடைய சத்தத்தை நேரடியாய் கேட்டவர்களும் அக்கினி, இடி, மின்னல், எக்காள சத்தம் புகை என்பவைகளை நேரில் கண்டவர்களும் கேட்டவர்களுமான இந்த ஜனங்கள் விக்கிரகத்தை உண்டு பண்ணி வணங்குகிறார்கள். எப்படிப்பட்ட ஆசீர்வாதங்களையும் கிருபையின் வரங்களையும் மக்கள் பெற்றுக் கொண்டாலும் சாத்தானால் விழித்தள்ளுவதற்கு முடியும். ஆகையால் நாம் மிகுந்த பயத்துடன் ஜீவிக்க வேண்டும்.

தேவனுடைய கோபம் அவர்கள் மேல் உண்டாயிற்று. ஜனங்களை அழித்துவிட வேண்டுமென்று தேவன் விரும்பினார். ஆனால் மோசேயுடைய விண்ணப்பத்தினால் ஜனங்கள் நியாயத்தீர்ப்பினின்று விடுதலை பெற்றுக் கொண்டார்கள்.

மோசே பர்வதத்திலிருந்து இறங்கி வரும்போது பெரிய ஆரவாரத்தையும் நடனத்தையும் கண்டார். நடனமும் கம்பீர சத்தமும் மட்டும் கண்டு சரியான எழுப்புதல் என்று சொல்லக்கூடாது' யாத். 32:17-20 சட்டவிரோதமான ஆராதனை நடக்கும் போதும் நடனம், ஆரவாரம், கெம்பீர சத்தம் முதலியவை உண்டாகலாம்.

தேவனுடைய உடன்படிக்கை பெட்டி லேவியராகிய ஆசாரியர்களால் சுமந்து கொண்டு போவதே தேவனுடைய சட்டம் 1 நாளா. 15:2 ஆனால் தேவனுடைய தாசனாகிய பிரமாணமுடையவனாகிய தாவீது மாட்டுவண்டியில் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை கொண்டு போனர் அதன் நிமித்தம் அநேகர் மாண்டார்கள். அப்படி சட்டவிரோதமாய் உடன்படிக்கைப் பெட்டியை கொண்டுபோன சந்தர்ப்பத்திலும் மக்கள் நடமாடினார்கள். குதித்தார்கள். 1 நாளா. 13:7-11 ஆகையால் நடனமும் கெம்பீர சத்தமும் மட்டும் காண்கிறதினால் அது சத்திய ஆராதனை என்று நம்பக்கூடாது சத்தியமான ஆராதனைக்கும் நடனமும் கெம்பீர சத்தமும் உண்டாகலாம். ஆனால் நாம் பகுத்தறிய வேண்டும்.

முழுவதும் விலையேறப்பெற்ற தங்கத்தால் உண்டுபண்ணப்பட்ட அந்த கன்றுக்குட்டியை கண்டதும் மக்கள் மகிழ்ந்தார்கள். இந்தக்காலத்திலும் விலையேறப் பெற்றதும் பார்வைக்கு அழகானதுமான ஆலயங்களையும் ஆராதனைகளையும் காணும்போது தேவனுடைய ரகசியங்களை அறியாதவர்கள் ஏமாந்து போவார்கள் இது மாட்டுத் தொழுவில் பிறந்தவர்களின் மார்க்கம் என்பதையும் படிப்பறியாதவர்களாகிய ஏழைகளின் கையில் ஒப்படைக்கப்பட்டது என்பதையும் மக்கள் மறந்து விடுகிறார்கள்.

9

உடைக்கப்பட்ட கற்பலகை

மோசேக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று அந்தக் கற்பலகைகளை உடைத்தார். அந்த கன்றுக்குட்டியை அக்கினியில் போட்டு அரைத்து தண்ணீரில் கலக்கி ஜனங்கள் குடிக்க வைத்தார்.

ஜனங்களின் பாவம் கோபத்தை உண்டுபண்ணிற்று. கற்பலகைகள் உடைக்கப்பட்டன. இந்தக்கற்பலகைகள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு நிழல், ஜனங்களின் பாவங்களை பாவமறியாதவராகிய இயேசுவின் மேல் தேவன் சுமத்தினார். 2 கொரி, 5:21 பாவத்தின் சம்பளம் மரணம், நம்மேல் வரவேண்டியது தேவ கோபம் இயேசுவின் மேல் விழுந்தது. ஜனங்களுடைய பாவம் மோசேக்குக் கோபம் உண்டுபண்ணி கற்பலகைகளை உடைத்தது போல் நம்முடைய பாவங்கள் இயேசுவைக் கல்வாரியில் அறைவதற்கு காரணமாயிற்று. மீண்டும் மோசே தேவனுடைய பர்வதத்தில் ஏறிப்போய் தேவனிடமிருந்து கட்டளையை

வாங்கினார். அந்தக் கட்டளையை அவர் உடன்படிக்கை பெட்டிக்குள்ளே வைத்தார். உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளே இருக்கிற அந்த கட்டளையை ஒருவராலும் உடைக்க முடியாது. இயேசு நமக்காக கல்வாரியில் உடைக்கப்பட்டார். இப்போது அவர் பரலோகத்தில் நமக்காக வீற்றிருக்கிறார். இனி அவரை ஒருவராலும் உடைக்க முடியாது

10

கடிந்து கொள்ளப்பட்ட ஊழியக்காரன்

மக்கள் செய்த தவறைக் குறித்து மோசே மக்களிடம் கேட்கவில்லை, மோசே ஆரோனிடம்தான் கேட்டார். சர்வவல்லவராகிய தேவன் தம்முடைய ஊழியர்களிடம் கொடுக்கப்பட்ட பொறுப்பைக் குறித்து ஊழியர்களிடம் கணக்கு கேட்பார். லூக். 16:10-12 நான் ஜனங்களுக்கு பயந்து இப்படிச் செய்தேன் என்று ஆரோன் சொன்னார் நம்முடைய ஜீவியத்தில் நான் மக்களுக்கு பயந்து தேவனுடைய கட்டளையை மீறினேன் என்று சொல்வதற்கு இடம் கொடுக்கக்கூடாது தேவனுடைய ஊழியக்காரனாகிய ஆரோன் மக்களை பிரியப்படுத்த வேண்டியவன் அல்ல அவன் தேவனுக்கு பயந்து ஊழியஞ் செய்ய வேண்டியவன் ஜனங்கள் இப்படியும் அப்படியும் சொல்வார்கள். ஆனால் ஊழியக்காரனோ பயப்படாமல் உறுதியாய் நிற்க வேண்டும். ஜனங்கள் அவர்களின் விரோதிகள் முன்பாக அவமான படத்தக்கதாக நிர்வாணமாக்கினார். மலையான பாளையில் ஜனங்களை கட்டவிழ்த்து விட்டார் என்று எழுதப்பட்டுள்ளது. ஜனங்கள் எப்பொழுதும் கட்டுப்பாடுக்குள்ளே நிற்க வேண்டும். ஊழியர்கள் அவர்களை கட்டவிழ்த்து விடக்கூடாது. தேவனுடைய சபையையும் ஜனங்களை தம் ஊழியர்கள் சரியான முறையில் கட்டுப்பாட்டில் நடத்த வேண்டும். விசுவாசிகளை மனம்போல அவர்கள் விருப்பத்திற்கேற்ற நிலையில் அவிழ்த்து விடக்கூடாது இப்படி ஆரோன் விட்டதின் பலனாய் பெருநஷ்டம் உண்டாயிற்று. இப்படியே இன்றும் அநேக ஊழியர்கள் சபைக்கு பயந்து கடிந்து கொள்ள வேண்டியவைகளை கடிந்து கொள்ளாமல் ஜனங்களின் விருப்பத்திற்கேற்ற நிலையில் நிர்வாணமாய் அவிழ்த்து விடுகிறார்கள். 2தீமோ. 4:1-4 1பே. 5:2-4 ஆரோன் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆசீர்வாதத்தை அவன் நஷ்டப்படுத்தினான். யாத். 32:20-25.

11

பட்டயம் தரித்துக்கொண்டவர்களாகிய லேவியர்

புறஜாதிகளுக்கு முன்பாக தேவனுடைய நாமத்தை அவமானப்படுத்துவதற்காக இஸ்ரவேலுடைய மத்தியில் நடந்ததான விக்கிரக ஆராதனையில் உண்மையில் தேவனை நேசிக்கிறவனும் தேவனுக்கு பயந்தவருமாகிய மோசேக்கு கோபமுண்டாயிற்று. தேவனை நேசிக்கிறவர்களாகிய தம்முடைய பிள்ளைகள் தீவிரவாதிகளாக இருக்க வேண்டும் என்பதே தேவசித்தம். மோசேக்கு கோபம் ஏன் உண்டாயிற்று என்று ஒருவேளை நினைக்கலாம். புறஜாதிகள் மத்தியில் தேவனுடைய நாமத்தை அவமானப்படுத்துவதற்கு ஆரோன் சம்மதித்ததால்தான் மோசேக்கு இப்படி கோபம் உண்டானது. யாத். 32:25 கர்த்தருடையபட்சத்தில் உள்ளவர்கள் யார்? அவர்கள் என்னிடத்தில் சேரக்கடவர்கள் என்றான். யாத். 32:26 இப்படி மோசேயின் கட்டளையை கேட்டதும் திடீரென்று லேவியர் எல்லோரும் கர்த்தருடைய சந்நிதானத்தில் மோசேயிடம் ஓடி வந்தார்கள். தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தவர்களாகிய அந்த ஜனங்களை கொன்று போடு என்று தேவனுடைய கட்டளையின் பிரகாரம் மோசே சொன்னார். லேவியர் தன்னுடைய சிநேகிதர்கள்—சொந்தக்காரர்கள் என்றும் ஏழையோ பணக்காரனோ என்றும் பாராமல் பட்டயத்தினால் கொன்று போட்டார்கள் யாத். 32:27 கர்த்தருடைய கட்டளைக்கு விபரீதமாய் நாம் நேசிக்கிற நம்முடைய சொந்த சகோதரர்கள் ஆனாலும் நம்முடைய சிநேகிதர்கள் ஆனாலும் நம்முடைய நெருங்கிய சொந்தக்காரர்கள் ஆனாலும் யார் ஆனாலும் நாம் தேவவசனமாகிய பட்டயத்தினால் அவர்களை வெட்ட வேண்டும் என்னவென்றால் மனிதர்களைப்பார்க்கிலும் நாம் இயேசுவை நேசிக்க வேண்டும். அன்று 3000 பேர் கொல்லப்பட்டார்கள். யாத். 32:27,28 உபா.33:8-9.

நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோது 3000 பேர் செத்துப்போனார்கள். யாத். 32:28 ஆனால் கிருபையின் பிரமாணம் கொடுக்கப்படும்போது 3000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள். அப். 2:41 நியாயப்பிரமாணம் மரணத்தினுடைய ஊழியம் 2கொரி 3:6 அந்த மரணத்தினுடைய ஊழியம் கொடுக்கப்பட்டவுடனே 3000 பேர்களின் மரணத்திற்கு அது காரணமாயிற்று.

ஆனல் ஜீவ வசனமாகிய புது உடன்படிக்கையை பெந்தெகோஸ்தே நாளில் மக்களுக்கு கொடுத்தபோது 3000 பேர்கள் நித்திய ஜீவன் பெற்றுக் கொள்ள காரணமாயிற்று. அப். 2:41.

பாவம் செய்கிறவர்களுடைய பெயர்களை ஜீவ புஸ்தகத்திலிருந்து நான் கிறுக்கிப்போடுவேன் என்று தேவன் மோசேயிடம் சொன்னர். யாத். 32:32,33 நாம் பரிசுத்தமாய் ஜீவிப்போமானல் தேவன் நம்முடைய பெயரை ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடமாட்டார். ஆனல் நாம் பாவம் செய்வோமானல் கண்டிப்பாய் அவர் கிறுக்கிப் போடுவார். வெளி 3:5 இரட்சிக்கப்பட்டு தேவகிருபையை பெற்று தேவ ஆசீர்வாதத்துடன் நாம் இருந்தாலும் தேவகிருபையை விட்டு என்றென்றைக்குமாய் நாம் தப்பிப் போவோமானல் தேவன் ஜீவ புஸ்தகத்திலிருந்து நம்முடைய பெயரை கிறுக்கிப் போடுவார். பரலோகத்தில் பெயரெழுதப்பட்டவர்களாகிய நாம் (லூக் 10:19) நம்முடைய பெயர் மாற்றப்படாமல் இருப்பதற்கு ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.

12

வனந்திரப் பிரயாணமும் ஆபரணமும்

மீட்கப்பட்ட ஜனங்கள் வனந்திர வழியாய் பாலும் தேனும் ஓடுமிடமாகிய கானன் தேசத்திற்கு போகிறார்கள் இஸ்ரவேல் ஜனங்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியின் ரத்தத்தால் மீட்கப்பட்டவர்கள் செங்கடலைத் தாண்டினவர்கள். அடிக்கப்பட்ட கன்மலையின் தண்ணீரை குடித்தவர்கள். சீனய் மலையில் தேவனுடைய மகிமையைக் கண்டவர்கள். ஆனல் அவர்கள் தங்களுடைய ஆபரணங்களை விட்டுவிடவில்லை அப்பொழுது தேவன் தம் ஜனத்தோடு கோபப்படுகிறார், நீங்கள் வணங்கா கழுத்துள்ள ஜனங்கள் என்று தேவன் சொல்கிறார். நான் உங்கள் நடுவே செல்லமாட்டேன் என்றார். என்னவென்றல் அவர்கள் ஆபரணங்களை தரித்துக் கொண்டதினல் கர்த்தர் அவர்களுடைய மத்தியில் செல்லமாட்டேன் என்று சொன்னர் தேவனுக்கு மிகவும் வெறுப்பான ஒன்றுதான் ஆபரணம். நீங்கள் போட்டிருக்கிற ஆபரணங்களை கழற்றிப் போடுங்கள் என்று தேவன் கட்டளையிட்டார். இதைக் கேட்டதும் அவர்களுக்கு மிகுந்த துக்கமுண்டாயிற்று. உடனே அவர்கள் தங்கள் ஆபரணங்களை கழற்றிப் போட்டார்கள். ஓரேப் மலை முதல் தங்கள் ஆபரணங்களை பரிபூரணமாய் விட்டுவிட்டார்கள். தேவனு

டைய ஜனங்கள் ஆபரணங்கள் போடக்கூடாது என்பது தேவனுடைய கட்டளை. ஆகையால் நாம் ஆபரணங்களை கண்டிப்பாய் கழற்ற வேண்டும். யாத். 33:1-6.

சர்வவல்லவராகிய தேவன் யாக்கோபுக்கு தரிசனமானர். அவரும் அவர் குடும்பத்தினர் அனைவரும் தேவனை ஆராதிக்கிறதற்காக தேவகட்டளையின் பிரகாரம் தீர்மானம் எடுத்தார்கள் அவர்களுடைய ஆராதனைக்கு முன்பு அவர் சில முக்கியமான காரியங்களைச் செய்தார்.

(i) அவர்களுடைய வஸ்திரங்களை மாற்றி பரிசுத்தமடைந்தார்கள். வஸ்திரத்தில் என்ன பரிசுத்தம்? என்று ஒருவேளை நினைக்கலாம். ஒரு விசுவாசியுடைய வஸ்திரத்துக்கும் ஒழுங்கு தேவையாயிருக்கிறது. இந்த பிரபஞ்சத்துக்கேற்ற வேஷம் நாம் தரிக்கக் கூடாதென்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லியிருக்கிருர். ரோம 12:2, மாத்திரமல்ல ஸ்திரீகள் தகுதியான வஸ்திரத்தை தரிக்கவேண்டுமென்று பவுல் கூறுகிருர். 1 தீமோ. 2:9,10 இப்படி நம்முடைய வஸ்திரம் அவிசுவாசிகளைப் போல இருக்கக் கூடாது. நாம் தகுதியான வஸ்திரத்தைத்தான் தரிக்க வேண்டும் பவுல் அப்போஸ்தலனுடைய வஸ்திரம் போடப்பட்டபோது வியாதியஸ்தர் குணமானர்கள். அப். 19:11,12. ஆகையால் நம்முடைய வஸ்திரம் பரிசுத்தமாயிருக்க வேண்டும். நம்முடைய ஆவி, ஆத்துமா சரீரம் மாத்திரமல்ல நம்முடைய வஸ்திரமும் பரிசுத்தமாயிருக்க வேண்டும்.

(ii) யாக்கோபின் குடும்பத்தினர்கள் அவர்களுடைய ஆபரணங்களையும் கழற்றி யாக்கோபின் கையில் கொடுத்தார்கள். அவர்கள் அவைகளை கர்வாலி மரத்தின் கீழே புதைத்தார்கள். அப்படி தேவனுடைய சத்தியத்துக்கு பரிபூரணமாய் யாக்கோபுடைய குடும்பத்தினர் கீழ்ப்பட்டபோது அவர்களைச் சுற்றிலுமிருந்த எல்லா ஜனங்களுக்கும் தேவனைக் குறித்து ஒரு பயம் உண்டாயிற்று. ஆம் தேவனைக் குறித்து சரியான பிரதிஷ்டைப் பண்ணப்பட்டவர்களாகிய தம் பிள்ளைகளை காணும்போது அவிசுவாசிகளுக்கு கண்டிப்பாய் பயம் உண்டாகும். ஆதி. 35:5

கண்களில் மையிட்டு சிங்காரித்துக்கொண்டு இருக்கிறவர்களை தேவன் விரும்புவதில்லை அப்படிச் செய்தவளாகிய யேசபேலை தேவனுடைய தாசனாகிய யெகூ கொன்றுபோட்டார் என்று நாம் வேதத்தில் வாசிக்கிறோம். 11 இரா. 9:30-34, வெளிப்படுத்தல் 17ம அதி. காணகிற வேசியும் அவளை சிங்காரித்துக் கொண்டு

ஆபரணங்களை தரித்துக் கொண்டு இருந்தாள் என நாம் வாசிக்கிறோம். ஆகவே தேவனுடைய ஜனங்கள் ஒருக்காலமும் ஆபரணங்களை தரிக்கக் கூடாது. 1 பே. 3:1-3. 1 தீமோ. 2:9,10.

13

யார் தலைவர்?

தேவனால் அழைக்கப்பட்டவர்களாகிய தம்முடைய ஊழியர்களுக்கு விரோதமாய் சாத்தான் ஒரு சிலரை ஏவி விட்டான். தேவன் தம்முடைய ஊழியத்துக்காக அழைத்து பிரித்தெடுத்தவர்களாகிய தம்முடைய ஊழியர்களை வைத்திருக்கிறார். இப்படிப் பட்ட ஊழியர்களுக்கு விரோதமாய் சாத்தான் எழுந்து வருவான் என்பதற்கு சந்தேகமில்லை எண்ணாகமம் 16ம் அதிகாரத்தில் நாம் படிக்கும்போது கோராகு. தாத்தான், அபிராம், ஓன், என்பவர்கள் 250 பேரை தங்களுடன் சேர்த்துக்கொண்டு மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் முறுமுறுத்தார்கள். மோசே கர்த்தருடைய சந்நிதானத்தில் முகங்குப்புர விழுந்து அழுது ஜெபித்தார்.

தேவனால் வைக்கப்பட்டிருக்கிற தம்முடைய ஊழியர்களுக்கு விரோதமாய் அக்காலத்தில் மாத்திரமல்ல இக்காலத்திலும் மக்கள் எழுந்து வருவார்கள். ஜனங்கள் எப்போதும் தேவனால் நடத்தப் படுகிற தங்களுடைய ஊழியர்கட்கு கீழ்ப்பட்டு இருக்க வேண்டுமென்பதே தேவசித்தம். எபி 13:17; 1 பே. 5:1-5; 1 தீமோ. 3:4 ஆனால் தேவனுடைய ஆலோசனைக்கு விபரீதமாய் தான் சாத்தான் கிரியை செய்வான். அது சாத்தானுடைய சுபாவம். இன்றும் அநேக இடங்களில் சாத்தானால் விசேஷமாய் ஏவுதல் கிடைக்கப் பட்டவர்களாகிய சில விசுவாசிகள் தேவனுடைய ஊழியர்களுக்கு விரோதமாய் எழுந்து வருகின்றதை காணலாம். நாங்கள் எல்லாரும் பரிசுத்தவான்கள் நீங்கள் மட்டும் பரிசுத்தவான்கள் என்று சொல்லலாமா? என அவர்கள் மோசேயிடம் கேட்டார்கள் அந்தப்படியே இந்தக் காலத்திலும் ஒரு சிலர் கேட்கிறார்கள். நாங்களும் இரட்சிக்கப்பட்டவர்கள்; ஞானஸ்நானம் பெற்றவர். பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் எங்களுக்கும் ஒரு சில கிருபையின் வரங்கள் ஆகையால் நாங்களும் ஊழியர்கள் நாங்களும் சபை நடத்துவோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். இது பயங்கரமான தப்பு என்று அவர்கட்கு உணர்ச்சியில்லை தேவனால் தெரிந்து கொள்ளப்படடவர்கள் அல்லாமல் இந்தக் கனமான ஊழியத்தை தானாய் எடுக்கக்கூடாது எபி, 5:4.

மோசேக்கு விரோதமாய் ஒருவன் முறையிட்டான். எனக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள் என்று தேவன் சொல்கிறார் என்னவென்றால் கானான் தேசத்தை வேவு பார்க்கிறதற்காக மோசே ஒரு சிலரை அனுப்பினான். அவர்களில் ஒரு சிலர் அந்தக் கானான் தேசத்திலே நமக்கு பிரவேசிக்க முடியாதென்று சொல்லி ஜனங்களுடைய இதயங்களை கரையப்பண்ணினார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் முறுமுறுத்தார்கள். எண். 14:1,2. ஆனால் தேவன் அதைக்குறித்து மோசேயோடு சொல்லும்போது அவர்கள் எனக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள் என்று தேவன் சொன்னார் எண். 14 26,27. நாம் தேவ ஊழியர்கட்கு விரோதமாய் பேசுகிறது தேவனுக்கு விரோதமான பாவம் என்பதை நாம் அறிய வேண்டும். ஒருவன் தேவனுடைய ஊழியக்காரனை ஏற்றுக்கொண்டு அவனுக்கு உதவி செய்தால் அவன் தேவனுக்கு உதவி செய்கிறான் என்று வேதம் கூறுகிறது மத். 10:40-42. மிரியாம் மோசேயுடைய சொந்த சகோதரி. அப்படிப்பட்ட சொந்த சகோதரி மோசேக்கு விரோதமாய் முறுமுறுத்தபோது தேவன் அவளை தண்டித்தார் தேவன் அவளை குஷ்டத்தால் தண்டித்தார். எண். 12:1-10 உசியா இராஜாதான் செய்யக்கூடாத ஊழியத்தை தேவனுடைய ஊழியர்களுடைய சட்டத்திற்கு விரோதமாய் செய்ததின் பலனாய் குஷ்ட வியாதியுடையவராய் மாற்றப்பட்டார். II நாளா. 26:16-20.

ஆனபடியால் எவ்வித காரணத்தினாலும் ஒரு விசுவாசி ஊழியர்கட்கு விரோதமாய் பேசவோ, செய்யவோ கூடாது. அப்படி செய்கிறதின் பலனாய் அநேகர் சாபமுடையவர்களாய் மாற்றப்படுகிறார்கள். ஜனங்களுக்கு எப்போதும் தலைவராக வர வேண்டும் என்கிற எண்ணம் உண்டாகலாம். தேவன் ஒருவனை அழைத்தால் அதனை ஒருவராலும் தடைபண்ண முடியாது. மோசே கண்ணீருடன் விண்ணப்பம் பண்ணினார். தேவன் அவர்களை தண்டிக்கப் போகிறார் என்பதை மோசேக்கு வெளிப்படுத்தினார் தேவனுக்கு கீழ்ப்படுகிறவர்கள் கீழ்ப்படியாதவர்களின் மத்தியிலிருந்து பிரிந்து போங்கள் என்று மோசே சொன்னார். திடீரென்று பூமி பிளந்து அந்த பொல்லாதவர்களின் கூட்டத்தை விழுங்கினது இதைக் கண்டதும் மற்ற மக்கள் அங்கேயிருந்து ஓடிப்போனார்கள் ஓடிப்போனவர்களின் மேல் பரலோகத்தினின்றும் அக்கினி இறங்கி அவர்களை அழித்தது. எண். 16:26-50. தேவனால் அழைக்கப்பட்ட மோசேயை தேவன் மக்கள் மத்தியில் வைத்து கனப்படுத்தினார்.

பன்னிரண்டு கோல்கள்

மீண்டும் இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் தலைவர் யார் என்கிற எண்ணம் உண்டாயிற்று. தேவன் பன்னிரண்டு கோத்திரக்காரரையும் கூப்பிட்டு ஒவ்வொரு கோத்திரக்காரரும் ஒவ்வொரு கோல்கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அவரவருடைய கோல்களில் அவரவருடைய கோத்திரப் பெயரும் எழுதப்பட்டிருந்தது. லேவியர் கோத்திரத்தினுடைய கோலின் மேல் பிரதான ஆசாரியனாகிய ஆரோனுடைய பெயர் எழுதப்பட்டிருந்தது. எல்லோரும் அவர்களுடைய கோல்களை சாட்சி பெட்டிக்கு முன்னே வைத்தார்கள். எந்தக் கோத்திரத்தினுடைய கோல் துளிர்க்குமோ அந்த கோத்திரம்தான் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கோத்திரம் என்று மோசே சொன்னார் மோசே கோல்களை கர்த்தருடைய சந்நிதியில் வைத்தார். அடுத்த நாள் பார்க்கும்போது ஆரோனுடைய கோல்மாத்திரம் துளிர்த்து பூத்து பதாம் பழம் உள்ளதாகக் காணப்பட்டது. அதிகாரம் 17. ஆரோன் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர் என்பதை இப்படி தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். தேவனுக்கும் தேவ ஊழியர்கட்கும் விரோதமாய் முறுமுறுத்துக் கொண்டவர்கள் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பு உண்டாயிற்று அவர்கள் மேல் தேவனுடைய கோபம் வருவதற்காக சாத்தான் அவர்களை இப்படி ஏமாற்றினான் இன்னும் தேவ ஊழியருக்கு விரோதமாய் முறுமுறுக்கிறவனே நீ தேவனால் வைக்கப்பட்டிருக்கிற ஊழியக்காரனை அல்ல, தேவனை சேவலப்படுத்துகிறாய். நம்முடைய ஜீவியத்தில் தேவ ஊழியர்களுக்கு விரோதமாய் நாம் பேசக்கூடாது. அப்போஸ்தலனாகிய பேதுரு ஜாதி வித்தியாசம் காட்டினார். அது தப்புதான். ஆனால் விசுவாசிகள் அவரிடம் போய் நீர் செய்தது தப்பு என்று சொல்லவில்லை. அவரைப்போல் ஊழியக்காரனாகிய பவுல் பேதுவைக் கண்டித்தார். கலா. 2:11-15, தேவ ஊழியர்களை ஊழியக்காரர்தான் கண்டிக்க வேண்டும். விசுவாசிகள் அவர்களுடைய குற்றத்தை சொல்வதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை. நோவா மதுபானத்தால் வெறிகொண்டு நிர்வாணமாய் படுத்தது தப்புதான் ஆனால் அவருடைய பிள்ளைகளுக்கு அதனை வெளிப்படுத்துவதற்கு அதிகாரமில்லை அவருடைய இளைய மகன் அதைக் கண்டு மற்றவர்களுக்கும் சொன்னான். அதின் பலனாய் அவனுக்கு சாபமுண்டாயிற்று தப்பு செய்தது நோவா. சாபம் வாங்கினது மகன். ஆகையால் விசுவாசியே நீ ஜாக்கிரதையாயிரு. தேவ ஊழியர்கட்கு விரோதமாய் நீ பேசி சாபத்தை வாங்கவேண்டாம்.

இந்தப் பன்னிரண்டு கோல்கள் வேறொரு அர்த்தத்தையும் காட்டுகிறது. பதினொரு கோல்களும் உயிரில்லாமல் காய்ந்து போனதாயிருந்தது. என் ஆரோனுடைய கோல் மட்டும் துளிர்க்க வேண்டும். இது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு நிழல். உலகத்திலுள்ள எல்லா தலைவர்களும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டார்கள். அவர்களுடைய கல்லறைகள் இன்னும் திறக்கப்படவில்லை. ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கல்லறை மாத்திரம் திறக்கப்பட்டது அவர் மாத்திரம் உயிர்த்தெழுந்தார், அவர் மாத்திரம் இன்னும் உயிரோடிருக்கிறார்.

எந்தக் காலத்திலும் தேவன் தம்முடைய ஜனத்துக்கு தெரிந்து கொள்ளப்பட்ட ஊழியர்களை வைத்திருந்தார். அவர்கள் மூலமாய் ஜனங்கள் நடத்தப்படவேண்டும். இஸ்ரவேலர்களுக்கு தேவன் மோசேயை கொடுத்தார். அவர்களுக்குப் பின் யோசுவாவைக் கொடுத்தார். யோசுவாவுக்குப் பின் நியாயாதிபதிகளைக் கொடுத்தார். அதற்குப்பின் இராஜாக்களையும், தீர்க்கதரிசிகளையும் கொடுத்தார். புதிய எற்பாடு வரும்போது கர்த்தர் அப்போஸ்தலர்களையும், தீர்க்கதரிசிகளையும், சபையின் போதகர்களையும் வைத்தார். அவர்கள் மூலமாய் சபை நடத்தப்படுவதுதான் தேவனுடைய நோக்கம். இதற்கு விபரீதமாய் யார் எதைச் செய்தாலும் அவர்களை தண்டிப்பார். ஆகையால் தேவனுடைய சட்டத்திற்கும், ஒழுங்குக்கும் கீழ்ப்படிந்திரு. தேவன் உன்னை வைத்திருக்கும் இடத்தில் உண்மையுள்ளவனாய் அவரை மகிமைப்படுத்தி ஜீவிக்க வேண்டும்.

14

ஆரோனுடைய மரணம்

எண். 20:23-29

தேவனுடைய தாசனாகிய ஆரோன் வனாந்திரத்தில் எத்தனையோ கஷ்டங்கள், துன்பங்கள் அனுபவித்து கர்த்தருடைய ஊழியத்தைச் செய்தார். ஆனால் மக்களுடைய விருப்பத்தின் பிரகாரம் கன்றுக்குட்டியை உண்டுபண்ணி தேவகோபத்திற்கு

இடம் கொடுத்தபடியால் தேவன் அவரை தண்டித்தார். அவர் வாக்குத்தத்த கானானில் பிரவேசிக்க முடியவில்லை. தேவ ஊழியர்களே நீங்கள் பெற்றுக் கொள்ளவேண்டிய அநேக நன்மைகளை ஆசீர்வாதங்களை நீங்களே விட்டுவிடுகிறீர்கள். மக்களுடைய விருப்பத்திற்கேற்ப நிலையில் போய் ஆசீர்வாதத்தை இழந்தவனாகிய ஆரோனைப்போல உனக்கும் சம்பவிக்க வேண்டாம். தேவனுடைய ஆசாரியன் ஆனாலும் தேவனுக்காக எத்தனை வருஷங்கள் உழைத்தவன் ஆனாலும் தப்பு செய்தால் தண்டனை உண்டு ஆகையால் நீ ஜாக்கிரதையாயிரு.

ஆரோனும் அவனுடைய மகன் எலியாசையும் கூட்டிக்கொண்டு ஓர் பர்வதத்தில ஏறினர். அங்கே வைத்து ஆரோனுடைய ஸ்தானவஸ்திரத்தை கழற்றி அவருடைய மகனாகிய எலியாசருக்கு உடுத்தினர் ஆரோன் அங்கு வைத்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டார். எண். 20:23-28

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர் விசாரிக்கப்படும்போது நீர்ஜீவனுள்ள தேவனுடையகுமாரனாகிய கிறிஸ்துவோ? என்று பிரதான ஆசாரியன் கேட்டான் உடனே ஆம் என்று இயேசுவானவர் சொன்னர். அதைக் கேட்டபொழுது பிரதான ஆசாரியன் அவருடை வஸ்திரத்தை கிழித்துக் கொண்டார். மத். 26:64-66 லேவி. 21:10ல் எவ்விதக் காரணத்தினலும் பிரதான ஆசாரியன் அவருடைய வஸ்திரத்தைக் கிழிக்கக் கூடாது என்று எழுதப்பட்டுள்ளது. ஆனல் இயேசுவை விசாரணை செய்யும் பொழுது அந்த ஆசாரியன் வஸ்திரத்தைக் கிழித்தார், பிரதான ஆசாரியனுடைய வஸ்திரம் பொன்னிஞலும், இளநீலநூலினலும் இரத்தாம்பர நூலாலும், சிவப்புநூலாலும் பிரித்தெடுத்த பஞ்சு நூலாலும் அழகாய் நெசவு செய்யப்பட்ட வஸ்திரம். யாத். 28.6 இந்த வஸ்திரத்தைக் கிழிக்கக் கூடாது என்பது தேவனுடைய சட்டம். ஆரோன் அந்த வஸ்திரத்தை அவருடைய மகனாகிய எலியாசாவுக்குக் கொடுத்தார். அப்படி அந்த வஸ்திரம் இயேசுவுடைய காலத்திலும் அவர் விசாரிக்கப்படும்போது அந்த ஆசாரியன் தரித்துக் கொண்டிருந்தார் என் அவர் வஸ்திரத்தைக் கிழித்தார்? என்னவென்றல் அந்த வஸ்திரத்தை தரிப்பதற்கு வேறொரு பிரதான ஆசாரியன் இல்லை. இயேசுவின் மரணத்தோடே ஆரோனுடைய நியாயப்பிரமாண ஆசாரியத்துவம் முடிந்துவிட்டது ஆகையால் அன்றுமுதல் ஒரு பிரதான ஆசாரியன் இது வரையில் யூதருக்குள்ளே இல்லை. என்னவென்றல் இயேசு நியாயப்பிரமாணத்தின் ஆசாரியத்துவத்தை முடித்து அவர் ஆசாரியனுயிருக்கிறர். இப்பொழுது நம்முடைய பிரதான ஆசாரியர் இயேசுவே

15

வெண்கல சர்ப்பம்

இஸ்ரவேலருடைய பிரயாணம் அநேக நாட்கள் ஆனவு டனே அவர்களுக்கு சோர்வுண்டாயிற்று. எண். 21:4 நம்முடைய ஜீவியத்தில் இப்படிப்பட்ட சோர்வு சில சந்தர்ப்பங்களில் உண்டாகலாம். நாம் சோர்வுள்ளவர்களாயிருக்க வேண்டும். எனபது தேவசித்தமல்ல. ஏதாவது முக்கியமான விஷயத்திற்காக நாம் ஜெபித்து கிடைக்காமற் போனல் நமக்கு சோர்வு உண்டா வது சாதாரணம். நான் எத்தனையோ நாள் ஜெபித்து வருகிறேன். ஆனல் கர்த்தர் கொடுக்கவேயில்லையென்று சோர்ந்து போகிருர் கள். ஆனல் சோர்ந்து போகக்கூடாதென்றும், சோர்ந்து போகா மல் ஜெபிக்க வேண்டுமென்றும் கர்த்தர் சொன்னர். லூக். 18:1-8 ஆபிரகாம் தேவனல் தமக்கு ஒருமகன் கிடைக்கும் என்று வாக்குத் தத்தம் பெற்றபிறகு 25 வருஷம் சோர்வில்லாமல் காத்திருந்தார். ஆபிரகாம் வாக்குத்தத்தை பெற்றுக் கொண்டார். ரோ. 4:17-22 ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக் களில் சோர்ந்து போகாதபடிக்குதமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள் என்று அப்போஸ்தலனுகிய பவுல் சொன்னர் எபி 12:3 நம்முடைய ஜீவியத்தில் சோர்வு உண்டா காமல் இருக்க வேண்டுமானல் நாம் மனுஷரைப் பார்க்காமல் இயேசுவை மட்டும் பார்க்க வேண்டுப், மனுஷரைப் பார்த்தால் சோர்வு உண்டாகலாப்.

இந்த சோர்வு நிமித்தம் அவர்கள் தேவனுக்கும் தேவ ஊழியர் கட்கும் விரோதமாய் முறுமுறுத்தார்கள். தேவகோபம் அவர்கள் மேல் வந்தது. சர்ப்பங்களை தேவன் அவர்களுக்குள்ளே அனுப்பி னர். சர்ப்பங்களால் கடிபட்ட இஸ்ரவேலர் மரண பயத்தினல் அழுதார்கள். மோசே அவர்களுக்காக ஜெபித்தார். ஒரு வெண் கல சர்ப்பத்தை உண்டு பண்ணி கம்பத்தின் மேல் தொங்கவை என்று தேவன் சொன்னர். சர்ப்பத்தால் கடிபட்ட மக்கள் அந்த வெண்கல சர்ப்பத்தைப் பார்க்கும்போது மரணத்தினின்று விடுதலை பெற்றுக் கொள்வார்கள். கடிபட்டவர்களாகிய மக்கள் வெண்கல சர்ப்பத்தைப் பார்த்து உயிரடைந்தார்கள். எண். 21:4-12.

உலகத்திலுள்ள எல்லா மனுஷரும் பழைய பாம்பாகிய சாத்தா னல் கடிக்கப்பட்டவர்களாய் மரண பயத்தில் இருக்கிருர்கள்.

மோசேயால் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தைப் பார்த்தவர்களுக்கு மரணத்திலின்று விடுதலை பெற்றுக் கொண்டது போல் நமக்காக கல்வாரியில் உயர்த்தப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசத்தால் பார்க்கிறவர்கள் எவர்களோ அவர்கட்கு இரண்டாம் மரணமாகிய நரகத்திலின்று விடுதலை பெற்றுக் கொள்ள முடியும் யோ. 3:13-18

சில வருஷங்களுக்குப் பிறகு இஸ்ரவேலர் இந்த வெண்கல சர்ப்பத்தைநிகுஸ்தான் என்ற பெயரோடு அதை வணங்கி வந்தார்கள். அதற்கு அவர்கள் தூபங்காட்டினார்கள். II இரா 18:4. இந்த காலத்திலும் மக்கள் கல்வாரி மரணம் மூலமாய் இயேசு நமக்கு கொடுத்த ஆசீர்வாதத்தை விட்டு சிலுவையை வணங்குகிறார்கள். ஏன் சிலுவையை வணங்குகிறார்கள் என்று கேட்டால் இயேசு சிலுவையில் மரித்தபடியினால் என்று அவர்கள் சொல்லுவார்கள். இயேசு கல்வாரியில் மரித்ததினால் சிலுவைக்கு அல்ல மகிமை. இயேசுவுக்குத்தான் மகிமை கொடுக்க வேண்டும். அப்படியானால் இயேசுவின் சிரசின்மேல் முள்கிரீடம் வைத்தபடியால் ஒரு முள் கிரீடமும், கை கால்களில் ஆணி அடிக்கப்பட்டபடியால் ஆணிகளையும் ஈட்டியால் குத்தப்பட்டபடியால் ஈட்டியையும் உண்டு பண்ணி வைத்து ஆராதிக்க வேண்டும் ஏன் சிலுவையை மாத்திரம் இவர்கள் வணங்குகிறார்கள்? சிலுவை ஆராதனை இயேசுவின் கல்வாரி மரணத்திற்கு எத்தனையோ வருஷங்களுக்கு முன்பு பாபிலோனிய மதத்தில் இருந்தது பாபிலோனிய எழுத்தில் முதல் எழுத்தாகிற 'தவ்' என்பது ஆங்கிலத்தில் T போல் உள்ளது புறஜாதிகளில் அநேகரும் சிலுவையை ஆராதித்துக் கொண்டு இருந்ததாய் சரித்திரத்தில் உண்டு. அந்த ஆராதனை நாலாம் நூற்றாண்டில் கான்ஸ்டைன்டன் சக்கரவர்த்தி மூலமாய் சபைக்குள்ளே நுழைந்தது. அப்படி அது விக்கிரக ஆராதனையாய் இன்று உலகமெங்கும் மாற்றபட்டுள்ளது. இன்று ரோமன் கத்தோலிக்கர் C.S.I. முதலிய பல சபையாரும் சிலுவையை ஆராதிக்கிறவர்களாய் மாறியிருக்கிறார்கள். இது விக்கிரக ஆராதனை என்று உணர்த்தப்பட்டு தேவனை ஆராதிக்கும்படி கர்த்தர் கிருபை செய்வாராக.

16

பிலேயாம்

இஸ்ரவேலர் மோவாபின் சமனான வெளிகளில் பாளயமிறங்கினார்கள். தேவனுடைய ஜனங்கள் சத்துருக்களை விரட்டினதையும் அவர்களோடு சர்வ வல்லமையுள்ள தேவன் இருக்கிறார் என்பதையும் தேவன் அவர்களோடு இருக்கிறபடியால் அவர்களுக்கு எல்லாம் கூடும் என்பதையும் மோவாப் ராஜாவுக்கு நன்றாய் தெரியும் அவன் தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர் நிமித்தம் பயந்தான். யுத்தம் செய்து அவர்களை ஜெயிக்க முடியாது என்று மோவாபின் ராஜாவுக்கு நன்றாக தெரியும் அந்தக் காலத்தில் பிலேயாம் என்ற ஒரு தீர்க்கதரிசி இருந்தார் அவர் ஏதோம் ராஜாவாகிய பேயோர் எனும் ராஜாவின் மகனாக இருந்தார். ஆதி. 36:31,32 அவர் ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்தார். அவர் தேவன் ஆவியானவரால் நிறைந்தவராய் அநேக தீர்க்கதரிசனங்கள் பேசியிருக்கிறார். தேவன் அவரை உபயோகித்தார். ஆனால் அவருக்குள்ளே பொருளாசை எறிற்று. இவர் சொல்லும் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறும் என்ற எண்ணம் அந்த நாட்களில் மக்களுக்கு இருந்தபடியால் அவரைக் கூப்பிட்டு இஸ்ரவேல் ஜனங்களை சபிப்போம் என்று மோவாப் ராஜா எண்ணினார், அந்த ராஜா பிலேயாமுக்கு ஆளை அனுப்பினார். எண்.22:1-7 அவர் இராஜாவால் அனுப்பப்பட்ட ஆளைக் கண்டதும் இராஜாவிடம் போக வேண்டுமென்கிற ஆசை உண்டாயிற்று தீர்க்கதரிசிகட்கு பொருளாசை உண்டாகலாமா? ஆம் உண்டாகலாம். சாத்தான் தீர்க்கதரிசிகளையும், அப்போஸ்தலர்களையும் எல்லாரையும் விழத்தள்ளுவதற்கு முயற்சி பண்ணுகிறான். யூதாஸ் தெரிந்து கொள்ள பட்ட அப்போஸ்தலன். அவனையும் சாத்தான் பொருளாசையால் விழத்தள்ளினான். வேதாகமத்தில் நாம் பார்ப்போமானால் நாம் விட்டோட வேண்டிய நான்கு பாவங்களை காணலாம். அவைகளில் ஒன்று பொருளாசை

விட்டோட வேண்டிய பாவங்கள் :

(i) நம்மை நெருங்கி நிற்கிற பாவங்கள். எபி. 12:1
(ii) பொருளாசை, 1 தீமோ. 6:19
(iii) வாலிப இச்சைகள். 2 தீமோ. 2:22
(iv) உலகத்தினுடைய அசுத்தம் 2 பே: 2:20

மாத்திரமல்ல பொருளாசையால் கெட்டுப் போனவர்கள் ஏழு பேரை வேதாகமத்தில் நாம் காணலாம்.

i) லோத்தின் மனைவி ஆதி. 19:26 லூக். 17:32
ii) ஆகார்.. யோசு. 7:1, 20-26
iii) கேயாஸ் 2 இரா. 5:23-27
iv) யூதாஸ் மத் 27:1-10
v) இயேசுவிடம் வந்த வாலிபன். லூக் 9:57,58
vi) அன்னியா மனைவி சப்பீரா. அப் 5:1-11
vii) தேமா. 2 தீமோ. 4:10

விசுவாசிகளிலும் ஊழியக்காரரிலும் இந்தப் பாவம் உண்டாகலாம். வேதத்தில் இரண்டு கூட்டத்தார் இயேசுவிடம் திரும்பி வந்ததாய் காணவில்லை அதில் ஒன்று பொருளாசைக்காரர் மற்றொன்று துர்உபதேசக்காரர். இந்த இரண்டு கூட்டத்தாரும் திருபபி வந்ததாய் வேதத்தில் எங்கும் காணவில்லை பொருளாசை எல்லா தீமைக்கும் வேர். என்பதை நாம் அறிந்து அதை நாம் விட்டோடாவிட்டால் 1 தீமோ. 6:10 நாம் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது.

இந்த பிலேயாம் அவருக்குள்ளே பொருளாசை உண்டான படியால் போகவேண்டுமென்கிற ஆசை அவருக்கு உண்டாயிற்று. இன்று இரவில் என்னோடுகூட நீங்கள் தங்கினால் நான் தேவனிடம் கேட்டு பதில் சொல்லுவேன் என்றார். அவர் ஜெபம்பண்ணும் போது நீ போக வேண்டாம் என்று கர்த்தர் சொன்னார். ஆனாலும் போகவேண்டுமென்கிற ஆசை அவனுக்கு உண்டாயிற்று இராஜா திரும்பவும் பிலேயாமிடம் முன்னால் அனுப்பினவர்களைப் பார்க்கிலும் மதிப்பிற்குரியவர்களை அவரிடம் அனுப்பினார். இது சாத்தானுடைய வேறொரு பெரிய தந்திரம். சத்தியத்துக்கு சாட்சியாய் நிற்கும் தேவனுடைய பிள்ளைகளை ஏமாற்றுவதற்காக உலகப் பிரகாரம் பட்டதாரிகளும், ஐசுவரியவான்களும் மதிப்பிற்குரியவர்களுமானவர்களை அவர்களிடம் அனுப்புவது சாத்தானுடைய தந்திரம் அவர்கள் பேசும்போது திடீரென்று மக்கள் ஏமாந்து தேவனைப் பார்க்கிலும் மனுஷருக்கு மதிப்பு கொடுப்பது சாதாரணம் பிலேயாம் திருப்பவும் தேவனிடம் ஜெபித்தார். இவருடைய பொருளாசையையும் மனுஷர்மேல் உள்ள பற்றுதலையும் போக வேண்டாம் என்கிற தேவனுடைய கட்டளையை மீறி திரும்பவும் அவன் கேட்கிறதை தேவன் கண்டபடியால் சரி நீ அவர்களோடு போ என்று சொன்னார். அவர் அவர்களோடு போகிறார் நம்முடைய ஜீவியத்தில் தேவனுக்கு விருப்பமற்ற காரியங்களை நாம் கேட்கும் போது செய்ய வேண்டாம் என்று தேவன் சொல்வார் மீண்டும்

மீண்டும் நாம் தேவனிடங் கேட்கும் போது தேவன் சில சந்தர்ப் பங்களில் சரி நீ போ என்று சொல்லுவார் என்னவென்றால் தேவ சித்தத்துக்கு விரோதமாய் நாம் போகிற வழி தப்பானதென்பதை நம்மை அனுபவ மூலமாய் விளக்க வேண்டுமென்பதை தேவனு டைய திட்டம். அவர் போகிற வழியில் உருவின பட்டயமுமாய் தேவ தூதன் நின்றார் பொருளாசையினால் இருதயக் கண்கள் குருடு அடைந்தவனாகிய பிலேயாம் தெய்வீக தரிசனம் இல்லாமல் தேவனால் அனுப்பப்பட்ட தேவனுடைய தூதனைக் காணமுடிய வில்லை. ஆனால் அவருடைய வாகன மிருகமாகிய கழுதை தூதனைக் கண்டது.

தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட அநேக மக்கள் தெய்வீக தரிசனம் இல்லாதவர்களாய் அவர்களுடைய கண்கள் அமெரிக்கன் டாலரையும்; ஜெர்மன் பணத்தையும் மாத்திரம் காணக் கூடியவர்களாய் இருக்கும்போது மதிப்பில்லாத ஏழை களாகிய கழுதையைப்போலுள்ள அநேகருடைய கண்களை தேவன் திறக்கிறார். இன்று அநேக ஊழியர்கள் தாங்கள் பெற்றுக் கொண்ட ஆதி தரிசனமும் ஊழியத்தைக் குறித்து அவர்கட்குள்ள வெளிப்படுத்தலும் நஷ்டமாய் போயிற்றென்று துக்கத்துடன் சொல்லிக் கொள்கிறேன். எண். 22·12-32 1 பே. 2:15-18

பிலோமின் கழுதை கர்த்தருடைய தூதனை மதில் ஓரமாய் கண்டதும் பயந்து வழியில் இருந்து வயலுக்குப் போயிற்று பிலேயாம் தன் தப்பிதங்களை உணராமல் கழுதையை அடித்தான். நம்முடைய குற்றங்களை கண்டு நாம் உணர்த்தப்பட்டு நாம் தேவனிடத்தில் திருந்துவதற்கு பதிலாய் நாம் மற்றவர்களை குற்றம் சாட்டினால் பிரயோஜனமில்லை எத்தனையோ வருஷங்கள் அவருடைய சொல்லுக்கு முழுவதுமாய் கீழ்ப்பட்டு அவரை சுமந்த அந்தக் கழுதை இப்படி செய்யக் காரணமென்ன என்பதை அவன் கண்டு பிடிக்கவில்லை. நம்முடைய ஜீவியத்தில் அசாதாரணமான காரியங்கள் நடக்கும்போது அதின் காரணமென்ன என்பதை நாம் கர்த்தருடைய சந்நிதானத்தில் உட்கார்ந்து ஜெபித்து கண்டு பிடிக்க வேண்டும்.

பேசாத மிருகமாகிய கழுதை பேசும்படி தேவன் அதன் வாயை திறந்தார். கழுதை பேசத் தொடங்கினது. நம்முடைய ஜீவியத்தில் ,நாம் செய்ய வேண்டியவைகளை செய்யாமற் போனால் அந்த ஸ்தானத்தில் தேவன் வேறொருவரை அனுப்புவார். கடைசி யாய் பிலேயாம் தேவனுடைய தூதனைக் கண்டார். ''இது உம்மு டைய பார்வைக்கு தகாத்தாயிருக்குமானால் நான் திரும்பிப் போவேன்'' என்றார் எண் 22:34 இது சரியான பாவ உணர்ச்சி

யிலிருந்து சொல்லுகிறதல்ல, நான் பாவி என்கிற சரியான உணர்ச்சி உண்டாகுமானால் ஐயோ! தேவரீர் நான் பாவி நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்தேன் என்று கதறி அழுது அவன் தேவனிடம் திருந்த வேண்டும் அப்படி செய்வதற்கு பொருளா சையாகிய பயங்கர பாவம் அதற்கு இடங்கொடுக்கவில்லை பிலேயாம் பாலாக் ராஜானிடம் போனார். அங்கே அவர் பலிபீடத் தைச் கட்டி பலி நடத்தினார் அவன் பலி செலுத்தின பிறகு பரிசுத்த ஆவியானவர் அவன் மேல் இறங்கினார் அவன் தீர்க்க தரிசனம் பேசத் தொடங்கினான். எண். 23:7 24:25 அவன் தீர்க்கதரிசனம் மூலமாய் இஸ்ரவேலரை ஆசீர்வதித்தார். சாபம் போடவில்லை அவர்களை சபிக்க வேண்டுமென்கிற நோக்கத்துடன் மோவாப் ராஜா பிலேயாமை அழைத்தார் ஆனால் அந்த சாபம் ஆசீர்வாதமாக மாற்றப்பட்டது. எண். 23:11,12 இன்றும் அநேகர் தேவனுடைய பிள்ளைகளை, தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்களை தேவன் நடத்துகிற விதத்தைக் கண்டு பொறுமை உடையவர்களாய் தேவனுடைய பிள்ளைகளை சபிக்கிறார்கள் ஆனால் அந்த சாபம் தேவன் ஆசீர்வாதமாய் மாற்றுகிறார். என்னவென் றால் காரணமில்லாமல் போடுகிற சாபம் எவ்விதக் காரணத்தாலும் பலிக்காது என்று சத்திய வேதம் சொல்லுகிறது. சங். 102:8 நீதி. 26:2 கடைசியாய் பாலாக் ராஜாவுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. என்னவென்றால் சாபம் போடுவதற்காக அழைக் கப்பட்டவனாகிய பிலேயாம் ஆசீர்வாதத்தைக் கொடுத்தார். ஆகை யால் ராஜாவுக்கு மிகுந்த வேதனையுண்டாயிற்று பிலேயாமுக்கும் வெள்ளியும் பொன்னும் கிடைக்காதுஎன்கிற மனவேதனை உண்டா யிற்று, ஆகையால் அவன் ராஜாவை அழைத்து ஒரு ரகசிய உபதேசத்தைக் கொடுத்தார். பொதுப் பிரசங்கத்தைக் குறித்தும் பொது தீர்க்கதரிசனத்தைக் குறித்தும் நாம் பயப்பட வேண்டாம், ஆனால் ரகசிய உபதேசத்தை நாம் ஜாக்கிரதையுடன் கவனிக்க வேண்டும். என்னவென்றால் சாத்தான் நுழைவது இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில்தான். பிலேயாம் கொடுத்த துர் உபதேசம் என்ன என்பது தேவபிள்ளைகளாகிய நாம் அறிய வேண்டிய முக்கியமான காரியம் இஸ்ரவேல் ஜனம் பிரித்தெடுக்கப்பட்ட ஜனம் என்பதை எண். 21:9 அவர்கள் அந்நிய ஜாதிக்காரரோடு கலந்து கொள்ளக் கூடாது என்பதையும் பிலேயாமுக்கு நன்றாய் தெரியும் அப்படி அவர்கள் கலந்து கொள்ளுமானால் தேவன் அவர்களை கைவிடுவார் என்பதை பிலேயாமுக்கு தெரியும். ஆகையால் பிலேயாம் ராஜாவை ரகசியமாய் அழைத்து இவர்கள் பிரித்தெடுக்கப்பட்ட ஜனங்கள் என்றும் புறஜாதிகளுடன் இவர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்றும் அப்படி கலந்து கொள்ளுமானால் தேவன் அவர்

களை கைவிடுவார் என்றும் பிலேயாம் அவருக்குரகசியமாய் உபதே
சித்தார் எண். 24:14 வெளி 2:14 2 பே. 2:15 அதின் பலனாய்
இஸ்ரவேல் ஜனங்களின் மத்தியில் மோவாபிய பெண்கள் அனுப்ப
பட்டார்கள் இஸ்ரவேலர் அவர்களை தங்களுக்கு மனைவிமாராய்
சேர்த்துக் கொண்டார்கள். அந்த புறஜாதி பெண்களின் விருப்
பத்தின் பிரகாரம் தேவனுடைய ஜனங்களின் வேசித்தனம்பண்ணி
யதும் அல்லாமல் அவர்களுடைய விக்கிரகங்களுக்குப் பலியிட்டு
அவர்களுடைய விக்கிரகங்களை வணங்கவும் செய்தார்கள்
எண். 25:5 வெளி. 2:14 இப்படி மக்கள் பாவம் செய்தபடியால்
தேவன் அவர்களை தண்டித்தார். தேவனுடைய கோபத்தால்
24000 பேர் செத்துப் போனார்கள். எண். 25:1-8

பிலேயாம் கொடுத்த உபதேசம் 24000 பேருடைய மரணத்
துக்கு காரணமாயிற்று. அவர் நல்ல தீர்க்கதரிசி தீர்க்கதரிசனங்
கள் நிறைவேறிற்று. ஆனால் அவர் துர் உபதேசக்காரர் ஒரே
நாளில் மாத்திரம் 23000 ம் (1 கொரி. 10:8) ஆக 24000 மும்
ஜனங்களின் மரணத்துக்கு காரணமாயிற்று எண். 25:3 இன்றும்
கிருபையின் வரம் பெற்றவர்களாகிய தேவனுடைய பிள்ளைகள்
பிலேயாமைப் போல் பிரித்தெடுத்த அனுபவம் இல்லாமல் மற்றவர்
களையும் பிரித்தெடுத்த அனுபவத்தை விட்டு விலக்கி அழிவுக்குள்
கொண்டு போகிறார்கள். இஸ்ரவேலருடைய அழிவுக்கு காரணம
பிரித்தெடுத்த அனுபவத்தில் இருக்க வேண்டிய ஜனங்கள் அதை
விட்டு விலகி தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தபடியால்
தேவனுடைய கோபம் உண்டாயிற்று. தேவனுடைய ஜனங்கள்
தங்களுடைய ஜீவியம் அவிசுவாசிகளுடன் கலந்து கொள்ளாமல்
துர் உபதேசத்தையும் துர் ஆகாரங்களையும், விட்டு விலகின
அனுபவத்தில் இருக்க வேண்டும். வெளி 18:4 2 கொரி 6:14;7:1
பிலேயாம் பரிசுத்தவான்களைப் போல் மரிக்க வேண்டும் என்று
விரும்பினார் ஆனால் தேவனுக்கு விரோதமாய் ஜனத்தை. அசுத்
தத்திற்கு நேராய்வழிநடத்தின பிலேயாம் பட்டயத்தால் செத்தான்
எண் 31:16 யோசு. 13:22 பணத்திற்காய் பிரித்தெடுத்த அனுப
வத்தை வேண்டாம்என்று நினைக்கிற பிலேயாமின் உபதேசத்தைப்
பிடித்திருக்கிறவர்களை இன்று எங்கும் காணலாம்.

17

உடன்படிக்கைப் பெட்டியும் வனந்திர ஜீவியமும்

வனந்திரத்தில் அவர்களுடனே தேவனுடைய உடன் படிக்கை பெட்டி இருந்தது. அவர்கள் போகிற எல்லா வழிகளிலும் தேவனுடைய உடன் படிக்கைப் பெட்டியை அவர்கள் கொண்டு போனார்கள் அப்படி உடன் படிக்கைப் பெட்டி இல்லாமல் போகக் கூடாது என்பது தேவனுடைய சட்டம். நம்முடைய ஜீவியத்தில் உடன் படிக்கை பெட்டியாகிய கிறிஸ்து நம்மோடு எப்போதும் இருக்க வேண்டும். அவர்கள் புறப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு உடன்படிக்கை பெட்டி புறப்பட வேண்டும் உடன்படிக்கைப் பெட்டியுடன் போகிறவர்கள் ஜனங்களுக்கு இளைப்பாறும்இடத்தை தேடிக் காட்டும்படிக்கு போக வேண்டும் அந்தப்படியே உடன் படிக்கைப் பெட்டியாயிருக்கிற கிறிஸ்து நமக்கு முன்பாய் மரணம் அடக்கம், உயிர்ப்பு, என்கிற மூன்று நாட்கள் கடந்து பரலோகம் போயிருக்கிறார், அந்த உடனபடிக்கைப் பெட்டி (கிறிஸ்து) நமக்கு ஒருநல்ல ஒய்ந்திருக்குமிடம் ஆயத்தப் படுத்தும்படி பரலோக கத்துக்கு போயிருக்கிறார். யோ. 14:2,3 எண். 10:33-36

இஸ்ரவேல் ஜனங்களுக்குயுத்தம் உண்டாகும் போது அவர் கள் உடன்படிக்கை பெட்டியை அவர்களுக்கு முன்பாக கொண்டு போக வேண்டும். அப்போது அவர்கட்கு வெற்றி உண்டாகும். 2நாளா. 6:12-17

18

எழுபது மூப்பர்கள்

ஜனங்கள் வனந்திர வழியாய் போகும்போது பலவிதமான பிரச்சனைகளை கடந்துபோக வேண்டியதாயிருந்தது. ஜனங்களு டைய எல்லா பிரச்சனைகளும் அதிகரிக்கும்படி மோசே மாமனாரின் ஆலோசனையின்படி தெரிந்து கொள்ளப் பட்டவர்களால் சரியான முறையில் காரியங்கள் நடக்காமல் போயிற்று. தேவஜனங்களுக்கு மனுஷருடைய ஆலோசனையின் பிரகாரமுள்ள ஒரு நடத்துதல் தேவை இல்லை. மனுஷனுக்கு அவனுடைய அறிவுக்குத் தக்க தான ஆலோசனையைதான் கொடுக்க முடியும் தேவனுடைய

சபைக்கு தேவனுடைய ஆலோசனைதான் தேவையாயிருக்கிறது. இந்த ஜனங்களை நான் தனிப்பட்ட நிலையில் நடத்த முடியா தென்று மோசே தேவனிடம் வேண்டிக் கொண்டார். எண். 11:12-15 அதற்கு தேவன் இஸ்ரவேல் மூப்பர்களில் ஜனங் களுக்கு எழுபது பேரை தமக்கு தெரிந்து கொள்ள வேண்டுமென்று கட்டளையிட்டார் தேவன் மோசேயுடைய ஆவியில் கொஞ்சம் எடுத்து மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தார். உடனே அவர் கள் மேல் பரிசுத்த ஆவியானவர் வந்தபடியால் அவர்களும் தீர்க்க தரிசனம் உரைத்தார்கள். எண். 11:16,17, 25-27 தேவன் மோசேக்கு கொடுத்த ஊழியத்திற்கு தேவையான பரிசுத்த ஆவி யின் வல்லமையையும் அவருக்கு கொடுத்திருந்தார். தேவன் அவரவர்கட்குக்கொடுக்கிற ஊழியத்திற்கு தக்கதான கிருபைகளை யும் கிருபையின் வரங்களையும் தேவன் கொடுப்பார் மோசே வேண்டிக் கொண்டபடியால் அவருடைய ஆசீர்வாதத்தில் ஒரு பாகம் மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அருமையான விசு வாசியே! ஊழியக்காரனே, தேவன் பொறுப்பான ஒரு பெரிய ஊழியத்தை உன்னுடைய கையில் தந்திருக்கிறார். ஒரு வேளை அது மிகவும் பாரமாயிருக்கலாம். ஆனால் அந்த பாரமானதை சுமப்பதற்கு தேவையான பரிசுத்த ஆவியின் வல்லமையையும் கர்த்தர் தந்திருக்கிறார் எனக்கு இவ்வளவு பெரிதான பொறுப்புகள் வேண்டாம் என்று நீ சொல்லாதே கர்த்தர் உனக்குத் தேவையான வரத்தையும், ஞானத்தையும், ஆசீர்வாதங்களையும் தந்தருளுவார். உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பொறுப்பை நீ பொறுமையுடன் செய்து முடிக்க வேண்டும்.

19

கானானிலிருந்து ஒரு திராட்சக் குலை

கானான் தேசம் எப்படிப்பட்டது என்பதை வேவு பார்க்கிற தற்காக மோசே பன்னிரண்டு பேரை அனுப்பினார் அவர்கள் கானான் தேசத்தை வேவு பார்த்துத் திரும்பும் போது ஒரு திராட்சக் குலையை ஒரு பெரிய தண்டின்மேல் வைத்துக் கட்டி இரண்டு பேர் சுமந்து கொண்டு வந்தார்கள். மாதுளைப்பழமும் அத்திப்பழமும் கானான் தேசத்திலிருந்து கொண்டுவந்தார்கள். திராட்சைப்பழம் யூதனுடைய ஆவிக்குரிய அனுபவத்தையும், மத் 21:33-41 அத்திப்பழம் அவர்களுடைய அரசியல் காரியத் தையும் மத். 24:32 மக்களைப் பழம் அவர்களுடைய சரீர நன்மை யையும் காட்டுகிறது. உன். 2:5; 4:3

சுமந்து கொண்டு போகிற திராட்சக் குலை இயேசுவுக்கு நிழலாய் இருக்கிறது தண்டை சுமந்து கொண்டு முதலாக போகிற வன் நான் திராட்சக் குலையை சுமக்கிறேன் என்று சொல்கிறான் ஆனால் அவன் அதைக் காண்கிறது இல்லை தொடுகிறதும் இல்லை ருசிக்கிறதும் இல்லை பழைய ஏற்பாடு பரிசுத்தவான்களும் கிறிஸ்துவை நம்பினார்கள். அவருடைய நிந்தையை சுமந்தார்கள் அவருக்காய் பாடுபட்டார்கள். அவரைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தார்கள் எபி. 11:26 1 பே 1:10-12 பழைய ஏற்பாடி லுள்ள எல்லா பரிசுத்தவான்களும் இயேசு வைத்தான் நம்பினார் கள் என்பதற்கு சந்தேகமில்லை ஆனால் புதிய எற்பாடு விசுவாசிகள் திராட்சக் குலையை சுமந்து கொண்டு பின்னால் போனவருக்கு நிழலாய் இருக்கிறார்கள். திராட்சக்குலையை சுமந்து கொண்டு பின்னால் போகிறவர்க்கு திராட்சக்குலையை நன்றாய் பார்க்கலாம். மாத்திரமல்ல கொடுவதற்கும் புசிப்பதற்கும் கூடும். இந்தப்படியே புதிய ஏற்பாடு விசுவாசிகளாய நாம் கிறிஸ்துவை காண்கிறோம் ருசிக்கிறோம் நன்றாய் அறிகிறோம்.

பன்னிரண்டு வேவுகாரர்களில் பத்துபேரும் தப்பிதமான எண்ணத்தை மக்களுக்குக் கொடுத்தார்கள். அதின் பலனாய் ஜனங்கள் அழவும், முறுமுறுக்கவும் செய்தார்கள். கானான் தேசத்தில் உள்ளவர்கள் பலவான்களும், இராட்சஷர்களுமாயிருக் கிறார்களென்றும் அவர்களை நமக்கு ஜெயிக்க முடியாது என்றும் சொல்லி ஜனங்களை அதைரியப் படுத்தினார்கள். எண். 13:1-33 இரண்டு பேர் மாத்திரம் நாம் அவர்களை ஜெயிக்க முடியும் என்றும் நாம் அதை சுதந்தரித்துக் கொள்ளலாம் என்றும் சொன்னார்கள். ஆனால் ஜனங்கள் தேவனுடைய சத்தியத்தைச் சொன்னவர்களின் வார்த்தைக்கு கிழ்ப்படவில்லை அன்றும் இன்றும் சத்தியத்தைச் சொல்கிறவர்களாகிய தேவ ஊழியர்கட்கு மக்கள் காது கொடுக் காது பொய்யை பேசி மக்களை ஏமாற்றுகிறவர்கட்கு சரியான முறையில் காது கொடுத்து அவர்களுக்கு மக்கள் கீழ்ப்படுவார்கள் எகிப்தில் பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை ஆக்கின வரும் செங்கடலை இரண்டாகப் பிரித்து அதின் மத்தியில் தங்களை நடத்தின வருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனை அவர் கள் மறந்து விட்டார்கள். மனுஷருடைய பேச்சுக்கு கீழ்ப்பட்டார் கள். அதின் பலனாய் ஜனங்கள் தேவ ஊழியர்கட்கு விரோதமாய் முறுமுறுத்து பாவம் செய்தார்கள். தேவனுக்குக் கீழ்ப்பட்டவர் களான தேவ ஊழியர்கட்கு தேவன் ஆசீர்வாதத்தை அருளினார். ஜனங்கட்கு அதைரியத்தைக் கொடுத்தவர்கள் மேல் தேவகோபம் உண்டான படியால் அநேகர் மரித்துப் போனார்கள். அன்று முறு

முறுத்தவர்களான ஜனங்கள் வனாந்திரத்தில் அழியுமட்டும் தேவன் அவர்களை மீண்டும் வனாந்திரத்தில் நடத்தினார் அதின் பலனாய் அவர்கள் அனைவரும் வனாந்திரத்தில் செத்து விழுந்தார்கள். எண். 14:26.39

20

மோசேயின் மரணம்

உபா. 34-ம் அதிகாரம்

தேவனுடைய தாசனாகிய மோசே தேவனால் அழைத்துப் பிரித்தெடுக்கப்பட்டு அவருடைய ஊழியத்தை நிறைவேற்றினார். தேவனுக்காக அவர் அநேக கஷ்டங்களும், அவமானங்களும், நிந்தைகளும் சகித்தார் தண்ணீரில்லாமல் மக்கள் கஷ்டப்பட்ட நேரத்தில் இரண்டாம் முறை கன்மலையை அடிக்க வேண்டும் என்று தேவன் சொல்லவில்லை. ஆனால் ஜனங்களுடைய தொல்லை தாங்க முடியாமல் மோசே கோபப்பட்டு தேவனுடைய சட்டத்தை மீறி கன்மலையை அடித்தார். நம்முடைய தேவன் நீதிபரான. எவ்வளவும் பெரிய பரிசுத்தவான் ஆனாலும் கர்த்தருக்காக எவ்வளவு பாடுபட்டவன் ஆனாலும் தப்பு செய்தால் தேவன் தண்டியாமல் இரார். மோசே தேவனுடைய தண்டனைக்கு பாத்திரனானது உண்மையானால் நீ எம்மாத்திரம்? ஆகையால் நீ ஜாக்கிரதையாயிரு. மோசே நேபோவின் மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியில் தேவனுடைய கட்டளையின் பிரகாரம் ஏறினான் அங்கே வைத்து கானான் தேசத்தை தேவன் மோசேக்கு காண்பித்தார். அங்கே வைத்து மோசே மரித்தார். மோசேயை அதே இடத்தில் தேவதூதர்கள் அடக்கம் பண்ணினார்கள். ஆனால் யூதா 9-ம் வசனத்தை நாம் வாசிக்கும் போது மோசேயின் சரீரத்தைக் குறித்து சாத்தான் வாதாடினான் என்று வாசிக்கிறோம். மோசேயுடைய சரீரம் அடக்கம்படுகிறதிலே சாத்தானுக்கு விரோதமில்லை என்னவென்றால் அவன் மரணத்துக்கு அதிகாரி மோசேயை தேவன் உயிர்ப்பித்தார். உயிர்த்தெழுதலுக்கு உள்ள நாள் ஆகவில்லை என்கிறதாக்கும் சாத்தான் அங்கு வாதாட காரணம் மோசேக்கு தேவன் மீண்டும் சில ஊழியங்கள் வைத்திருக்கிறபடியால் அவரை உயிர்ப்பித்தார். மறுரூப மலையில் இயேசுவின் மரணத்தைக் குறித்துப் பேசும் கூட்டத்தில் மோசேயையும் காணலாம். இன்னும் மகா உபத்திரவ காலத்தில் மோசே மீண்டும் வருவார். மோசே செய்ய வேண்டிய ஊழியத்தை அவர் நிறைவேற்றுவார். மத். 17:1-8 வெளி 11:4,9 உபா. 34

1

மோசேயின் மரணத்திற்குப்பின்

இஸ்ரவேல் ஜனம் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் பிரகாரம் கானான் தேசத்தில் பிரவேசிக்க வேண்டுமானால் அவர்கள் யோர்தான் நதியைக் கடந்துதான் ஆகவேண்டும் யோர்தான் நதியில் வருடத்திற்கு இரண்டு முறை பெருவெள்ளம் உண்டாகும் மழைக்காலத்தில் மழையின் காரணமாகவும், கோடைகாலத்தில் பனி உருகுவதின் காரணமாகவும், யோர்தானில் பெருவெள்ளம் ஓடும். இப்படி யோர்தான் நதி பிரவாதித்து வருகிற ஒரு சமயத்தில்தான் இஸ்ரவேலர் அதின்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். இனி யோர்தானைக் கடக்க வேண்டும். இஸ்ரவேல் ஜனத்தை அப்படி யோர்தானைக் கடக்கச் செய்து கானானுக்குள் கொண்டு போவதற்காகத் தேவன் மோசேயின் மரணத்திற்குப்பின் யோசுவாவைக் கரங்களில் எடுத்தார்.

2

யோசுவா ஜனங்களுக்குத் தலைவர்

யோர்தான் நதியைக் கடந்து ஜனங்களை கானானுக்குள் கொண்டு போகத்தேவன் மோசேயையோ ஆரோனையோ உபயோகிக்கவில்லை ஏன்? மோசே செய்த ஒரு தப்பினால் (எண். 20:8-12) அவனுக்குத் தேவன் இந்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கவில்லை. என்று சொன்னால் அது சரிதான் ஆனாலும் அதற்குள் வேறொரு ஆவிக்குரிய இரகசியம் உண்டு. மோசே நியாயப்பிரமாணத்திற்கும் யோசுவா கிறிஸ்துவுக்கும் நிழலாயிருக்கிறார்கள் நியாயப்பிரமாணம் மோசே மூலமாய் கொடுக்கப்பட்டது ஆனால் கிருபையின் பிரமாணம் கிறிஸ்து மூலமாய் நமக்குக் கொடுக்கப்பட்டது.

யோசுவா என்கிற பெயர் நமது வேதாகமத்தில் இருநூற்றுப் பதினாறு தடவை கொடுக்கப்பட்டுள்ளது. கி.மு. 285-ல் தாலமி ஃபிலாடல்பஸ் என்கிற எகிப்து ராஜா 62 யூத ரபிகள் (வேதபண்டிதர்) மூலமாய் பழைய ஏற்பாடை எபிரேய மொழியிலிருந்து கிரேக்க மொழிக்கு மொழிபெயர்த்தார். இந்த புஸ்தகத்திற்கு Septuagint Translation என்று பெயர், இந்த மொழிப்பெயர்ப்பில் யோசுவா என்கிற பெயர் இயேசு (Jesus) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த பெயர் ஜிகோசுவா (JEHOSHUA) என்றும் ஓசிய (OSHEA) என்றும் எழுதப்பட்டிருக்கிறது யோசுவா

என்கிற வார்த்தையும் இயேசு என்கிற வார்த்தையும் ஒன்றுதான் ஆகையால் யோசுவா இயேசுவுக்கு நிழலாயிருக்கிறார். மோசே யால் இஸ்ரவேல் ஜனத்தை கானான் தேசத்திற்குள் எவ்வாறு கொண்டு போக முடியவில்லையோ அதுபோல நியாயப் பிரமாணத் தால் நம்மை பரலோக ராஜ்ஜியத்திற்கு கொண்டு போக முடியாது (ரோ 8:3, கலா 4:1-7)

3

உடன் படிக்கைப் பெட்டி

இப்போது யோசுவா இவர்களை கானான் தேசத்திற்குள் நடத்தின விதத்தைக் குறித்து சிந்திப்போம் தேவனுடைய உடன் படிக்கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு தேவனுடைய ஆசாரி யர்கள் யோசுவாவின் கட்டளையின் பிரகாரம் புறப்பட்டார்கள்.

அவர்கள் புறப்பட வேண்டிய விதமாவது ஆசாரியர்கள் தங்களை பரிசுத்தப்படுத்திக் கொண்டு தேவனோடு இசைந்திருந்து விசுவாசத்துடன் உடன்படிக்கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு புறப்பட வேண்டும்.

உடன்படிக்கைப் பெட்டி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வுக்கு நிழலாயிருக்கிறது தேவனுக்கும் மனுஷனுக்கும் உள்ள எல்லா உடன்படிக்கைகளும் கிறிஸ்துவின் மூலமாய் கொடுக்கப் பட்டிருக்கிறது. இஸ்ரவேலருக்கும் உள்ள எல்லா உடன்படிக்கை களும் எழுதப்பட்டுள்ள நியாயப்பிரமாணப் புஸ்தகம் இந்தப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருக்கிறபடியால் இந்தப் பெட்டிக்கு உடன்படிக்கைப் பெட்டி என்று பெயர். கிறிஸ்துவுக்கு நிழலாகிய இந்த உடன்படிக்கை பெட்டியை சுமந்து கொண்டு ஆசாரியர்கள் போக வேண்டுமென்பது தெய்வச்சித்தம். அந்தப்படியே புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாமும் கிறிஸ்துவாகிய உடன்படிக் கைப் பெட்டியுடன் புறப்பட வேண்டும். உடன்படிக்கைப் பெட் டியை சுமக்கிறவர்கள் தங்களை பரிசுத்தப்படுத்தாமல் சுமக்கக் கூடாது என்று தேவன் கட்டளை கொடுத்தார். யோசு 3:5 கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாகிய நாம் ஜீவியத்தில் பரிசுத்தமில்லாமல் கிறிஸ்துவின் ஊழியத்தை செய்யக் கூடாது.

தேவனுடைய சட்டம் தெரியாதவர்களாகிய பெலிஸ்தியர் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை மாட்டு வண்டியில் கொண்டு போனதாக நாம் வாசிக்கின்றோம், (1 சாமு 6:1-14) அவர்கள் தேவனுடைய சட்டம் ஒன்றும் தெரியாதவர்கள் ஆனபடி

யால் தேவன் அவர்களை தண்டிக்கவில்லை. பெட்டி போய் சேர வேண்டிய இடத்தில் சேர்ந்தது ஆனால் தேவனுடைய சட்டம் தெரிந்தவனாகிய தாவீது ராஜா பெலிஸ்தராகிய புறஜாதியார் செய்தது போல மாட்டு வண்டியில் உடன்படிக்கைப் பெட்டியை வைத்துக் கொண்டு போனார். அதின் பலனாய் உடன்படிக்கைப் பெட்டி வண்டியிலிருந்து விழுந்தது. அதுமட்டுமல்ல அனேகருடைய மரணத்திற்கும் அது காரணமாயிற்று (1 நாளா 13 ம் அதிகாரம்) தேவனுடைய சத்தியத்தை அறியாதவர்களாகிய அவிசுவாசிகள் தப்பினமான முறையில் செய்வது போல தேவனுடைய சத்திய வசனத்தை அறிந்தவர்களாகிய நாம் தேவ வசனத்திற்கு விரோதமாய் நடப்போமானால் நமக்குக் கண்டிப்பாய் தண்டனை வரும். (1 நாளா. 15:13)

தேவனுடைய உடன்படிக்கைப்பெட்டியை சுமந்துகொண்டு பரிசுத்தத்துடன் தேவனுடைய ஊழியர்களாகிய ஆசாரியர்கள்புறப் பட்டார்கள். அவர்களுக்குத் தலைவனாய் தேவனால் கொடுக்கப்பட்ட யோசுவாவிற்கு அவர்கள் நூற்றுக்கு நூறு கீழ்ப்படிந்தார்கள் தேவனுடைய சபையின் விசுவாசிகள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பரிசுத்தத்துடன் தேவனால் கொடுக்கப்பட்டிருக்கிற ஊழியருடைய கட்டளைகளுக்கு முழு இருதயத்துடன் கீழ்ப்பட்டு போகாவிட்டால் தேவனுடைய அற்புதம் நடக்காது. தேவனுடைய பாதம் யோர்தான நதியில்மிதிக்கும் போதுஅந்தநதி இரண்டாகப் பிரிந்து போகும்மென்று யோசுவா சொன்னார்.

அவர்கள் யோசுவாவின் வார்த்தையைமுழு இருதயத்துடன் நம்பி யோர்தான் நதியில் தங்கள் பாதங்களை வைத்தார்கள். ஆ! என்ன ஆச்சரியம்! யோர்தான் நதி இரண்டாகப் பிரிந்து விட்டது.

யோசுவாவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து உடன்படிக்கைப் பெட்டியுடன் நதியில் பாதம் வைத்த போது அவர்கள் தேவனுடைய அற்புதத்தைக் கண்டது போல இன்றும் இயேசுவினுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து முழு விசுவாசத்துடன் அவர் சொல்லுகிறபடியே அவருக்கு கீழ்ப்படிவோமானால் இன்றும் அற்புதங்கள் நடக்கும். வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள் அப்பொழுது அவர்கள் சுகமாவார்கள் என்று இயேசு சொன்ன வசனத்தை முழு இருதயத்துடன் நம்பி வியாதியஸ்தர்களுக்காக கைகளை வைத்து ஜெபிப்போனால் நிச்சயமாய் தேவனுடைய கிரியை நடக்கும். (யோசு. 3:1-17)

4

யோர்தான்

இந்த உடன்படிக்கைப் பெட்டி மரணத்துக்கு நிழலாகிய யோர்தானைக் கடந்ததற்கு ஒரு முக்கியமான அர்த்தமுண்டு அதென்னவென்றால் இயேசு மரணத்தை ஜெயித்தார் என்பதாகும். இயேசு மாத்திரம் மரணத்தினுடைய, பாதாளத்தினுடைய திறவுகோலை உடையவராய் (வெளி. 1:18) நான் மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலமும் ஜீவிக்கிறேன் என்று சொல்லுகின்றார். மரணத்தினுடைய அதிகாரியாகிய பிசாசை தம்முடைய மரணத்தினால் ஜெயித்து மரணத்திற்கு அடிமைகளாய் இருந்த நம்மை விடுவித்தவரும் அவர் ஒருவரே. (எபி. 2:14,15)

இஸ்ரவேல் ஜனம் முழுவதும் அற்புதமாய் அந்த வெட்டாந் தரையின் வழியே நதியைக் கடந்து போனார்கள். ஆம் நம்முடைய தேவன் அற்புதமானவர். (ஏசா. 59:1) யோசுவாவின் கட்டளையின் பிரகாரம் 12 கற்களை யோர்தான் நதியின் மத்தியிலிருந்து அவர்கள் எடுத்து தங்களுடைய தோளில்வைத்து சுமந்து கொண்டு அவர்கள் தங்குமிடத்திற்கு கொண்டு வந்து வைத்தார்கள். அவைகளை கில்கால் என்கிற இடத்தில் ஊன்றினார்கள். யோர்தான் நதி இரண்டாய்ப் பிரிந்தது என்பதற்குச் சாட்சிகளாய் இந்தக் கற்களை அங்கு வைத்தார்கள். (யோசு. 4:1-8, 20-22)

யோர்தான் நதியாகிய பாவமரணத்தின்கீழ் கிடந்தவர்களாகிய நம்மை உடன்படிக்கைப் பெட்டியாகிய கிறிஸ்து மூலமாய் மீட்கப் பட்டதையே இது காட்டுகிறது.

இந்தக் கற்கள் புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்தில் எதைக் காட்டுகின்றதென்பதை சற்று யோசிப்போம்.

A. யோர்தான் நதி எப்பொழுதும் கலங்கிய தண்ணீராய்த் தான் இருக்கும். அதினுடைய ஆழத்தில் கிடக்கும் கற்கள் உளையான சேற்றிற்குள்ளே கிடக்கிறது. அந்த வழியாய் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி வரும் என்பதை இஸ்ரவேல் ஜனங்கள் நினைக்கவில்லை. ஆனால் தேவனுடைய அநாதி தீர்மானத்தின் பிரகாரம் அந்த உடன்படிக்கைப் பெட்டி யோர்தான் நதியை இரண்டாகப் பிரித்தது. இந்தக் கற்கள் அங்கே உள்ள மற்ற கற்களிலிருந்து எடுக்கப்பட்டு இஸ்ரவேலருடைய மத்தியில் கொண்டு வரப்பட்டது.

அது போலவே தேவனுடைய அநாதி தீர்மானத்தின் பிரகாரம் தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொண்டார். (எபே. 1:4) எத்தனையோ கற்கள் இன்னும் அங்கே கிடக்கிறது ஆனால் அளவுகளில் ஒரு சில கற்கள் மாத்திரம் வெளியே வந்தது போல் எத்தனையோ மக்கள் நம்முடைய கிராமங்களில் பட்டணங்களில் சொந்தக்காரர்களும் இருக்கும் போது உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட நம்மை அவர் தெரிந்து கொண்டார் என்பது சந்தோஷகரமான ஒரு இரகசியம் (எபே. 1:4, அப் 13:48, ரோ. 8:29-33) இயேசுவின் கல்வாரி மரணத்தினால் அவர் சாத்தானை தோற்கடித்தார் (கொலோ 2:14,15) தண்ணிருக்குள்ளிருந்து கற்களை தூக்கிக் கொண்டது போல் பாவத்திற்குள் இருந்தவர்களாகிய நம்மை கிறிஸ்து தூக்கியெடுத்தார் என்பதே இதனுடைய அர்த்தம்.

இந்தக் கற்களுடைய பக்தியினாலோ நன்மையினாலோ நற்கிரியைகளினாலோ இவைகள் வெளியேற்றப்பட்டது என்று நாம் சொல்லமுடியாது. நம்முடைய பக்தியினாலோ நன்மையினாலோ நற்கிரியைகளினாலோ அவர் நம்மை மீட்டுக் கொள்ளவில்லை தேவனுடைய அளவற்ற கிருபையினாலும் இரக்கத்தினாலும் தேவன் நம்மை இரட்சித்தார். [எபே. 2.4,5 தீத்து 3:4-7 ரோ. 4:1-9] இந்தக் கற்கள் இஸ்ரவேலரின மத்தியில கில்காலில் நாட்டப்பெற்றது. (யோசு. 4:20) காணியாட்சிக்குப் புறம்பாயிருந்த புறஜாதிகளாகிய நம்மை கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொண்டு வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரராகினர். (எபே. 2:11-19 1 கொரி. 12:13)

இந்தக் கற்கள் மற்றவர்களுக்கு சாட்சி (யோசு. 4:21-24) நாம் கிறிஸ்துவினுடைய சாட்சிகளாயிருக்கும்படி தேவன் நம்மை தெரிந்து கொண்டார். லூக். 24:48 அப். 1:8

இயேசு பவனி போகும் பொழுது ஓசன்னா. ஓசன்னா என்று பாடி மக்கள் ஆர்ப்பரித்தார்கள். பரிசேயருக்கும் சதுசேயருக்கும் அது மிகுந்த வேதனையை உண்டு பண்ணினது. இவர்கள் பேசாமலிருக்க இவர்களுக்குக் கட்டளையிடும் என்றுஅவர்கள் இயேசுவிடம் சொன்னார்கள். இவர்கள் பேசாமலிருந்தால் இந்தக் கற்கள் ஆர்ப்பரிக்கும் என்று இயேசு பதிலளித்தார். லூக் 19:37-40 இன்றும் அநேக தேவனுடைய பிள்ளைகள் அல்லேலூயா என்று சொல்லி கர்த்தரை மகிமைப்படுத்தும்பொழுது இந்தக் காலத்திலுள்ள சதுசேயரும் பரிசேயரும் வேதபாரகருமானவர்கள் இதை தடை செய்ய

றுமைந்தர் பண்ணுகிறர்கள். ஆனால் இந்த அல்லேலூயா என்ற சத்தம் உலகமெங்கும் உயர்ந்து கொண்டே இருக்கிறது. சந்திர மண்டலத்திற்குப்போன ஆம்ஸ்ட்ராங் போன்றவர்கள் அங்கேயும் அல்லேலூயா சத்தமிட்டு தேவனைக் கெம்பீரித்தார்கள். இயேசுவின் பகிரங்க வருகையில் பெருத்த நீரலுமுக்கம் போலவும் பெரு வெள்ளத்தின் இரைச்சல் போலவும் மக்கள் அல்லேலூயா சொல்லி கெம்பீரித்தார்கள். வெளி. 19:6

5

எரிகோ

யோசு. 6-ம் அதிகாரம்

இஸ்ரவேல் ஜனம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த கானான் வந்து சேர்ந்தார்கள். அங்கே அவர்கள் பஸ்கா ஆசரித்து தேவனை மகிமைப்படுத்தினார்கள். யோசு. 5:10-12 இவர்களுக்கு முக்கியமான இன்னும் சில காரியங்கள் கூட இருந்தது வாக்குத்தத்த தேசபாக்ய கானானை பெற்றுக்கொண்டபடியால் அவர்களுடைய வேலைகள் முடிந்தது என்று எண்ணக் கூடாது. அவர்கள் நிதமும் அந்த அனுபவத்திற்குள் இருக்க வேண்டுமானல் அவர்கள் செய்ய வேண்டிய வேறுசில காரியங்களும் இருந்தது. எரிகோ என்ற கோட்டையை நகர்க்க வேண்டுமென்பது அவற்றுள் முக்கியமான ஒன்றய் இருந்தது. நம் ஒவ்வொருடைய ஜீவியத்திலும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய பெரிய ஆசீர்வாதத்திற்கு தடையாய ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு எரிகோ மதில் உண்டு. இந்த மதிலை இடிக்க வேண்டியது அவசியம். எரிகோ மதிலைக் கண்டு பயப்படுவதற்காக தேவன் நம்மை அழைக்கவில்லை. அதை இடிப்பதற்காகவே தேவன் நம்மை அழைத்திருக்கிறர்.

எரிகோ மதிலை இடித்தால் தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த மதில் மிகவும் பெரிதான ஒரு மதில் ஒரே சமயம் ஆறு இரதங்கள் சேர்ந்து ஓடக்கூடிய அளவுக்கு அவ்வளவு பெரிதாகக் கட்டப்பட்ட மதில் இந்த மதிலை ஒருவன் கண்டால் அதை இடிக்க முடியும் என்ற தைரியம் அவனுக்கு உண்டாகாது என்னவென்றல் இந்த மதில்மேலே காவல்காரர்கள் இரவும் பகலும் ஜாக்கிரதையாய் காத்துக் கொண்டு இருக்கிறர்கள் சத்துருக்கள் தூரத்தில் வருவதைக்

கண்டால் உடனே மதிலின் மூலையில் நின்று கொண்டு அம்பு எய்து அவரைக் கொன்று போடுவார்கள் இப்படிப்பட்ட இந்த மதிலை எந்த சத்துருக்களாலும் இடிப்பதற்கு முடியவே முடியாது.

இத்தகைய எரிகோ மதிலை இடிப்பதற்காக தேவன் இஸ்ரவேலரை அங்கே அனுப்பினர். இந்த மதிலை இடிக்காவிட்டால் இஸ்ரவேலர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆசீர்வாதங்களுக்குத் தடை உண்டாகும் ஆகவே அதை இடித்துதான் ஆக வேண்டும். நம்முடைய ஜீவியத்திலும் நாம் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆசீர்வாதத்திற்குத் தடையாய் அநேக காரியங்கள் இருக்கலாம். நம்முடைய ஜீவியத்திலுள்ள எரிகோவைக் கண்டு தேவன் நம்மை ஒருக்காலும் ஆசீர்வதிக்க மாட்டார் என்று நாம் எண்ணக் கூடாது இந்த எரிகோ கோட்டை நம்முடைய ஜீவியத்தில் அவிசுவாசத்தையும் அவநம்பிக்கையையும் கொடுக்கின்ற சாத்தானுடைய கோட்டை என்பதை நாம் அறியவேண்டும். தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்ளுகின்ற இஸ்ரவேலருக்கு அவர்கள் பெற்றுக் கொள்ள பேசகின்றவற்றைப் பெருதபடிக்குத் தடை பண்ணவே இந்த எரிகோ கோட்டை இருந்தது. நாம் பெற்றுக் கொள்ள வேண்டிய வாக்குத்தத்தங்கள் உண்டு என்பது சாத்தானுக்குத் தெரியும் அவைகளைப் பெற்றுக் கொள்ளாதபடிக்கு நம்மைத் தடை பண்ணுவதே இந்த எரிகோ ஆகும். இந்த எரிகோவை இடிக்க வேணடுமென்பதே தேவனுடைய சித்தம். அதற்காய் தேவன். தம்முடைய தாசனாகிய யோசுவாவிற்கு அதிகாரம் கொடுத்து அனுப்பினர்.

தேவனால் அதிகாரம் கொடுத்து அனுப்பப்பட்ட இயேசுவோடு கூடப் போனால்தான் நம்முடைய எரிகோ மதிலை நாம் இடிக்க முடியும். அதை இடிப்பதற்கு இன்றும் இயேசு நம்மோடு இருக்கிறார் என்ற முழு நிச்சயம். முழு விசுவாசம் நம்முடைய உள்ளத்தில் இருக்க வேண்டும். ஆம்; கண்டிப்பால் அதை இடிக்க முடியும்.

எரிகோ மதிலை இடிக்கும் விதம் -

பயப்படாதே! கலங்காதே! (உபா. 1:21) தேவன் உன்னைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று விரும்புகின்றார், ஆனால் நீயோ பயப்படுகிறாய் பயப்படாதே என்று 365 தடவை வேதத்தில் கூறப்பட்டுளளது. ஒரு வருடத்திற்கு 365 நாள் இருக்கிறது. அதில் ஒவ்வொருநாளும் பயப்படாதே - பயப்படாதே என்று தேவன் கூறுகிறார் பயப்படுகிறவர்கள் யுத்தத்திற்குச் செல்லக் கூடாது (உபா. 20:8) என்னவென்றால் இவர்

களுடைய பயம் மற்றவர்களுக்குச் சோர்வைக் கொடுக்கின்றபடியால் அவர்கள் யுத்தத்திற்குப் போகக்கூடாது நாம் சத்துருவால் தோற்கடிக்கப் படுவதற்காக தேவன் நம்மை அழைக்கவில்லை. பாதாள வாசற்படிகள் நம்மை மேற்கொள்ளாது என்கிற வாக்குத்தத்தம் நமக்கு இருக்கிறபடியினால் நாம் ஏன் பயப்பட வேண்டும். (மத் 16:18) பயப்படுவது பாவம் என்று வேதம் சொல்லுகிறது. (நெகே. 6:13) பரிசுத்தவானாகிய யோபு பயத்தினால் வியாதியும் சாத்தானும் அவனை மேற்கொண்டது. (யோபு 3:25) இயேசு கடலின் மேல் நடக்கும் போது பேதுருவுக்கும், கடலின் மேல் நடக்க வேண்டும் என்ற ஆசை வந்தது. சற்று தூரம் நடந்தபின் அலைகளைக் கண்ட பேதுரு பயந்தார். (மத். 14:30,31) இப்படி நமக்கும் தேவவாக்குத்தத்தின் பிரகாரம் இறங்கினாலும் சிலவேளை பயம் உண்டாகலாம். அப்படி நாம் பயப்படுவோமானால் தேவனுடைய கிரியை நடக்க முடியாது. தேவனால் நம்மை உபயோகிக்கவும் முடியாது. என்னவென்றால் உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களோடு இருக்கிறேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினவர் நம்மோடிருக்கிறார். ஆகவே நாம் பயப்பட வேண்டிய அவசியம் கிடையவே கிடையாது.

6

வாக்குத்தத்தம்

உபா. 1:8

மனுஷன் ஒரு வாக்குத்தத்தம் கொடுத்தால் ஒருவேளை அதை நிறைவேற்றாமல் போகலாம் ஆனால் தேவன் அப்படிப்பட்டவர் அல்ல அவர் பொய்யுரையாத தேவன் ஆகையால் (எபி. 6:18) அவருடைய வாக்குத்தத்தத்தை நூற்றுக்கு நூறு அப்படியே நம்பலாம். அதுமட்டுமல்ல தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆமென் என்று இருக்கிறதென்றும் பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது. (2கொரி 1:20) தேவனுடைய தாசனாகிய சாலமோன் ஜெபம் பண்ணும்போது அவர் வாக்குத்தத்தம் பண்ணினவைகளையெல்லாம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலருக்குக் கொடுத்தார் என்று ஜெபம் பண்ணினார். என்னவென்றால் தேவன் இஸ்ரவேலருக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களையெல்லாம் அந்தப்படியே அவர் நிறைவேற்றினார். (1இரா. 8:56) என்னவென்றால் பொய் சொல்வதற்கு அவர் மனுதனல்ல சொல்லி விட்டு நிறைவேற்றாமல் அவரால் இருக்க முடியாது. (எண். 23:19) ஏன்? தம்முடைய வார்த்தையை தீவிரமாய் நிறைவேற்றுகின்ற தெய்வமே நம்முடைய தேவன். எரே. 1:12

நூறுவயதான ஆபிரகாமின் சரீரத்தில் உயிர் இருந்தாலும் ஒரு பிள்ளையை பிறப்பிக்கக்கூடிய பெலன் அவருக்கு இல்லை. அவருடைய 90 வயதான மனைவியாகிய சாராளுடைய கர்ப்பமும் செத்துப் போயிருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆபிரகாமுக்கு ஒரு பிள்ளை பிறக்கும் என்பது நம்ப முடியாத காரியம். ஆனால் ஆபிரகாம் சூழ்நிலையைப் பாராமல் தேவனுடைய வாக்குத்தத்தை மட்டும் நம்பினான் அதின் பலனாய் அவனுடைய செத்துப் போன சரீரம் உயிருள்ளதாயிற்று. அவனுக்குப் பிள்ளைகள் பிறந்தது. அவிசுவாசத்திற்கு இடங்கொடாமல் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்ற ஓரே நிச்சயத்துடன் அவர் தேவனை மகிமைப்படுத்தினது போல் நாமும் செய்ய வேண்டும். ரோ. 4:8-22

தேவன் உனக்கு அனேக வாக்குத்தத்தங்கள் கொடுத்திருக்கிறார். அந்த வாக்குத்தத்தங்களை விசுவாசித்து நாம் கண்டிப்பாய் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே, யோசுவா, எலியா, எலிசா, என்போருக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை தேவன் அப்படியே நிறைவேற்றினார் நான் உன்னை மனுஷரை பிடிக்கிரவனுக்குவேன் என்று பேதுருவுக்குக் கொடுக்க வாக்குத்தத்தையும் தேவன் அப்படியே நிறைவேற்றினார் பவுலுக்குக் கொடுத்த வாக்குத்தத்தையும் தேவன் நிறைவேற்றினார் உனக்குக் கொடுத்த வாகுத்தத்தை தேவனால் நிறைவேற்றக் கூடாதா? ஆம் கண்டிப்பாய் அவரால் நிறைவேற்றக் கூடும்.

அவருடைய வாக்குத்தத்தங்களை நம்பி நாம் எழுந்து தைரியத்துடன் எரிகோவை இடிப்போம். இதற்கு நாம் மூன்று காரியங்கள் செய்ய வேண்டும். 1. தேவன் நம்முடைய மத்தியில் இருக்க வேண்டும். யோசுவா உருவின பட்டயத்துடன் நிற்கிறவராகிய தேவனுடைய தூதனைவரைக் கண்டான் அவர் தூதனானவருடைய பாதத்தில் விழுந்து அடியானேடு உமக்குள்ள கட்டளை என்னஎன்று கேட்டார். எரிகோவை இடிப்பதற்கு தேவன் தம்முடைய தூதர்களை அனுப்பினார் என்கிற தைரியமும் விசுவாசமும் யோசுவாவிற்கு உண்டாயிற்று யோ 5:13-15

மூதாலம் நூற்றுண்டில் அப்போஸ்தலரோடுகூட கர்த்தர் இருந்தார். என்கிறதை அவர்கள் திட்டமாய் உணர்த்தப்பட்டனர் (மாற். 16:20) (அப். 4:30) அப்படியேநீகர்த்தர் நம்மோடிருக்கிறார் என்கிற ,முழு நிச்சயமும் முழு விசுவாசமும் நமக்குள் இருக்க வேண்டும். ஆம் முடியாத காரியத்தை முடிக்கிறவராகிய இயேசு நம்மோடிருக்கிறபடியால் நாம் எழுந்து நமக்கெதிராய்

நிற்கிற எரிகோமதிலே இடிப்போம். எசே 33:28 செப். 3:17 இந்த சேனையின் அதிபதியாகிய இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாருதவராகவே இருக்கிருர். எபி 13:8 ஆகையால் அவர் சொல்லுகிறதென்னவென்ருல் நான் உங்களைக் கைவிடுவது இல்லை விட்டு விலகுவதுமில்லை ஆம் யுத்த வீரரையும் ராஜாவை யும் சேனைத்தலைவர்களையும் எரிகோவையும் தேவன் நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்திருக்கிருர். (யோசு. 6:2)

ஆகையால் நாம்செய்ய வேண்டியது ஒரே ஒரு காரியம் மாத்திரம்தான். பாம்புகளையும் தேள்களையும் சத்துருவின் சகல பெலத்தையும் மிதிப்பதற்கு முழு அதிகாரம் நமக்கு கொடுக்கப் பட்டிருக்கிறபடியால் (லூக். 10:19) நாம் நம்முடைய விசு வாசத்தை கிரியை மூலமாய் செய்கை மூலமாய் வெளிப்படுத்து வோம். யோசுவாவும் கூடே உள்ளவர்களும் ஆட்டின் கொம்பினாலே ஆன எக்காளங்களைப் பிடித்துக் கொண்டு எரிகோமதிலே சுற்றி நடந்தார்கள். இப்படி தினமும் ஒருமுறை அவர்கள் செய்தார்கள் உடன்படிக்கை பெட்டியை சுமந்து கொண்டு ஆறு நாட்கள் அவர் கள் நடந்த பிறகு ஏழாம் நாளில் ஏழுமுறை நடந்தார்கள். அதற்குப்பிறகு அவர்கள் ஆர்ப்பரித்தார்கள் உடனே அலங்கம் இடிந்து விழுந்தது. அவர்கள் பட்டணத்தைப் பிடித்தார்கள். இப்படி நாமும் உடன்படிக்கை பெட்டியாகிய கிறிஸ்துவோடுகூட ஜெயத்தின் எக்காளத்துடன் வசனத்துடன் புறப்பட்டால் சாத் தானை ஜெயிப்பது மிகவும் எளிதான காரியம். யோசு. 6:12-20

யோசுவா வேவுகாரர்களை அனுப்பும்போது அவர்களை சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டவர்களாகிய ராகாபையும் அவள் குடும்பத்தையும் அவர்கள் இரட்சித்தார்கள். யோசு. 6:22,23.

7

ஏழு ஜாதிகள்

கடைசியாய் இஸ்ரவேலர் செய்ய வேண்டிய முக்கியமான வேறெருவேலையும் உண்டு என்னவென்ருல் எத்தனையோ காலங் களாய் கானானில் குடியிருக்கிறவர்களாகிய சில ஜாதிகள் உண்டு அவர்களை கண்டிப்பாய் அழித்துதான் ஆகவேண்டும். அவர்களை அழிக்காமல் இஸ்ரவேலர்களுக்கு அங்கே தங்கமுடியாது.

நம்முடைய ஜீவியத்தில் நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நம்மில் குடியிருக்கிற சில பாவங்கள் உண்டு. இந்தப்பாவங்களாகிய ஜாதிகளை பரிபூரணமாய் நாம் அழிக்கவேண்டும். அந்தப் பாவங்களை அழிக்காவிட்டால் நாம் அழிந்து போவதற்கு அது காரணமாகும்.

ஏழு ஜாதிகளும் ஏழுவிதமான பாவத்தைக் காட்டுகிறது. ஆகையால் இந்த ஏழு ஜாதிகளையும் நிர்மூலமாக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டார். யோசு. 3:10 உபா. 7:1 அப். 13:19 உதாரணமாக பெலிஸ்தியர். ஈசாக்கு விதைக்கும் பொழுது தேவன் அவரை ஆசீர்வதித்தார். அதைக்கண்டபோது பெலிஸதியருக்கு ஈசாக்கோடு பொறுமை உண்டாயிற்று. ஆதி. 26:11 பெலிஸ்தியர் என்பது பொறுமைக்கு ஒப்பாயிருக்கிறது. அதுபோல கானானிலுள்ள ஒவ்வொரு ஜாதியையும் குறித்து சிந்திப்போம்.

1 கானானியர் :

இவர்கள் காமினுடைய சந்ததிகள் ஆதி 9:18 நோவா திராட்சைரசம் குடித்து வெறியுண்டாகிப்படுத்தார். கானானுடைய தகப்பனாகிய காம் இதைக்கண்டதும் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் குறித்து மற்றுள்ளோருடன் போய் சொல்ல உடனே நோவாவுடைய மற்ற மக்கள் வஸ்திரத்தை எடுத்து தங்கள் முகத்தை மறைத்துக் கொண்டு தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள். நோவா எழுந்தபிறகு இந்த சம்பவத்தைக் குறித்துக் கேட்டார். தகப்பன் உடனே கானானுக்கு சாபத்தை கொடுத்தார், ஆதி. 9:18-27.

நம்முடைய ஆவிக்குரிய தகப்பன்மாரிடம் ஏதாவது குற்றங்கள் இருக்குமானால் அவைகளைக்குறித்து நாம் சொல்லவேண்டாம் அது நமக்கு சாபத்தை வருவிக்கும். அப்போஸ்தலனாகிய பேதுரு ஜாதி வித்தியாசத்தைக் காட்டினார் ஆனால் விசுவாசிகள் ஒருவரும் அதைக் குறித்து ஒன்றுமே பேசவில்லை. பவுல்தான் அவரைக் கண்டித்தது கலா. 2:11-15 கானானியர் தேவஊழியக்காரருடைய குற்றங்களைக் கண்டுபிடித்து அவைகளை வெளிப்படுத்தி சாபம் வாங்குகிற விசுவாசிகளுக்கு ஒப்பானவர்.

ஆம் விசுவாசியே, தேவஊழியர்களை குற்றம் கண்டுபிடிக்கின்ற வேலை உனக்கு வேண்டாம்.

2 ஏத்தியர்

இவர்களும் கானனுடைய சந்ததியார். ஆதி 10:15 ஆனல் இவரிடம் சில நன்மைகளுண்டு. ஆபிரகாமுடைய மனைவி சாராள் மரித்தவுடனே அவளை அடக்கம் பண்ணுவதற்கு ஆபிரகாம் இவர்களிடம் இடத்தைக் கேட்டார். அவர்கள் தேவனுடைய மனுஷனுகிய ஆபிரகாமிற்கு மிகவும் மரியாதையுடனும் அன்புடனும் இடம் கொடுத்தார்கள். ஆதி. 23:7-20 சில பாவங்கள் நமது பார்வைக்கு நன்மையாய்த் தோன்றலாம் ஆனல் பாவம் பாவந்தான். ஆகையால் அவற்றை அழித்துதான் ஆகவேண்டும்.

3 ஏவியர்

ஆதி 10:15 யோசு. 11:3 நியா. 3:3 இவர்களும் காளனுடைய சந்ததியார்.

4 பெரிசியர்

ஆதி. 34:30 யோசு. 17:15 இவர்கள் ராட்சஷ சந்ததிகள். நாம் பார்ப்போமானல் பயப்படத்தக்க நிலையில் மிகவும் உயரமும் பெலமும் உள்ளவர்கள். இது பெருமையைக் காட்டுகின்றது. கோலியாத் இப்படிப்பட்டவனுயிருந்தபடியால் அவனுடைய சரீர பெலத்திலும் சாமர்த்தியத்திலும் அவனுக்கு பெருமை உண்டாயிற்று நம்மிலுள்ள பெருமையை நாம் நிர்மூலமாக்க வேண்டும்.

5 கிர்கேஸியர்

(ஆதி. 10:17 உபா. 7:1 யோசு. 24:11) இவர்களும் கானனிய சந்ததியார். சாபத்தைக் காட்டுகிறவர்கள்.

6 அமோரிடர்

(ஆதி. 10:16) இவர்களும் கானனிய சந்ததியார். சபிக்கப் பட்டவர்கள்.

7 எபூசியர்

யோசு. 3:10 உபா. 7.1 2 சாமு, 5:6-9 இவர்கள் பெருமைக்கு அடையாளமாக இருக்கிறார்கள்.

அமலேக்கு

ஏசாவினுடைய சந்ததியார். ஆதி. 36:12 ஏசா தன்னுடைய ஆசீர்வாதத்தை மாமிசத்திற்கா (ஆகாரத்திற்காக) நஷ்டப்படுத்தினர். ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைப் பார்க்கிலும் உலக நன்மையை விரும்புகிறவர்களுக்கு ஏசா ஒரு நிழலாயிருக்கிறார். ஆதி 28:30-34 பசிதாங்க முடியாமல்தான் ஏசாவும் தன்னுடைய

சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுவிட்டாரென்று சாக்கு போக்குச் சொல்லலாம். ஆனால் கர்த்தருடைய சன்னதியில் அது தவறு. நம்மைப் படைத்தவராகிய தேவன் நமக்குத் தேவையான உணவைத் தருவேன் என்று வாக்குத்தத்தம் தந்திருக்கிறார் மத். 6:25-34 ஆனால் இவனோ தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்பாமல் யாக்கோபிடம் ஆகாரத்தை வாங்கிப் புசித்து தேவ ஆசீர்வாதமாகிய சேஷ்டபுத்திர சுவீகாரத்தை நஷ்டப் படுத்தினான். நாம் என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்று கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. அவர் நம்மை விசாரிக்கிறவர். எபி. 12:16-17 மாமிச இச்சைக்காய் ஆசீர்வாதத்தை இவன் நஷ்டப்படுத்தினபடியால் மாமிசத்திற்கு நிழலாயிருக்கிறார் மாமிசம் ஆவிக்கும் ஆவி மாமிசத்திற்கும் எப்போதும் விரோதமாயிருக்கிறது கலா.5:16-24 இப்படிப்பட்ட ஏசாவினுடைய சந்ததியில் பிறந்தவனாகிய அமலேக்கு தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாய் எழும்புகிற மாம்சகுணம் என்பதைக்குறித்து நாம் கற்றுக் கொண்டோம் அடுத்ததாக அமலேக்கைக் குறித்து வேறு சில காரியங்களை சிந்திப்போம்.

தேவனுடைய ஜனத்துடன் சண்டை போடுகிறவனாய் நாம் இவனைக் காண்கிறோம். யாத். 17:816 உபா. 25:17-19 இஸ்ரவேல் ஜனம் வனாந்திர பிரயாணத்தில் எகிப்தியில் வந்த போது அமலேக்கு அவர்களோடு யுத்தத்திற்கு வந்தான் அவன் யாரோடு யுத்தம் செய்தான் என்பதை முதலாவது யோசிப்போம். உபா. 25:17,18

இவன் தெய்வபயம் இல்லாதவன். விசுவாசிகளில் சிலர் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றாலும் சரியான முறையில் தெய்வபயம் இல்லாதவர்களாய்க் காண்கிறோம், யோசேப்பினுடைய ஜீவியத்தில் நான் தேவனுக்குப் பயப்படுகிறேன். என்று யோசேப்பு அடிக்கடி சொல்லுவார் நம்முடைய ஜீவியத்திலும் இது மிகவும் அவசியம். தேவனுடைய வசனத்தை சிலர் விளையாட்டாய் பேசுகிறதைக் கேட்கலாம் இது தெய்வபயம் இல்லாததற்கு அடையாளமாகும். நாம் தேவனுக்குப் பயப்படுகிறவர்களாய் இருப்போமானால் தேவனுடைய ஊழியருக்கு விரோதமாய் பேச மாட்டார்கள்.

சோர்ந்து போனவர்களை அவன் தொந்தரவு செய்தான் நாம் ஆவிக்குரிய சோர்வு உடையவர்களானால் சாத்தான் கண்டிப்பாக நம்மை விழத்தள்ளுவதற்காக சமீபிப்பான். ஒரு விசுவாசி எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறான் என்பது சாத்தானுக்குத் தெரியும். ஆகையால் அதற்குத்தக்க விதமாக சாத்தான் விசுவாசி

யிடம் சமீபிப்பான் எபி. 12:3 ஆகையால் நாம் சோர்ந்து போகாமல் நமது ஜீவியத்தில் எல்லா பிரச்சனைகளிலும் நாம் அவரை மாத்திரமே நம்பி அவரோடு இசைந்திருப்போமானல் சோர்ந்து போகாமல் இருக்க முடியும்.

பெலவீனம் சரீரத்திற்குத் தேவையான ஆகாரத்தைக் சாப்பிடாமல் போவேமானல் சரீரத்தில் பெலவீன முண்டாவதுபோல் ஆவிக்கேற்ற ஆகாரம் இல்லாமல் போனல் விசுவாசிகளுக்குள் ஆவிக்குரிய சோர்வு உண்டாகும். இப்படி சோர்வுற்ற நிலேயில் நாம் இருந்தால் திடீரென்று சாத்தான் நம்மை தோற்கடிப்பான். ஆகையால் எல்லா பெலவீனங்களேயும் விட்டு நாம் தேற்றப்பட வேண்டும். எபி. 5:11-14 எபி. 12.3 1 தெச 5:14 1கொரி 8:8-13

பின்னணியில் நின்றவர்களே அமலேக்கியர் கொன்று போட்டார்கள். கிறிஸ்தவ ஜீவியத்தில் நாம் முன்னேறிப்போக வேண்டுமென்றும் நாளுக்கு நாள் பெலப்பட வேண்டுமென்றும் உற்சாகத்துடன் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்றும் தேவன் விரும்புகிருர் நாம் சோர்வுற்றவர்களாய் பின்னணியில் நின்றல் சாத்தான் நம்மை தோற்கடிப்பான் என்பதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லே ஆகையால் நாம் பின்னணியத்தில் நிற்காமல் முன்னணியத்தில் நிற்க வேண்டும். 2 சாமு 12:11.

கீழ்ப்படியாதவர்கள் இஸ்ரவேலர்களே தேவன் வனந்தரத்தில் வழி நடத்தும்போது அவர்கள் கீழ்ப்படியாமற்போன படியால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானனில் பிரவேசிக்க மாட்டார்கள் என்று தேவன் கட்டளேயிட்டார். ஆனலும் ஒருசிலர் மோசேயிடம் மறுதலித்து நாங்கள் கானனுக்குப் போவோம் என்று சொல்லி மலேயில் ஏறினர்கள். அமலேக்கியரும் கானனியரும் மலேயிலிருந்து இறங்கி வந்து அவர்களே நிர்முலமாக்கி விரட்டினர்கள். நாம தேவனுக்கும் தேவஊழியர்களுக்கும் கீழ்ப்படியாமல் நம்முடைய மனம்போன போக்கில் போவோமானல் சாத்தான் நம்மை தோற்கடிப்பான் என்பதில் சந்தேகமில்லே. நாம் போகவேண்டிய வழியில் நம்மை நடத்துவதற்காக தேவன் தம்முடைய ஊழியர்களே வைத்திருக்கிருர். நாம் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து இருப்போமானல் சாத்தான் நம்மை தோற்கடிக்க முடியாது. எபி. 13:17.

இந்த அமலேக்கியர் இஸ்ரவேலரோடு இப்படி நடந்து கொண்டபடியால் அவர்கள் வானத்தின் கீழ் இருக்கலாகாது என்று அவர்களே அழிக்க தேவன் கட்டளேயிட்டார். யாத். 17:14 சாமு. 15:1-3, 13, 14, 18-20, 32, 33.

இஸ்ரவேலருக்கு விரோதமாய் அமலேக்கு யுத்தத்திற்கு வரும்போது மோசே தேவனுடைய கோலை எடுத்துக் கொண்டு மலையின் மேல் ஏறினர். இஸ்ரவேலர் அமலேக்கியரோடு யுத்தம் பண்ணுகையில் மோசே தேவனுக்கு நேராய் அவருடைய கரங்களை உயர்த்தினர் அப்படி உயர்த்தப்பட்ட கரமாய் மோசே இருந்த படியால் அமலேக்கு தோல்வி அடைந்து கொண்டே இருந்தான் மோசே கரங்களை கீழே போடும்போது இஸ்ரவேலருக்கு தோல்வி யும் அமலேக்கிற்கு வெற்றியும் உண்டாகும் மோசேயின் கரம் சோர்ந்து போனபடியால் யோசுவா ஒரு கல்லை எடுத்து மோசேயை அதில் உட்கார வைத்தான் இரண்டுபேர்கள் மோசேயின் இரண்டு பக்கத்தில் நின்றுகொண்டு மோசேயின் கரங்களை தாங்கினர்கள். அப்படியாக இஸ்ரவேலருக்கு வெற்றி உண்டாயிற்று.

மோசே மனிதனுகையால் கரங்களில் சோர்வு உண்டா கலாம் ஆனல் பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் நமக் காக உயர்ந்திருக்கின்ற இயேசு கிறிஸ்துவின் கரங்கள் எவ்வித காரணத்தாலும் ஒருகாலும் சோர்ந்து போகாது. தேவனுடைய பிள்ளையே நீ மனுஷ கரங்களை நம்பாதே அவைகளெல்லாம் சோர்ந்து போகலாம். ஆனல் இயேசுவின் கரம் ஒருக்காலமும் சோர்ந்து போகாது இஸ்ரவேலர் அமலேக்கியரை முறிய அடித் தார்கள். தேவன் தம்முடைய தாசனுகிய சவுல் ராஜாவோடே அமலேக்கியரையும் அவர்களுடை ய ஆடு மாடுகளையும் அழித்துப் போடு என்று சொன்னர். ஆனல் சவுல் அப்படிச் செய்யாமல் ஆடு மாடுகளையும் அமலேக்கியருடைய இராஜாவாகிய ஆகாகையும் அழித்துப் போடாமல் உயிருடன் கொண்டு வந்தார். தேவனுக்கு அது மிகுந்த வேதனையை உண்டுபண்ணிற்று. இதினிமித்தம் தேவன் அவனைத் தண்டித்தார் அமலேக்காகிய மாமிச சுபாவம் நமக்குள்ளே கொஞ்சமும் இருக்கக்கூடாது என்று தேவன் விரும்பு கிறர் (1 சாமு. 15:1-3, 7-33) அமலேக்கியருடைய சுபாவத் தைக் குறித்து நாம் நன்ருகக் கற்றுக் கொண்டோம்.

கிபியோனியர் (யோசு 9:3-7, 13-15)

இவர்கள் தந்திர சுபாவம் உள்ளவர்கள். தேவனுடைய தாசனுகிய யோசுவாவை தேவன் உபயோகிக்கிறதையும் இவரைக் கொண்டு புறஜாதிகளை அழிக்கிறதையும் குறித்து கிபியோனியர் கேள்விப் பட்டார்கள் தங்களுக்கு விடுதலை கிடைக்கும்படி அவர் கள் தந்திரத்துடன் யோசுவாவிடம் சென்ருர்கள் நாங்கள் தூர தேசத்திலிருந்து புறப்பட்டவர்கள் என்றும் நாங்கள் புறப்படும் போது எங்களுடைய பாதரட்சையும் வஸ்திரமும் புதிதாயிருந்தது என்றும் நாங்கள் வரும்போது சூடான அப்பங்களைக் கொண்டு வந் தோம் என்றும் சொன்ருர்கள். இப்போது அவைகளெல்லாம் பழமையாயிற்று என்றும் நாங்கள் உங்களைக் குறித்து கேள்விப்

பட்டபடியால் உங்களைப் பார்க்க வந்தோம் என்றும் அவர்கள் சொன்னார்கள். இதைக் கேட்டவுடன் சாத்தானுடைய தந்திரத்தை பகுத்தறியாமல் இஸ்ரவேலர்கள் ஏமாந்து போனார்கள். அவர்களோடு உடன்படிக்கை செய்யலாகாது என்ற தேவனுடைய கட்டளையை (யாத். 23:31-33) நினையாமல் உடன்படிக்கை பண்ணினார்கள். அவர்களுடைய ஆகாரத்தை வாங்கி இவர்கள் புசிக்கவும் செய்தார்கள். (யோசு. 9;3-15) இது விசுவாசிகளிடம் இருக்கின்ற தந்திர சுபாவத்தைக் காண்பிக்கின்றது நாம் ஆசீர்வாதம் பெற வேண்டுமானால் தந்திர சுபாவத்தை பரிபூரணமாய் விட்டுவிட வேண்டும். தந்திரம் பிசாசிற்குரியது என்று வேதம் கூறுகிறது. (2கொரி. 2:11 2கொரி. 11:3)

இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் தங்களுக்குச் சுதந்திரமாகக் கொடுத்த கானான் தேசத்திற்குப் போய்ச் சேர்ந்தவுடன் மேலே சொல்லப்பட்டபடி அங்கே குடியிருந்த அந்த ஏழு ஜாதிகளையும் முற்றிலுமாக அழித்து நிர்மூலமாக்க வேண்டும் என்பது தேவனுடைய மிக உறுதியான கட்டளை (யாத். 34:11-16 எண். 33:55,56 யோசு. 23:11-13 நியா. 2:2,3 — Eng & Mal) ஏனெனில் அந்த ஏழு ஜாதிகளும் அசுத்தமும், அக்கிரமமும், அருவருப்பும் நிறைந்தவர்கள். (லேவி. 18:24-30) ஆனால் கானானில் குடியேறிய இஸ்ரவேலரோ அவர்களை முற்றிலும் அழிக்கவில்லை. பலவிதமான சாக்குப்போக்குச் சொல்லி அவர்களை முற்றிலுமாக அழிக்காமல் விட்டு விட்டார்கள். அதனால் தேவன் சொன்னபடியே அந்த ஜாதிகள் அவர்களுக்குக் கண்ணிகளும் முள்ளுகளுமானார்கள் (நியா 2:11,12) தேவனுடைய கடும் தண்டனை இஸ்ரவேலர்மேல் வந்தது பிற்காலத்திலும் அமலேக்கு ஜாதியை, அதைச் சேர்ந்த மனுஷரை மாத்திரமல்ல, எல்லா மிருக ஜீவனகளையும் கூட அழிக்க வேண்டும் என்று சாமுவேல் தீர்க்கதரிசி மூலமாய் சவுல்ராஜாவுக்கு தேவ கட்டளை உண்டாயிற்று ஆனால் சவுல் அமலேக்கில் எல்லா ஜனங்களையும் அழித்தாலும் அதின் ராஜாவாகிய ஆகாகையும், மிருக ஜீவன்களில் நலமானவற்றையும் அழிக்காமல் உயிரோடே வைத்தான். இது கர்த்தருக்கு மிகவும் விசனமான காரியமாயிற்று சவுல் தான் செய்த காரியத்துக்கு ஒரு சாக்குப் போக்கும் சொல்லுகிறான். கர்த்தருக்குப் பலியிடவேதான் மிருக ஜீவன்களை உயிரோடே வைத்ததாகச் சொல்லுகிறான் அதின் விளைவு! தேவ தண்டனை உண்டாயிற்று சவுல் தேவன் தனக்குக் கொடுத்திருந்த ராஜ்யபாரத்தை இழந்தான். (1 சாமு. 15ம் அதி)

அப்படியே இரட்சிக்கப்பட்ட விசுவாசியொருவனில் அறிக்கை செய்து விட்டுவிடாத ஒரு பாவம் போலும் இருக்கக் கூடாது. பாவத்தை நாம் விட்டாலும் அதின் ஆசை நம்மோடு தான் ஆமாம், வெளியேற்றப்பட்டாலும் பாவம் எப்போதும்

வாசற்படியில் படுத்திருக்கும் (ஆதி 4:7) நாம் சந்தர்ப்பம் அளித்தால் அது உள்ளே ஏறிவரும் பின்பு அது கண்ணியாக மாறி ஜீவியத்தைப் பாழாக்கி நித்திய ஜீவனை (கானானை) இழக்கச் செய்யும் அதனால்தான் பவுல் எபிரேய விசுவாசிகளுக்கு "தேவ கிருபையை இழந்துபோய் யாதொரு கசப்பான வேராகிய பாவம் உங்களில் முளைத்தெழும்பாதபடிக்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்று புத்தி சொல்லுகிறார் (எபி. 12:15) மரம் வெட்டப்பட்டாலும் வேர் இருக்குமானால் திரும்பவும் முளைக்க வழியுண்டு. பல் பிடுங்கப்படும்போது சுத்தமாக எடுக்கப்பட வேண்டும். எதாகிலும் ஒரு சிறு பாகம் போலும் எடுக்கும்போது விடுபட்டு உள்ளே தங்கி விட்டால் அது உடனே அல்ல கொஞ்ச நாள் கழித்து பெரும் தொந்திரவைக் கொடுக்கும் கிதியோன் தேவனுக்காகப் பராக்கிரமம் செய்தவன் ஒரு ஏபோத்தை உண்டு பண்ண வேண்டுமென்றுதான் பொன்னாபரணங்களை இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் கேட்டு வாங்கினான் இது அவனுடைய பொருளாசையின் அடிப்படையில் எழுந்த எண்ணம். சாக்குபோக்கே சவுல் சொல்லியது போல தேவநாம மகிமைக்காக ஆனால் அது பெருங் கண்ணியாக மாறிற்று.

தேவனே எதையுமே பூரணமாகச் செய்பவர் அவர் அழிப்பது வேரோடே (மல். 4:1) "என் பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்" என்று இயேசுவும் சொன்னார் ஆகவே நம்மைப் பரிபூரண பரிசுத்தத்தில் நிறுத்தவல்ல முற்றிலுமாகப் பாவமில்லாத படி நமமைக் காத்துக் கொள்ளக் கூடிய தேவ கிருபைக்கு நம்மை முழுவதும் ஒப்புக் கொடுப்போமாக.

தேவன் நம்முடைய பிதா

இஸ்ரவேல் ஜனம் பாவம் செய்தாலும் பாவம் செய்த மற்ற ஜாதிகளை அழித்தது போலத் தேவன் அவர்களை அழிக்கவில்லை ஏனெனில் அவர்கள் அவருடைய சொந்த ஜனம் அதற்காக அவர்களைச் சும்மா விடவும் இல்லை அப்பா. இஸ்ரவேல1 (யூதர்) தேவ கோபத்தினால் பட்டிருக்கிற அடிக்குக் கணக்கேயில்லை தண்டனையினால் அவர்களைப் பரிசுத்தப்படுத்தித் திரும்பவும் அவர்களைச் சேர்த்துக் கொள்வார். தேவனுடைய கோபத்திலே தேவனுடைய மகா பெரிய புத்திக்கெட்டாத அன்பும் வெளிப்படுகிறது கடும் தேவ கோபத்துக்குள்ளான யூதர்கள் இன்று ஒரு நாடாக உலக அரங்கத்தில் பரிமளிக்கிறார்கள் ஒரு பலமுள்ள செழிப்பான நாடாக அவர்கள் திகழ்கிறார்கள் அப்படியே ஆவிக்குரிய இஸ்ரவேலாகிய விசுவாசியும் தவறு செய்யும் போது தேவன் அவனைத் தண்டனையின் மூலம் பரிசுத்தப் படுத்துகிறார் ஆமாம் தாம் நேசிக்கிற பிள்ளைகளைத் தகப்பனைப்போல அவர் சிட்சிக்கிறார் (எபி. 12:5-13, புலம் 3:32,33, எரே. 31:20) அப்படி அவர் சிட்சிக்காவிட்டால் நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையில்லாமல் அழிந்து

போலவே. நாம் நிலைநிற்கிறது நம்முடைய சாமர்த்தியம் கொண்டு அல்ல அது அவருடைய சுத்தக் கிருபை

இஸ்ரவேல்ஜனம் அல்லது யூதஜாதி உலகெங்கும் சிதறடிக்கப்பட்டு இனி அவர்களுக்கு ஒரு நம்பிக்கையும் இல்லை என்று சாத்தானும் உலகமும் நினைத்துக் கொண்டிருந்த வேளையில் தேவன் அவர்களைத் திரும்பவும் கூட்டிச் சேர்த்து நாடாக்கியது போல இயேசு உயிர்த்தெழுந்து மகிமைப்பட்டபின்பு உண்டான தேவனுடைய சபை அவருடைய வசனத்தின்படி சத்திய உபதேசத்தில் நின்று ஜீவனோடும் வல்லமையோடும் இருந்த சபை, மூன்றாம் நூற்றாண்டுக்குப்பின் அழிந்தது என்று சாத்தானும் அவன் கூட்டத்தாரும் நினைத்துக் கொண்டிருக்கையில் இன்று பரிசுத்த ஆவியானவருடைய பின்மாரி எங்கும் ஊற்றப்பட்டு தேவனுடைய சபை முதலாம் நூற்றாண்டில் எப்படி இருந்ததோ அப்படியே எழுப்புதலோடும் தேவனுடைய பலத்த கிரியைகளோடும் புது ஜீவனோடு மிளிர்கிறது.

இஸ்ரவேல் ஜனங்களுடைய காரியங்களின் குழப்படிக்கு ஆரம்பத்தில் சொல்லப்படும் ஒரு காரணம் அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை. அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானபடி செய்து வந்தான் (நியா. 21:25) இது மிக முக்கியமான விஷயம் ஜனங்களை சரியானபடி நடத்துவதற்கு ஒரு ராஜா வேண்டும். ஒவ்வொருவனும் தன்தன் மனம் போனபடி நடந்தால் அந்த நாடு எப்படியிருக்கும் என்பதை கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனத்தை நடத்த அவர்கள் இப்படிச் செய்ய வேண்டும் என்று அவர்களுக்குச் சொல்ல இப்படித் தேவனை ஆராதிக்க வேண்டும் என்று தேவனுடைய சித்தத்தை அவர்களுக்கு வெளிப்படுத்த ஒரு மோசேயைத் தலைவனாக அவர்களுக்குக் கொடுத்தார். அவனுக்குப்பின் யோசுவாவை எழுப்பினார். ஆதித்திருச்சபையை நடத்த அப்போஸ்தலரைக் கொடுத்து அவர்கள் மூலம் உபதேசத்தை அளித்தார் தேவன். இஸ்ரவேலில் ராஜாக்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள், ஆசாரியர்கள் தேவனால் நியமிக்கப்பட்டவர்கள் அப்போஸ்தலர்கள், தேவனால் அழைக்கப்பட்டவர்கள். மனுஷரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல இதை பவுல் மிக அழுத்தமாகத் தமது நிருபங்களில் சொல்லுகிறார். சபை நாலாம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் சக்கரவர்த்தி காலத்தில் அரசாங்க மதமானபோது தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரர் (ராஜா) இல்லாமற் போனதினால் (தன்தன் பார்வைக்குச் சரிபோனபடியுள்ள) அநேக துர் உபதேசங்களும் சடங்காச்சாரங்களும் சபையில் நுழைந்தன இன்றோ தேவன் தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டு அழைத்த ஊழியக்காரரைத் தம்முடைய மகிமையான ஊழியத்தில் வைத்திருக்கிறார் அப்படிப்பட்ட சபையில் சேர்ந்து உங்கள் இரட்சிப்பை காத்துக் கொள்ளத் தேவன் தாமே கிருபை செய்வாராக.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வாரத்தில்

வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில்

உபவாச ஜெபமும்,

முடிவில் ஆராதனையும் உண்டு.

அநேக வியாதியஸ்தர் பிசாசு பிடித்தோர், செய்வினை

களினால் கஷ்டப்படுவோர், மனப்பாரம், கடன்பாரம்

இவைகளால் வருத்தப்படுவோர் வந்து

ஜெபித்து விடுதலை பெற்றது உண்டு.

இப்படிப்பட்ட விசேஷ ஜெபத்தில் பங்குபெறும்

அவசியமுள்ளவர் வாருங்கள்.

கர்த்தர் விடுதலை கொடுப்பார்.

விற்பனைக்குள்ள புத்தகங்கள்

1 ■	அஸ்திவார உபதேசங்கள்	3 ரூ
2 ■	லேவியராகம வியாக்கியானம்	3 ரூ
3 ■	இயேசுவின் வருகை	3 ரூ
4 ■	சாத்தான்	4 ரூ
5 ■	எகிப்திலிருந்து கானான்	5 ரூ

தேவைப்பட்டால் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள்.

Rev. **K. J. Abraham**
Srivaikuntam. P.O. 628601

டீலக்ஸ், நெல்லை-6.